www.padippakam.com


# தொழிலாளர் பாதை




இஸ்ரேலியப் பிரதமர் ரபினினது கெ
மத்தியகிழக்கின்
அரசியல்
மாயைகளுக்கு வெடி
வைக்கின்றது.
பக்கம் 5

தொகுப்பு இல 15 16.1.1996 புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் பத்திரிகை DM 2

# இலங்கையில் இனவாத யுத்தத்தை நிறுத்துவது தொழிலாளவர்க்கத்தின் தலையீட்டில் தங்கியிருக்கின்றது.

இலங்கைத் தீவில் தமிழ்மக்கள் மீதான இனவாத யுத்தம் பொதுஜனமுன்னணி அரசாங்கத்தினால் முன்னெப்பொழுதும் இல்லாதளவிற்கு மும்மரப்படுத்தப்பட்டுள்ளது.

உலக ஏகாதிபத்திய நாடுகளின் பூரண அங்கீகாரத்துடன் முதலாளித்துவ நலன்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள இந்த யுத்தம் யாழ்ப்பா குடாநாட்டின் நூற்றுக்கணக்கான மக்களை இதுவரை பலியெடுத்ததுடன் 500,000ற்கு மேற்பட்டோரை அகதிகளாக்கியுள்ளது.

இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பின் கீழ் தமிழ்மக்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார மையங்களில் ஒன்றான யாழ்ப்பாண நகரம் பாரிய பேரழிவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. ஐப்பசி மாதத்தின் இறுதியிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இந்த இராணுவ ஆக்கிரமிப்பின் உண்மையான அழிவுகள் அரசினால் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போட்டதின் மூலம் மூடிமறைக்கப்பட்டிருக்கின்றது.குடாநாடு, வெளிநாட்டுப் பத்திரிகையாளருக்கு தடைசெய்யப்பட்ட பிரதேசமாக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசின் இந்த இனவாத யுத்தத்தின் ஒரு பகுதியாக தமிழ் அகதிகளுக்கு உதவி செய்துவந்த உள்நாட்டு, வெளிநாட்டு ஸ்தாபனங்கள் சுயாதீனமாக வேலைசெய்வதற்கு அனுமதிமறுக்கப் பட்டிருக்கின்றது. உணவுப்பற்றாக்குறை, மருத்துவவசதிகளின் தட்டுப்பாடு, சுகாதாரவசதிகளின் சீர்கேடு என்பவையால் அகதிகள் முகாம்களில் தொற்றுநோய் பரவுவதற்கு ஆரம்பித்துள்ளது.

நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவும், அதனது பிரிவுகளும் இந்த இனவாதயுத்தத்தினை வன்மையாகக் கண்டிப்பதுடன் தமிழ்மக்களின் ஜனநாயகஉரிமைகளைப் பாதுகாப்பது தொழிலாளர்வர்க்கத்தின் மூலோபாயமான பணி என வலியுறுத்துகின்றன.

புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகம் இந்த யுத்தத்திற்கெதிரான அரசியல் வேலைகளை விரைவுபடுத்தியுள்ளது. இனவாத மக்கள்முன்னணி அரசினை தூக்கியெறிந்து, தீவில் முதலாளித்துவ ஆட்சிமுறைக்கு முடிவுகட்டுவதனால் மட்டும்தான் இந்தப் போரினை முடிவிற்கு கொண்டுவரமுடியும். இது தமிழ், சிங்கள, தொழிலாளர்களின் ஐக்கியத்தினால் மட்டுமே சாத்தியமாகக்கூடியது. இந்த அரசியல் நோக்கத்திற்காகத்தான் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் காரியாளர்கள் தொழிலாளர்வர்க்கத்தினுள் தலையிட்டுள்ளனர்.

இந்த யுத்தம் சிறீலங்கா அரசினால் சர்வதேசரீதியாகப் பிரச்சாரம் செய்யப்படுவதுபோல் கடந்த சித்திரை மாதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிக் கொண்டதால் உருவாக்கப்பட்டது ஒன்றல்ல. இது இலங்கையின் தேசிய முதலாளித்துவம் பிரித்த
ஏகாதிபத்தியத்திடமிருந்து அரசியல் அதிகா
1948ல் பெற்றுக்கொண்டதிலிருந்து திட்ட
ரீதியில் தமிழ்மக்களின் ஜனநாயக உரிமைக
மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்
உச்சக்கட்டமாகும். இனவழிப்பு யுத்தத்
தமிழ்மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்ட
நேரத்தில் மக்கள்முன்னணி அரசாங்கம
தென்னிலங்கையில் தொழிலாளர், ஒடுக்க
மக்களின் மேல் தனது தாக்கு
தீவிரமாக்கியுள்ளது. இந்த இன
புகைமண்டலத்தினுள் அரசாங்கம் அத்திய
உணவுப்பொருட்களின் விலைகளை அதிகரி
பத்து லட்சம் தொழிலாளர்களை நேரடி
பாதிக்கும் வகையில் தேயிலைத் தோட்டங்
தனியாருக்கு விற்றுத் தள்ளுவதற்கு புர
மாதத்திலிருந்து நடவடிக்கை
மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1962ம் ஆண்டில் தேசியமயமாக்கப்
எண்ணெய் நிறுவனமான செல் (Shell) கார்த்
மாதத்தில் கொழும்பு எரிவாயு நிறுவனத்தினை
கோடி ரூபாய்களுக்கு கொள்வனவு செய்தவண
இலங்கையில் திரும்பவும் காலடி வைத்துள
தொலைபேசி கூட்டுத்தாபனத்தை முழுமையா
அல்லது அரைவாசியாகவோ மார்கழி மாத
தனியார்மயமாக்குவதற்கு நடவடிக
மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளினால் தெ
வாழ்க்கைத்தரம், நலன்புரிசேவைகள், சமூகசே
வெட்டு ஆகியவற்றினால் பெருமளவில் பாதிக்க
தொழிலாள, விவசாயிகளை நாட்டிற்காக தி
செய்யுமாறு அரசாங்கம் வற்புறுத்துகின்
இதற்கெதிராக வேலைநிறுத்தம் செய்வதை
அல்லது வேறு போராட்டங்களில் ஈடுபடுவதை
யுத்தத்தின் பேரால் அரசாங்கம் தடைசெய்துள்
இனவாத யுத்தத்திற்கும், இந்த தாக்குதல்களு
எதிராக தென்னிலங்கையில் வளர்ந்துவ
எதிர்ப்பினை கட்டுப்படுத்துவதற்காக ஊர்க
படையினரை மக்கள்முன்னணி அரசா
உருவாக்கியுள்ளது. பயங்கரவாதத்திற்கு எ
போராடுவது என்ற போர்வையின் கீழ்
ஊர்காவல்படையினரின் உண்மையான வே

15 ம் பக்கம் பார்



*நவாலித்தேவாலயத்தில விமானக்குண்டுவீச்சினால் கொல்லப்பட்ட குழந்தைகள்*

## இந்த இதழில்...


குவீபெக்பொதுஜனவாக்கெடுப்பின் அரசியல் படிப்பினைகள். பக்கம்............ 3

ஏழ்மை உலகின் மரணத்திற்கான முதற்காரணி. பக்கம்.........10

இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகம், தமிழ்நாடு முதலமைச்சருக்கு பகிரங்கக் கடிதம் பக்கம்...7.

ஏகாதிபத்தியவாதிகளின் உதவி கோரி விடுதலைப்புலிகள் பிரச்சாரம். பக்கம்....8

இனவெறி பாசிசக் கூச்சல்களையிட்டு எச்சரிக்கையாக இருங்கள். பக்கம்....2

இலங்கை தேசியஇனப் பிரச்சினை தொடர்பான ஏகாதிபத்தியத் திட்டம். பக்கம்....9

இனவாதமும், கறுப்பு முதலாளித்துவமும். பக்கம்......12

பிரான்சில் அரசியல் வேலைநிறுத்தம் பக்கம்.......10

புரட்சிக்கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவர்கள் மீது அரச தாக்குதல்கள். பக்கம்........16


## வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்று.

படிப்பகம்

www.padippakam.com



# இனவெறி பாசிச கூச்சல்களையிட்டு எச்சரிக்கையாக இருங்கள்.

சிங்கள இனவாதிகளும், பாசிசக் கும்பல்களும் இன்று தொடங்கியுள்ள வெறிபிடித்த இனவாதப் பிரச்சாரங்களையிட்டு தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகம் வேண்டுகின்றது. இவர்கள் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பயங்கரங்கள் மூலம் நாடு முழுவதிலும் தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஒரு எதிர்ப்புரட்சி இயக்கத்தினை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

**"மாபெரும் தேசபக்தர்கள்" என்ற பேரில் இனவாதத்தைக் கக்கும் இவர்கள் யார்? இவர்கள் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களினை இரத்தம் சிந்தவைத்து கசக்கிப் பிழியும் ஏகாதிபத்திய கைக்கூலி முதலாளிகள். யூஎன்பி–சிலசுக முதலாளிகளின் எடுபிடிகளாவர்.**

இந்த இனவாத பாசிசக் கும்பல்கள் பொதுஜனமுன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள "அதிகாரப் பரவலாக்கல்" திட்டத்தினை தமது இனவெறிக்கூச்சல்களுக்கான நாதமாக்கிக் கொண்டுள்ளனர். பொதுஜனமுன்னணி அரசாங்கம் வடக்கு–கிழக்கு யுத்தத்தினை உக்கிரமாக்கிக் கொண்டுள்ளதை இந்த வெறியர்கள் நன்கு அறிவர். யுத்தத்தின் இலக்கு வடக்கு– கிழக்கு மாகாணங்களை அரசாங்கத்தின் ஆளுமையின் கீழ் கொணர்வதே எனவும் இவர்கள் அறிவர். அதிகாரப் பரவலாக்கல் யோசனை எனப்படுவது விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்கும் யுத்தத்தினை மேலும் ஆழமாக்கவே முன்வைக்கப்பட்டுள்ளது என அரசாங்கத் தலைவர்கள் பல தடவைகள் குறிப்பிட்டும் உள்ளனர்.

"அரசாங்கம் நாட்டைப் பிரிக்கப் போகிறது" எனக் கூச்சல் போடும் இனவாதிகளும், பாசிசக் கும்பல்களும் யுத்தத்தினை மேலும் மேலும் உக்கிரமாக்கு! தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எந்தவிதமான ஜனநாயக உரிமைகளையும் வழங்காதே! என்ற பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

"இந்த அதிகாரப்பரவலாக்கல்" தீர்வு பற்றிய கலந்துரையாடல் என்ற பேரில் அரசாங்கம் இந்த இனவாத பாசிச கும்பல்களின் பிரச்சாரங்களுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளது. இலங்கையின் முன்னணி முதலாளித்துவப் பத்திரிகைகளும், ரூபவாகினியும் இனவாத, பாசிசப் பிரச்சாரங்களை முன்னெடுப்பதில் முன்னணியில் நின்றுகொண்டுள்ளன.

இலங்கையின் படுபிற்போக்கு இனவாதிகளும், பாசிஸ்டுகளும் ரீ.என்.எல் தொலைக்காட்சி சேவையில் 'தீர்வு' பற்றிய கலந்துரையாடல் என்ற பேரில் இத்தகைய இனவெறிக்கூச்சல்களில் ஈடுபட்டுள்ளனர். திவயின, ஐலண்ட், லங்காதீப பத்திரிகைகள் பல்வேறு சம்பவங்களையும் தூக்கிப்பிடித்து தமிழர் விரோத இனவெறி கதையளப்புக்களை கொண்டு பத்திரிகைகளை நிறைத்து விற்பனை செய்கின்றன.

"மாபெரும் தேசபக்தர்கள்" என்ற பேரில் இனவாதத்தைக் கக்கும் இவர்கள் யார்? இவர்கள் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களினை இரத்தம் சிந்தவைத்து கசக்கிப் பிழியும் ஏகாதிபத்திய கைக்கூலி முதலாளிகள். யூ.என்.பி–சி.ல.சு.க முதலாளிகளின் எடுபிடிகளாவர். இவர்கள் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களைக் கொன்றுதள்ளி, தொழிலாளர் அமைப்புக்களைத் தாக்கி, முதலாளிகளைச் சுற்றி வட்டமிடும் கொலைகாரப் பாசிஸ்டுகள். இவர்களின் இந்த 'தேச பக்தி' எங்கிருந்து பெருக்கெடுக்கின்றது என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளமுடியும்.

ஜே.வி.பி.யில் இருந்து பிரிந்து 'ஜனதா மித்துரோ' என்ற பேரில் இயங்கும் பாசிசக்கும்பலின் தலைவரான சம்பிக ரணவக என்ற பேர்வழியால் எழுதப்பட்டு 'திவயின' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"இனியும் மக்களை ஏமாற்ற முடியாது. இனி மக்களின் நிலைப்பாடு பொறுத்தது போதும்! ஏமாந்தது போதும்! யுத்தம் செய் என்பதாக இருக்கவேண்டும்.... அதற்கு புதிய பஞ்சசீல கொள்கையை மக்கள் இனங்கான வேண்டும். அதாவது அரசியல் தேவைகளின் மேலாக மக்களின் தேவையையும், தாயகத்தின் சுதந்திரத்தையும் தூக்கிப்பிடிக்கும் ஜனநாயகக்கூட்டு!" (திவயின 1995 யூலை 27–28)பாசிஸ்டுகள் சொல்வது இதுதான்: தேசத்தைக் காக்கும் பேரில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் இரத்தத்தினை சிந்த வைக்கும் இனவாதக் கொடியை உயர்த்திப் பிடித்துக்கொண்டு 'தேசியக்கூட்டு' என்ற பேரில் முதலாளிகளின் பின்னால் அணிதிரளுங்கள்! ஏகாதிபத்தியச்சார்பு முதலாளிகளின் தேவைகளுக்கு தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களின் நலன்களைக் கீழ்ப்படுத்து! இந்த விதத்தில் முதலாளிகளின் அவசியங்களை பாசிஸ்டுக்கள் வாந்தி எடுக்கின்றனர்.

ஜே.வி.பி. காரர்கள் இனவாதத்தினை ஒரு வினோதமான பாணியில்–ஜனநாயகத்தின் பேரில் வாந்தி எடுக்கின்றனர். அவர்களின் 'நியமுவா' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரை கூறுவது இதுதான் "நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது இலங்கையின் ஜனநாயகத்தை அமைப்பது தொடர்பான ஒரு விடயமாதலாலும், அதிகாரப் பரவலாக்கம் இலங்கையின் தேசியப்பிரச்சனையுடன் தொடர்புபட்ட ஒரு விடயமாதலாலும் இவ்விரு தீர்க்கமான காரணங்களையும் ஒருங்கே கொண்டு மக்களின் தீர்ப்புக்கு விடுவது உசிதமற்றது." (1995 ஆகஸ்ட் 01)

**பாசிஸ்டுகள் சொல்வது இதுதான்: தேசத்தைக் காக்கும் பேரில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் இரத்தத்தினை சிந்த வைக்கும் இனவாதக் கொடியை உயர்த்திப் பிடித்துக்கொண்டு 'தேசியக்கூட்டு' என்ற பேரில் முதலாளிகளின் பின்னால் அணிதிரளுங்கள்!**

மோசடிக் கோட்பாட்டு முகம் காட்டும் பாசிஸ்டுகள் மிகவும் அடிப்படையான ஜனநாயகப் பணிகளை தமது இனவாத நோக்கினை மூடிமறைக்கும் பொருட்டு சேற்றுள் தள்ளுவது இதில் தெரிகிறது அல்லவா? இலங்கையிலும் சரி வேறெங்கும் சரி தேசிய இனங்களுக்கு இடையே சமத்துவமான உறவுகளை நிறுவுவது மிகவும் அடிப்படையான ஜனநாயகப் பணியாகும். இதனை நனவு படைத்த தொழிலாளர்கள் அறிவர்.

பாசிஸ்டுகள் இன்னுமோர் சுலோகத்தையும் முன்வைத்து வருகின்றனர். "அதிகாரப்பரவலாக்கம் சம்பந்தமாக கருத்துக் கணிப்பை நடாத்து". அரசாங்கத்தின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் ஜனநாயக உரிமைகளை வழங்கும் பொருட்டு ஏற்பட்டவை அல்ல. வடக்கு–கிழக்கு தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிசெய்யும் யோசனைகள் நாடுமுழுவதிலும் சிறுபான்மை தேசியஇனத்தினரின் மட்டுமன்றி பேரினத்தினதும் கருத்துக் கணிப்புகளுக்கு உள்ளாகவேண்டும் என இவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த இலட்சணத்தில் இவர்கள் ஜனநாயகத்தின் சார்பில் பேசுகின்றார்கள் எனக் கூறுவது எப்படி? இந்த விதத்தில் இவர்கள் பேரினத்தின் உள்ளே இனவெறியைத் தூண்டிவிடவும், சிறுபான்மையினரை நசுக்கவும் பார்க்கிறார்கள்.

**1958ல் கொழும்புவாழ் தமிழ் ஒடுக்கப்படும் மக்களைத் தாக்க சிங்கள இனவாதிகள் வீதியில் இறங்கிய வேளையில் சமசமாஜக்கட்சி தனது கிளைகளின் அங்கத்தவர்களை திரட்டி தமிழ்–ஒடுக்கப்படும் மக்களை பாதுகாக்க இறங்கியது.**

இவர்கள் ஜனநாயகத்தின் பேரில் சிங்கள சோவினிசத்தினை தூண்டுகிறார்கள். இலங்கையில் சிங்களப் பேரின முதலாளிகளின் தேசிய ஒடுக்குமுறையைப் பற்றியும், தமிழ் தேசியஇனத்தின் முதலாளிகள் பற்றியும் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்கள் கற்றுக்கொண்டது. முதலாளித்துவப் பிரிவினை அரசியல்களுக்கு எதிராக இரு தரப்பிலும் உள்ள தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட தொழிலாளர் இயக்கத்தினுள் இடம்பெற்ற போராட்டங்கள் மூலமாகும். இலங்கையில் இதற்கு தலைசிறந்த வரலாற்று சம்பிரதாயங்கள் உண்டு. 1930களின் கடைப்பகுதியில் தொழிலாளர்வர்க்கம் சமசமாஜக்கட்சியின் கீழ் அணிதிரண்ட போதும் 1940களில் அக்கட்சி ட்ரொஸ்கிச, மார்க்சிசக் கட்சியாக முன்னணிக்கு வந்தபோதும் 1950களில் அதன் ஆளுமை பரந்துபட்டு இருந்த வேளையிலும் இலங்கையின் முதலாளிகளின் இன, மத பேதங்களைத் தாண்டி தொழிலாளர்வர்க்கம் அனைத்துலகவாத அடிப்படையில் அணிதிரண்டது.

இதைக் கண்டு கலங்கிப்போன முதலாளிகள் இனவாதப் பிளவின் கொலைகார ஆயுதம் ஏந்தினர். ஏகாதிபத்திய எஜமானர்கள் அவர்களுக்கு உரித்தாக்கிய கடைகெட்ட ஆயுதம் அதுவே. எனினும் அன்று தொழிலாளர்வர்க்கம் சிங்கள முதலாளிகளின் இனவாதத்தை எதிர்த்துப் போராடியது. 1958ல் கொழும்புவாழ் தமிழ் ஒடுக்கப்படும் மக்களைத் தாக்க சிங்கள இனவாதிகள் வீதியில் இறங்கிய வேளையில் சமசமாஜக்கட்சி தனது கிளைகளின் அங்கத்தவர்களை திரட்டி தமிழ்–ஒடுக்கப்படும் மக்களை பாதுகாக்க இறங்கியது. 1950களில் சமசமாஜக்கட்சி முதலாளித்துவத்துக்கு அடிபணிந்து 1964ல் சி.ல.சு.க. கூட்டரசாங்கத்தில் நுழைந்ததன் மூலம் இப் போராட்டங்கள் சீர்குலைந்தன. இதனால் இது 1983ல் இனவாத யுத்தமாக வளர்ச்சி காணும் நிலை உருவாகியது. கடந்த காலத்தின் அனைத்துலகவாத சம்பிரதாயங்களின் அடிப்படையில் காலூன்றி சிங்களம்–தமிழ் பேசும் தொழிலாளர்வர்க்கத்தின் ஐக்கியத்தை சிருஷ்டிக்குமாறும் அதன் மூலம் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி பொதுஜனமுன்னணி, பாசிச இனவாதக் கும்பல்கள் விருத்தி செய்யும் எதிர்ப்புரட்சி ஆபத்துக்களுக்கு எதிராக அணிதிரளுமாறும் நாம் தொழிலாளர்களை வேண்டுகின்றோம்.

---


தொழிலாளர்
பாதை

தொழிலாளர்பாதை
...ன்காம்அகிலத்தின்
...னைத்துலகக்குழுவின்
...லங்கைப்பிரிவான
...ட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால்
...வளியிடப்படுகின்றது.
...ந்தியாவில் தொழிலாளர்பாதை
...சோசலிசத்தொழிலாளர்கழகத்தினால்
...வளியிடப்படுகின்றது
...ரோப்பாவில் புரட்சிக்கம்யூனிஸ்ட்
...ழகத்தின்
...வளிநாட்டுக்கிளையினால்
...ரசுரம் செய்யப்படுகின்றது.
...ந்த தொகுப்பு இதழ் 15ல்,
...லக்கம் 464, 465,76 இலிருந்தும்,
...வதேசக்குழுவின் ஏனைய மொழிப்
...த்திரிகையிலிருந்தும் எடுக்கப்பட்ட
...ட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

...லாளர்பாதையின் தொடர்பு விலாசங்கள்:

இலங்கை
Anantha Wakkumbara
90, 1st Maligaganta Lane
Colombo 10.

ஜெர்மனி
Tholilalar Pathai
Postfach 1609
74321 Bietigheim- Bissingen

பிரான்சு
RCL Exil Organisation
Tel: 40383102 Paris.

பிரித்தானியா
International Communist Party
Po Box 71
Rotherham S 60 1SU

ஐரோப்பாவில்
அச்சிட்டு வெளியிடுவோர்:
ArbeiterPresse Verlag
Postfach 100105
45001 Essen
Germany.



...ழிலாளர்பாதை,கம்கறுமாவத்த
...த்திரிகைகளுக்கு
...தாரராகுங்கள்.

...லங்காசமசமாஜக்கட்சியின் துரோகங்களுக்கு
...க மார்க்சிச பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காகவும்
...சோசலிசப்புரட்சி முன்னோக்கிற்கு
...டுவதற்காகவும் 1968ல்புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகம்
...தச ரொக்சிசவாதிகளினால் உருவாக்கப்பட்டது.
இதனது உத்தியோகபூர்வ பத்திரிகைகளாக
...ல் "தொழிலாளர்பாதையும்", சிங்களத்தில்
...றுமாவத்தையும்" வெளியிடப்படுகின்றன.
இப்பத்திரிகைகளின் பிரதான பணி
...தேசதொழிலாளவர்க்கத்தின் ஐக்கியத்திற்காகப்
...டுவதாகும். இதுதான் தொழிலாளவர்க்கத்தினுள்
...லிச உணர்மையை வளர்த்தெடுப்பதற்கான
...ந்தனையை உருவாக்குகின்றது.
இதனை அனைத்து தேசியவாத, சந்தர்ப்பவாத
...க்குகளுக்குமெதிரான சமரசமற்ற
...ட்டத்தினால்தான் முன்னெடுக்க முடியும்.
...வகையில் "தொழிலாளர்பாதை" தமிழ்பேசும்
...லாளர்கள் இளைஞர்கள் மத்தியில்கட்டாயமாக
...க்கப்படவேண்டிய பத்திரிகையாகும்.
பத்துப்பிரதிகள் DM 30.–

www.padippakam.com



**கார்த்திகை முப்பதாம் திகதி குவீபெக் பிரிவினை தொடர்பாக கனடாவின் சமஷ்டி அரசின் அரசின் நெருக்கடியானது அனைத்துலகிலுமுள்ள தொழிலாளர்களுக்கு முன்னால் இன்றியமையாத முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றது.**

# குவீபெக் பொதுஜனவாக்கெடுப்பின் அரசியல் படிப்பினைகள்

*கனடா பரப்பளவில் உலகின் இரண்டாவது பெரிய நாடாகும். முதலாவதாக நீண்டகாலமாக பிரெஞ்சு காலனியாகவும் பின்னர் 1967ல் சுயாட்சிக்கான சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் வரை ஆங்கிலக் காலனியாகவும் இருந்தது. 70பது வீதமான கனடியர்கள் ஆங்கிலமொழி பேசுபவர்கள், 27 வீதமானோர் பிரெஞ்சுமொழி பேசுபவர்கள். விசேடமாக சங் லோரன்ஸ்ரோம் (Sankt Lorenz-stroms) பிரதேசத்தில் பெரும்பான்மையான மக்கள பிரெஞ்சு பேசுபவர்கள். இங்கே 1970களில் குவீபெக் மாகாணத்தின் பிரெஞ்சு கனடியர்கள் மத்தியில் தற்போதைய சுயாட்சி இயக்கம் உருவாகியது. இவர்களது பிரதானமான அரசியல் இயக்கமாக இப்பிரதேசத்தில் தற்போது ஆட்சியிலிருக்கும் குவீபெக்கட்சி (Parti Quebecois) விளங்குகின்றது. அருகில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் இக்கட்டுரையானது பிரிவினைவாதத்தினால் தொழிலாளர்வர்க்கம் முகம்கொடுக்கும் ஆபத்துக்களைப் பற்றி ஆய்வு செய்கின்றது. இது முதலில் அமெரிக்க ட்ரொக்சிச கட்சியான தொழிலாளர்கழகத்தின் பத்திரிகையான International Workers Bulletin ல் தலையங்கக் கட்டுரையாக பொதுனவாக்கெடுப்பிற்குப் பின்னர் பிரசுரமாகியது.*




*அரசின் வரவுசெலவுத் திட்டத்திற்கெதிராக ஊர்வலம் செய்யும் தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்கவாதிகள் பிரிவினைப் பிரச்சாரம்.*

கனடாவிலும், ஐக்கிய அமெரிக்காவையோ அல்லது ஜப்பானையோ போல் அதிகரித்துவரும் வறுமை, பொருளாதார ஸ்திரமற்ற தன்மை சமூக ஏற்றத்தாழ்வுகளின் நிலைமைகளுள் பழைய அரசியல் கட்சிகள், ஸ்தாபனங்கள் இன்னும் அரசியல் கட்டுமானங்கள் என்பவை உடைந்து கொட்டுகின்றன.

பிரமாண்டமான அளவில் வளர்ச்சியடைந்து வரும் சர்வதேசமயமாக்கப்பட்ட உற்பத்தியின் அழுத்தத்தின் கீழ் தேசியஅரசு அமைப்புமுறையின் அத்திவாரங்கள் ஆட்டம் காண்கின்றன. சில வருடங்களுக்கு முன்னர் நிலையானது என கணக்கிலெடுக்கப்பட்ட தேசங்களது ஐக்கியமும், எல்லைகளது நிரந்தரத் தன்மையும் திடீரென பிரச்சனைகளுக்குரியதாகியிருக்கின்றது. முன்னாள் சோவியத்யூனியன், கிழக்குஐரோப்பா, பால்கான் மட்டுமல்ல உலக ஏகாதிபத்தியங்களின் மையங்களிலும் வடஅமெரிக்கக் கண்டத்திலும் இது ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த அபிப்பிராய வாக்கெடுப்பில் ஒரு சில ஆயிரம் வாக்குகளின் திசை மாற்றப்பட்டிருந்தால் நியூயோர்க், வேர்மொன்ட் (Vermont), நியூகம்செயர் (New Hampshire), மயின் (Maine) ஆகிய நகரங்களின் எல்லைகளில் ஒரு புதிய முதலாளித்துவ தேசம் உருவாகுவதற்கான வழிகள் திறக்கப்பட்டிருக்கும். எப்படியிருந்த போதிலும் பிரிவினைக்கெதிரான மயிரிழையிலான இடைவெளி கனடிய சமஷ்டி அரசினைக் "காப்பாற்றி" விடவில்லை. பதிலாக இந்த அரசினை துண்டுபோடுவதற்கான மத்தியமான விசைகள் கூர்மையடைவதற்கான ஒரு புதிய காலகட்டத்தினை திறந்து விட்டிருக்கின்றது.

கனடாவில் மாத்திரமல்ல ஐக்கிய அமெரிக்காவிலும் இன்றைய பிரதானமான கேள்வி: தொழிலாளவர்க்கம் இந்த சமூக அரசியல் நெருக்கடிகளை முற்போக்கான வழியில் தீர்ப்பதற்கான ஒரு வழியை கண்டுபிடிக்குமா? அல்லாவிடில் இந்த நாற்றமெடுக்கும் முதலாளித்துவ அமைப்புமுறைக்கெதிராக தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான அரசியல் இயக்கம் இல்லாத நிலைமைகளில் மக்கட் தொகையினரின் பரந்துபட்ட பிரிவுகளின் வெறுப்பும், விரக்தியும் வலதுசாரி இனவாத சக்திகளினால் பிற்போக்கான திசையில் திருப்பப்படுமா?

ஒக்டோபர் 30ம் திகதி வாக்கெடுப்பின் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் நள்ளிரவில் ஒளிபரப்பப்பட்ட குவீபெக்கின் பிரதமரும், குவீபெக் கட்சியின் (Parti Quebecois,PQ) தலைவருமான ஜாக் பரிசோ (Jacques Parizeau) வின் பேச்சு பிரிவினை வேலைத்திட்டத்தின் பிற்போக்குத் தன்மையை அப்பட்டமாக தெளிவுபடுத்தியது.

ஜனநாயகமும், இனஐக்கியமும் என்ற முகமூடியை கிழித்துவிட்டு பரிசேயு "நாங்கள்"– பிரஞ்சு மொழிபேசும் குவீபெக்கினர்– பிரிவினருக்கு ஆதரவாக 60 வீதமான வாக்கினை வழங்கியிருப்பதனை புகழ்ந்து பாடினார். பிரிவினைவாதிகளின் தோல்விக்கான காரணத்தினை அவர் "பணத்தினதும், சிறுபான்மையினரதும் வாக்குகள்" எனக் குற்றம்சாட்டியதுடன் இதற்கு "பழிக்குபழி" வாங்குவதாகவும் சத்தியம் செய்தார். குவீபெக் தொழிற்சங்கங்கள் வழங்கிய ஆதரவினை பாராட்டியதுடன் "இடதுவலது, தொழிலாளிமுதலாளி" என்ற வித்தியாசமின்றி குவீபெக்கினரின் தேசிய "ஐக்கியம்" பற்றி புகழ்ந்து பாடிய பாசிச சலசலப்புகளுக்கு சத்தங்களிலும் சற்று அதிகமாக இருந்தது.

அபிப்பிராய வாக்கெடுப்பினது முடிவுகள் அடுத்த தடவையில் "நாங்கள் 63 அல்லது 64 வீதமாக இருக்கையில்" மாற்றப்படும் என பரிசேயு பிரகடனப்படுத்தியது. குவீபெக் இனவாதத்திற்கு தூபம் போடுவதாக இருந்தது. அவரது இந்த கூற்றினது தாக்கங்கள் குவீபெக் பிரிவினைவாதிகள்

ஆங்கில குடியேறிய தொழிலாளர்களின்
மேலதிகமான பாரபட்சங்களை அறிமுகப்படுத்து
மூலம் குவீபெக் மாகாணத்தை
விரட்டியடிப்பதை வலியுறுத்துகின்றது. PQ
குவீபெக்கினது இனவாத மொழிச் சட்டத்
"மொன்றியாலின் பிரஞ்சு முகத்தின
பாதுகாப்பதற்காக கடுமைப்படுத்தப்போ
ஏற்கனவே அறிவித்துள்ளது.

பரிசேயுவினது கருத்து
வலியுறுத்துவதுபோல் குவீபெக் பிரிவினை
ஜனநாயக உரிமைகளுக்கான இய
என்பதிலிருந்து பாரியளவில் வேறுபட்ட ஒரு
சிறப்புரிமைவாத போக்கு. இது ஒரு குழுவி
செலவில் இன்னுமொரு குழுவினரது சலுகை
பெறுவதற்கு முயற்சிக்கின்றது.

லிபரல் கட்சியினது கனடிய ம
அரசாங்கமும், பிரிவினைக்கு எதிரான
முதலாளிகளும் தங்களது பங்காக அபி
வாக்கெடுப்பில் கிடைத்த பிரிவினைக்கெ
வெற்றியை பாவித்து தொழிலாளவர்க்க
வேலைத் தலங்கள் மீதும், வாழ்க்கைத்த
மீதும் தாக்குதல்களை தீவிரப்படுத்த மு
செய்கின்றனர்.

குவீபெக்கிற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்
"அதிகாரப்பரவல்படுத்தல்" என்ற பெயரில் கனட
ஏனைய மாகாணங்களுக்கும் மேலதி
சுயாட்சியை இவர்கள் கோருகின்றனர். இது இ
பிரதானமான தேவைகளுக்காகப் பாவிக்கப்
முதலாவதாக பிராந்திய அரசுகளுக்கு குடி
தொழிலாளர்களுக்கெதிராக புதிய
சட்டங்களை நடைமுறைப்படுத்துவத
இரண்டாவதாக மாவட்ட ரீதியாக இய
மருத்துவ வசதிகள் உட்பட்ட கனடிய சமூக
அரசமுறையினை அழித்தொழிப்பதற்கும்
குவீபெக் இனவாதத்திற்கு பதிலாக ச
அரசியல்வாதிகள் கனடிய தேசப்
வாதத்தினையும், ஆங்கில இனவாதத்
முன்வைக்கின்றனர். கனடாவின் தொழிலாள
பிரெஞ்சு, ஆங்கில மொழி பேசுபவர்கள், குடியே
இந்த அரசியல் அமைப்பு நெருக்க
போட்டியிடும் பெரிய முதலாளிகளின் கன்
அனைத்தினையும் திடகாத்திரமாக எதிர்
சந்தர்ப்பத்தில் அவர்கள்
முதலாளிகளுக்கிடையிலான அதிகாரப் போட்
இழுத்துச் செல்லப்பட்டு பிரதேச, தேசிய
அடிப்படையில் ஒருவருக்கெதிராக ஒருவர்
விடப்படுவதனை தவிர்க்க முடியாது இப்ப
ஒரு வளர்ச்சியினது ஆபத்தானது மு
யூகோசிலாவியாவின் பயங்கரமான நிகழ்
படம்பிடித்துக் காட்டப்படுகின்றது.

சர்வதேசரீதியில் ஒன்றிணைக்கப்
பொருளாதாரமானது வர்க்கங்களுக்
அரசுகளிற்கும் இடையிலான பழைய உறவ
உடைத்தெறிந்ததுடன் முதலாளித்
வரலாற்றுரீதியாக வேரோடியிருந்த தேசி
அமைப்புமுறையினையும் தகர்த்திருக்கின்றது
அளவிற்கு உலகம் ஒரு தனித்த பொரு
அலகாக உருவாகின்றதோ அந்த மட்டத்

படிப்பகம்

www.padippakam.com



**குவீபெக் பிரிவினைவாதம் ஒரு புறநிலையான பிரச்சினைக்கான பிற்போக்குத்தனமான தீர்வாகும். உலகின் தற்போதைய அரசியல் பிரிவுகள் கடந்துசென்றுவிட்ட ஒரு பொருளாதார காலகட்டத்தினை பிரதிநிதிப்படுத்துகின்றன. உலகின் அரசியல் வரைபடம் மீண்டும் திருப்பிக் கீறப்பட வேண்டும். இங்கே இருக்கும் கேள்வியானது இது மேலிருந்து தொழிலாளவர்க்கத்தினதும், பெரும்பான்மையான மனித சமுதாயத்தினதும் செலவில் இரத்தம் தோய்ந்த இனவாதத்தினாலும், பாசிசத்தினாலும், போரினாலும் செய்யப்படவேண்டுமா? அல்லது கீழிருந்து சர்வதேச தொழிலாளவர்க்கத்தின் புரட்சிகரமான நடவடிக்கையின் ஒரு விளைவாக உருவெடுக்குமா?**

*பொதுஜனவாக்கெடுப்பின் பின்னர் ஊர்வலம் செய்வோர், பொலீசுக்கு முகம் கொடுக்கின்றனர்.*



ளிகள் தங்களுக்குள் சந்தைகள், லாபம், கவளங்கள், மலிந்த கூலிஉழைப்பிற்காக தனமான போட்டிகளில் இறங்குவர்.

கனடாவின் மத்தியமான போக்குகள் வின் பொருளாதாரம் ஐக்கியஅமெரிக்காவுடன் ட்டத்திற்கு இணைக்கப்பட்டிருக்கின்றதோ விற்கு பலப்பட்டிருக்கின்றன. 1989ல் கனடா சுதந்திரவர்த்தக ஒப்பந்தத்தினை அமெரிக்காவுடன் செய்ததிலிருந்து கனடாவின் ளாதாரம் மறுசீரமைப்புச் ப்பட்டிருக்கின்றது. தொழிற்சாலைகளை ல், சம்பளவெட்டுக்கள், சமூகசேவை த்திட்டங்களைக் குறைத்தல் போன்றவற்றின் அமெரிக்க கண்ட சந்தைகளுக்கு தக்கமாதிரி பட்டிருக்கின்றது.

1994ல் கனடாவின் உற்பத்தியில் ம்பான்மையானவை அமெரிக்காவின் னயாக்கப்பட்டது. வரலாற்று ரீதியாக கனடிய ளாதாரத்தின் ஐக்கியத்தின் மையமான ரியோ மாநிலம் ஐக்கிய அமெரிக்காவுடன் ம் வர்த்தகமானது அது ஏனைய ஒன்பது மாநிலங்களுடன் செய்யும் வர்த்தகத்தின் த் தொகையிலும் அதிகமானதாகும். ஆனால் ட்டத்திற்கு கனடா ஐக்கியஅமெரிக்காவுடன் ாதார ரீதியில் கட்டுப்படுத்தப்படுகின்றதோ மட்டத்திற்கு கனடிய சமஷ்டி அரசினது கடி அதிகரிக்கின்றது.

குவீபெக் பிரிவினைவாதம் ஒரு புறநிலையான னைக்கான பிற்போக்குத்தனமான தீர்வாகும். ன் தற்போதைய அரசியல் பிரிவுகள் துசென்றுவிட்ட ஒரு பொருளாதார டத்தினை பிரதிநிதிப்படுத்துகின்றன. உலகின் ல் வரைபடம் மீண்டும் திருப்பிக் கீறப்பட டும்.

இங்கே இருக்கும் கேள்வியானது இது ருந்து தொழிலாளவர்க்கத்தினதும், பான்மையான மனித சமுதாயத்தினதும் ல் இரத்தம் தோய்ந்த இனவாதத்தினாலும், தினாலும், போரினாலும் செய்யப்படவேண்டுமா? து கீழிருந்து சர்வதேச தொழிலாளவர்க்கத்தின் ரமான நடவடிக்கையின் ஒரு விளைவாக வடுக்குமா?

இதன் மூலம் வசதிபடைத்த ஒரு சிலரது லாபங்களிற்காக உற்பத்தி செய்வது என்பதற்கு மாறாக உலகத் தொழிலாளர்களால் ஜனநாயக முறையில் சமூக தேவைகளை நிறைவேற்றுவதற்காக உற்பத்தி ஒழுங்குபடுத்தப்படமுடியும். இதனைச் செய்வதற்கு சர்வதேச தொழிலாளவர்க்கம் முதலாளித்துவத்திற்கும், பழமைவாய்ந்த தேசியஅரச முறைக்கும் ஒரு முடிவு கட்டவேண்டும்.

இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு குவீபெக்கில் ஆழமான பிரிவுகள் இருப்பதனை பிரிவினைக்கு ஆதரவாக 49,4 விகிதமும், எதிராக 50,6 வீதமும் வாக்களித்ததின் மூலம் எடுத்துக்காட்டியது. இப்பிரிவு ஒரு ஆழமான நெருக்கடியை வெளிப்படுத்துகின்றது. ஆனால் இந்த அபிப்பிராய வாக்கெடுப்பின் முடிவுகள் யதார்த்தத்தின் ஒரு சிதைக்கப்பட்ட வடிவத்தினையே வெளிப்படுத்தியது. இம்முடிவுகள் இந்தப்பிரிவுகளின் பிரதானமான குணாம்சத்தை சுட்டிக்காட்டவில்லை. "சமாதானமான" கனடா, ஐக்கியஅமெரிக்காவைப் போலவும் அல்லது மற்றைய ஏனைய முதலாளித்துவ நாடுகளைப் போலவும் பாரிய செல்வத்தினை அனுபவிக்கும் ஒரு வசதிபடைத்த சிறிய தட்டிற்கும், தினசரி மோசமடையும் வாழ்க்கைத்தரத்திற்கும், பொருளாதாரப் பாதுகாப்பின்மைக்கும் முகம்கொடுக்கும் மக்கள் தொகையினரின் பெரும்பான்மையோருக்குமிடையில் மேலும்,மேலும் துருவப்படுத்தப்படுகின்றது. 1981–82 பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னர் வேலையில்லாத் திண்டாட்டம் 10 வீத மட்டத்திலிருக்கின்றது. நான்கிற்கு ஒன்று என்ற கனடிய குழந்தைகள் வறுமையில் வாழ்கின்றனர்.

கனடிய சமுதாயமும், குவீபெக்கும் பிரிவுபட்டிருக்கும் இரண்டு அடித்தளமான ஒன்றையொன்று எதிர்க்கும் முகாம்கள்:– ஆங்கிலம் பேசும் சமஷ்டி வாதிகளுக்கும், பிரஞ்சு மொழிபேசும் பிரிவினைவாதிகளுக்கும் அல்ல, பதிலாக செல்வத்தினைக் கட்டுப்படுத்தும் முதலாளிகளும், உழைப்புத் திறனை மட்டும் வைத்திருக்கும் தொழிலாளர்களும் பெரும்பான்மையான மக்களும் ஆவர். குவீபெக் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளான வேலையில்லாத்திண்டாட்டம், வாழ்க்கைத்தரத்தில் ஏற்படும் வீழ்ச்சி கல்வித்துறை, சமூகசேவை நெருக்கடிகள் என்பவை கனடா, வடஅமெரிக்கா முழுமையுமான தொழிலாளர்களுக்கு பொதுவானதாகும். எப்படியிருப்பினும் சமஷ்டிவாதிகளும், பிரிவினைவாதிகளும் பெரிய முதலாளிகளின் நலன்களையே பிரதிநிதிப்படுத்துகின்றனர். இவர்கள் உலகச் சந்தையில் பெரிய மூலதனம் போட்டி போடுவதற்காக தொழிலாளர்களின் வேலைகளும், சம்பளங்களும், சமூகசேவைகளும் வெட்டிக்குறைக்கப்படுவதை ஏகோபித்து ஏற்றுக்கொள்கின்றனர்.

இறுதி ஆய்வுகளில் "மொழியினதும்", "கலாச்சாரத்தினதும்" அடித்தளத்திலான பிரிவினைக் கோரிக்கையானது அனைத்து சுரண்டல் ஆட்சியாளர்களினாலும் காலத்தால் அழியாது பிரித்தாளல் மூலோபாயத்திற்கே சேவை செய்கின்றது. இந்த வார்த்தை ஜாலம் மொழியினை படம் பிடித்துக் காட்டுகின்றதோ அல்லது ஐக்கியஅமெரிக்காவைப் போல் இன அரசியல் வடிவமெடுக்கின்றதோ அதனது பிற்போக்கு சாராம்சம் ஒன்றாகத்தான் இருக்கின்றது.

அமெரிக்க பத்திரிகைகளுக்கு குறைவில்லாமல் கனடிய பத்திரிகைகளிலும் பெரிய தீண்டப்படக்கூடாத விடயம் சமூகத்திலிருக்கும் வர்க்கப் பிரிவுகளாகும். தொழிலாளர்கள் போட்டியிடும் முதலாளிகளின் முகாம்களிற்கும், அரசியல்வாதிகளின் நலன்களிற்கும் இடையே ஒன்றை தெரிவுசெய்ய வேண்டுமென வற்புறுத்தப்படுகின்றனர். அவர்கள் தங்கள் சொந்த சுயாதீனமான மாற்றீட்டை முன்வைக்க முடியாது என்று நிரூபிப்பதற்காக அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுகின்றது.

குவீபெக் அபிப்பிராய வாக்கெடுப்பில் தொழிலாளவர்க்கத்திற்கு ஒரு சட்டத்தின் மூலம் வாய்ப்பூட்டு போடப்பட்டது. சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட முகாம்கள் குவீபெக் கட்சி, குவீபெக் கூட்டு ஆகியவற்றினால் தலைமை தாங்கப்பட்ட உத்தியோகபூர்வமான பிரிவினைக்கு சார்பான "ஆம்" என்ற பிரசாரமும், இதற்கு எதிரான லிபரல் கட்சியால் தலைமை தாங்கப்பட்ட "இல்லை" என்ற பிரச்சாரமும் மட்டுமே. கனடாவின் ட்ரொக்சிச இயக்கமான சர்வதேச தொழிலாளர்கட்சி சர்வதேச தொழிலாளர்வர்க்கத்தின் ஐக்கியத்தின் அடிப்படையிலும், சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையிலும் பிரிவினைக்கு எதிராக வாக்களிக்கும்படி கோரியது. பிரிவினைவாதிகளினதும், சமஷ்டிவாதிகளினதும் இரண்டு கூடாரங்களையும் எதிர்த்த இக்கட்சியானது பிரசுரங்களை அச்சிட்டு விநியோகிப்பதிலிருந்தும், கூட்டங்களை ஒழுங்கு பண்ணுவதிலிருந்தும் சட்டரீதியாக தடைசெய்யப்பட்டது.

கனடிய தொழிற்சங்கங்கள் தொழிலாளர்வர்க்கத்தின் அரசியல் உரிமைகளைப் பறிப்பதனை நிறைவேற்றும் பங்களித்தனர். குவீபெக்கின் தொழிற்சங்க அதிகாரிகளும், அவர்களின் அரசியல் கூட்டாளிகளான மத்தியதரவர்க்க "இடது" குழுக்களும் பிரிவினை வாதிகளுக்கு ஆதரவளித்தனர். ஆங்கிலம் பேசும் கனடாவில் இருக்கும் தொழிற்சங்க அதிகாரிகளும், கனடிய தொழிற்சங்க சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கும் புதிய ஜனநாயகக் கட்சியும் லிபரல்கட்சிப் பிரதமர் சேட்டியனின் (Chretien) சமஷ்டி அரசாங்கத்திற்கும் தீவிர வலதுசாரி சீர்திருத்தக் கட்சிகளுக்கும் பின்னால் அணிதிரண்டனர். புதிய ஜனநாயகக்கட்சி, தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் அவர்களது போலிச் சோசலிச "இடது" கூட்டுக்கள் அனைவரும் இணைந்து தொழிலாளவர்க்கத்தினால் ஏற்படுத்திய குழப்பத்தினதும் அரசியல் நிலைகுலைவினதும் மத்தியிலும் பிரிவினைவாதிகள் எதிர்பார்த்தளவிலான வாக்கு விகிதத்தை பிரெஞ்சு பேசும் தொழிலாளர்கள் வாழும் மாவட்டங்களான மொன்ரியலிலும், குவீபெக் நகரத்திலும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

எப்படியிருப்பினும் தொழிலாள அதிகாரத்துவங்களினது கட்டுப்பாட்டிற்குள் இருந்து உடைத்துக்கொண்டு சுயாதீனமான அரசியல் சக்தியாக கனடிய முதலாளித்துவத்தின் நெருக்கடிக்கான புரட்சிகரமான ஜனநாயகத் தீர்வுகளை முன்வைக்க வராத மட்டும் தொழிலாளர்வர்க்கம் இந்த ஸ்திரமற்ற நிலைமையினால் உருவாகும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. முதலாளித்துவத்தின் முயற்சிகளை பிடுங்கிக்கொள்வதற்கு முன்நிபந்தனையாக தொழிலாளர்வர்க்கம் குவீபெக் பிரிவினைவாதத்திற்கும், கனடிய தேசியவாதத்திற்கும் மாற்றீடான ஒரு வழி இருக்கின்றது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். இது அனைத்துத் தொழிலாளர்களது பொதுநலன்களை பிரதிநிதிப்படுத்துவதுடன் வர்க்கச்சுரண்டலின் அடித்தளத்திலான சமூக ஒழுங்கு முறையை நிராகரிப்பதாக இருக்க வேண்டும்.இது தொழிலாளவர்க்க இயக்கத்திற்குள் தலைமை, வேலைத்திட்டம் தொடர்பான நெருக்கடியை தீர்த்து வைப்பது என்ற மிகவும் அடித்தளமான பிரச்சினையை முன்னுக்கு கொண்டு வருகின்றது.

முன்னாள் யூகோசிலாவியாவின் நிகழ்வுகள் கனடிய, அமெரிக்க, ஏனைய நாட்டு தொழிலாளர்களுக்கு ஒரு எச்சரிக்கையை வழங்குகின்றன. இனவெறிப் போக்குகள் சமூக அமைப்புமுறைக்கு எதிராக வளர்ந்துவரும் எதிர்ப்பினை எதிர்ப்புரட்சித் திசையில் திருப்பிவிடுவதற்கு அனுமதிக்க முடியாது.

தொழிலாளர்கள் அனைத்து முதலாளித்துவ போட்டிக் கன்னைகளையும் எதிர்ப்பதுடன் தங்களை ஒரு சுயாதீனமான அரசியல் சக்தியாக நிர்மாணித்துக்கொள்ள வேண்டும். வட அமெரிக்க சுதந்திரவர்த்தக ஒப்பந்தத்தின் (NAFTA) அடித்தளத்தில் வடஅமெரிக்க பொருளாதாரம் மறுசீரமைக்கப்படுதலுக்கு பதிலாகவும், அனைத்து முதலாளித்துவ கன்னைகளுக்கெதிராகவும் ("சுதந்திரவர்த்தக", பாதுகாப்புவாத, சமஷ்டிவாத, பிரிவினைவாத), கனடிய, அமெரிக்க, மெக்சிக்கோ தொழிலாளர்கள் வடஅமெரிக்க ஐக்கிய சோசலிசக் குடியரசுக்கான போராட்டத்தில் இணையவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# இஸ்ரேலியப் பிரதமர் ரபினினது கொலை மத்தியகிழக்கின் அரசியல் மாயைகளுக்கு வெடி வைக்கின்றது.

இஸ்ரேலின் பிரதமமந்திரி யிற்சாக் ரபின் (Yitzhak Rabin) ஒரு யூத மதவெறியினால் கொலைசெய்யப்பட்டது சியோனிச ஆட்சியின் சமூக அரசியல் நெருக்கடியின் ஆழத்தினை வெளிக்கொண்டு வருகின்றது.

அவரது மரணச்சடங்கில் மேற்கொள்ளப்பட்ட புகழுரைகளை ஒருவர் கணக்கில் எடுத்துக்கொண்டால் ரபின் தனது வாழ்க்கையை மகாத்மா காந்தியின் வழியில் பின்பற்றினார் என்று நினைத்துக்கொள்வார். உண்மையில் அவர் அரபு மக்களை அடக்கி ஒடுக்குவதற்கும், பொதுமக்கள் மேல் பயங்கரத்தை கட்டவிழ்த்து விடுவதற்கும், பாலஸ்தீன தலைவர்களைக் கொல்வதற்கான கொலைப்படைகளை அனுப்புவதற்காகவுமே தனது வாழ்நாளை அர்ப்பணித்திருந்தார்.

இஸ்ரேல் முதலாளிவர்க்கத்தின் சார்பில் அவர் தந்திரோபாயங்களை மாற்றி பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அழித்தொழிப்பதற்கு பதிலாக அதனது கூட்டுழைப்பை பெற்றுக்கொள்வதற்கு முனைந்தது, ஒருவகையிலும் அவரது பாத்திரத்தை மாற்றி விடவில்லை. உண்மையில் அவர் கொல்லப்படுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னால் இஸ்ரேலின் இரகசியப் பொலீஸ் மோசாட்டினால் முஸ்லீம் மத அடிப்படைவாத ஜிகாத் இயக்கத்தின் தலைவர் டாக்டர் பாத்தி சிக்குகாகி (Farti Shigagi) மால்டாவில் (Malta) கொலை செய்யப்பட்டதையிட்டு பகிரங்கமாக பெருமிதப்பட்டுக்கொண்டார். ரபினிற்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான வணக்கங்கள் ஒன்றும் அவரது மரணத்தினைச் சூழ்ந்து அப்பட்டமாகத் தெரியும் வரலாற்றின் வஞ்சகத்தினைப் பற்றி கவனமாக சிந்திப்பதற்கு ஆரம்பிக்கவில்லை.

யூதர்களின் "சொந்தநாட்டினை" ஸ்தாபித்ததின் பின்னர் இஸ்ரேலியத் தலைவர்– மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது கொலை அரபு இனத்தைச் சேர்ந்தவராலல்ல, மாறாக ஒரு இஸ்ரேல் யூதரால் நிறைவேற்றப்பட்டது.

> **ரபின் தனது வாழ்க்கையை மகாத்மா காந்தியின் வழியில் பின்பற்றவில்லை அவர் அரபு மக்களை அடக்கி ஒடுக்குவதற்கும், பொதுமக்கள் மேல் பயங்கரத்தை கட்டவிழ்த்து விடுவதற்கும், பாலஸ்தீன தலைவர்களைக் கொல்வதற்கான கொலைப்படைகளை அனுப்புவதற்காகவுமே தனது வாழ்நாளை அர்ப்பணித்திருந்தார்.**

ரபினினது விதவை இஸ்ரேலின் எதிர்க்கட்சியான லிக்குட்டின் (Likud) தலைவரை சந்திக்க மறுத்த அதேவேளையில் யசீர் அரபாத்தினை தனது வீட்டிற்கு வரவழைத்திருந்தார். சியோனிச கூடாரத்துக்குள் இன்றிருக்கும் கருத்து வேறுபாடுகள் இஸ்ரேலின் ஆளும் தொழிற்கட்சி அரசாங்கத்திற்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையில் இருக்கும் முரண்பாடுகளிலும் கூர்மையானவை.

மத்தியகிழக்கின் நீண்டகால அரசியல் மாயாயாலங்களை அம்பலப்படுத்துவதற்காகவே வரலாறு நிகழ்வுகளை நடாத்திக்கொண்டு போகின்றது என்று தெரிகின்றது.

முதலாவதாக பாசிச சக்திகளின் வளர்ச்சியும், உள்நாட்டுயுத்தத்தின் பேய்த்தாண்டவமும் சியோனிசத்தின் பிற்போக்குத்தனமான கற்பனாவாதங்களை முடிவிற்கு கொண்டுவந்துவிட்டது. சியோனிச சித்தாந்தத்தின் அடித்தளத்தில் ஒரு தனி யூத அரசினை அமைப்பதின் மூலம் மட்டும்தான் யூதமக்கள் மேலான துன்புறுத்தலும், அடக்குமுறையும் வெற்றிகொள்ள முடியும்.

சியோனிச ஜாலவித்தைக்காரர்கள் சொல்வது போன்று 1948ல் இஸ்ரேலை நிர்மாணிப்பதில் போய் முடிவடைந்த இந்த தேசியவாத முன்னோக்கு யூதமதத்தின் கோட்பாடுகளிலிருந்து தவிர்க்கமுடியாத வெளிப்பாடல்ல. கிழக்குஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கால்வாசிப் பகுதியில் முதலாளித்துவ சமூகஉறவுகளின் பரவலாக்கத்துடன் இணைந்து உருவாகிய யூத இனவழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பரந்துபட்ட யூத தொழிலாளர்கள் புத்திஜீவிகள் மட்டத்தில் தனிஅரசு கோரவேண்டும் என்ற நோக்கமிருக்கவில்லை. பதிலாக அவர்கள் மார்க்சிச, சோசலிச முன்னோக்கை நோக்கித் திரும்பினார்கள்.

எந்த மட்டத்திற்கு இந்த இயக்கம் வளர்ச்சியடைந்திருந்தது என்பதை இந்தக் காலகட்டத்தில் யூத புத்திஜீவிகளும், சோசலிஸ்டுகளும் மார்க்சிசத்தின் வளர்ச்சிக்கு செய்த பாரிய பங்களிப்பிலிருந்து கணித்துப்பார்க்க முடியும். சியோனிச இயக்கம் யூத தொழிலாளர்கள், மாணவ இளைஞர்களிடையே சோசலிசத்தினதும், மார்க்சிசத்தினதும் வளர்ச்சிக்கு எதிராக போர்தொடுக்கும் பிரத்தியேகமான நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. சியோனிசவாதிகளின் வாக்குவாதங்க–ளுக்கு எதிராக மார்க்சிசத்தை பிரதி–நிதிப்படுத்தியவர்கள், யூதமக்களுடைய பணி ஒருபுதிய தேசத்தை உருவாக்குவதல்ல உலகத்தை மாற்றிய–மைப்பதே என விளங்கப்படுத்தினர். யூதர்களுக்கெதிரான அடக்குமுறை அதற்கு வழி திறந்துவிட்ட சமூக அமைப்புமுறையான முதலாளித்துவத்திற்கு முடிவுகட்டுவதால் மட்டும் முடிவுக்கு கொண்டுவரப்பட முடியும்.

சியோனிசம் வெற்றியடைந்தது அதனது கோட்பாடுகளின் பலத்திற்கு அத்தாட்சியாக இருக்கவில்லை. இது சர்வதேச தொழிலாளர்வர்க்கத்தின் வரலாற்றுத் தோல்விகளின் தாக்கத்தினையே உருவாகியது. இந்த தோல்விகள் சமூகஜனநாயகவாத, ஸ்ராலினிச தலைமைகளில் துரோகங்களினால் உருவாகியதுடன் அதனது காட்டுமிராண்டிக்கும் வழிசமைத்தது.

இந்த இனவழிப்பு சந்தேகமில்லாமல் நிறுவிக்காட்டவில்லையா? யூதர்கள் தங்களது சொந்த நாட்டை வைத்திருக்கவேண்டிய தேவையை என அன்று வாதாடப்பட்டது. சியோனிஸ்டுகளினதும், கம்யூனிஸ்ட்கட்சி ஸ்டாலினிஸ்டுக்களும் இஸ்ரேலின் உருவாக்கத்தை ஆதரித்த வேளையில் நான்காம் அகிலம் இது ஒரு மோசமான பொறிக்கிடங்கு என எச்சரித்தது. ஆனால் பாசிசத்தின் வெற்றி ஏற்படுத்திய அதிதிருப்திகள் சோசலிச சர்வதேசவாதத்தின் ஆய்வுகளிலும் பார்க்க பாரமான சுமைகளாகவிருந்தன. இரண்டு, மூன்று தலைமுறை



*1967ல் இராணுவத்தளபதி ரபின்(வலது), பாதுகாப்பு அமைச்சர் மோசே டயான் (நடு*

யூத தொழிலாளர்களும், புத்திஜீவிகளும்–இவர்களைப் போன்றவர்கள் முன்னர் மார்க்சிசவாதிகளாகவும், சோசலிசவாதிகளாகவும் இருந்தனர்.–சியோனிச அரசின் பாதுகாவலர்களாக மாறினார்கள். வரலாற்றுச்சக்கரம் மீண்டும் இப்போது ஒருமுறை சுழன்றிருக்கின்றது. சியோனிச வேலைத்திட்டம் யூதமக்களுக்கு ஒரு பேராபத்து என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

யிற்சாக் ரபினினதும் அவரது கொலையாளியாகிய 25 வயது யிகால் அமிரினதும்(Yigal Amir) வாழ்க்கை வரலாறு இஸ்ரேலிய சமுதாயத்தினது நோய்வாய்ப்பட்ட அரசினது வேர்களையும், கொலையாளிக்கும் அவரால் பாதிக்கப்பட்டவருக்கும் இடையேயான அடிப்படைத்தொடர்பையும் காட்டுகின்றது.

பலஸ்தீனத்தில் பிறந்த ஒரேஒரு இஸ்ரேலின் பிரதமரான ரபின் இருபது வயது முடியமுன்னரே யூத தலைமறைவு இயக்கமான காகநா (Haganah) வின் விசேட படைப்பிரிவான பால்மா (Palmach) வில் சேர்ந்தார். 1948ன் இஸ்ரேலின் சுதந்திரத்துக்கான போரில் தான் 50,000 நிரபராதியான அரபு மக்களை அவர்களது வீடுகளிலிருந்து துப்பாக்கி முனையில் விரட்டுவதற்கு நேரடியாக பங்கு கொண்டிருந்தார் என்பதை 1979ல் தனது வாழ்க்கைச் சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். ரபின் 1967ல் எகிப்து, சிரியா, யோர்தானிற்கு மேல் நடாத்தப்பட்ட ஆறுநாள் யுத்தத்தில் இராணுவப்படைகளின் தலைவராக ஆக்கிரமிப்புக்கு தலைமை தாங்கியதன் மூலம் தேசிய முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவரது மிகப்பெரிய தனிப்பட்ட ரீதியிலான இந்த வெற்றியானது சியோனிசத்திற்குள் வலதுசாரி முகாம் ஒன்று உருவாகுவதற்கு எண்ணை ஊற்றுவதற்கான நிகழ்வுகளை புதிதாக வெற்றியடைந்த பிரதேசங்களில் அரசாங்கத்தால் ஆதரவு வழங்கப்பட்ட குடியேற்றங்களை உருவாக்குவதன் மூலம் தொடக்கி வைத்தது.

1974– 1977ல் தொழிற்கட்சி அரசாங்கத்
தலைமை தாங்கிய ரபின் வெற்றியை
பிரதேசங்களான ஜோர்டான் நதியின் மேற்குக்
கோலான் மலைக்குன்றுகள், காசாப்பிரே
என்பவற்றை தக்க வைப்பதற்காக இஸ்
இராணுவ ஆட்சியின் கீழ் அல்லலுறும் அரபு ம
மத்தியில் குடியிருப்புக்களை உருவாக்குவத
யூதர்களை திரட்டுவதில் முயற்சி செய்
ஆரம்பத்தில் ஆயிரக்கணக்காகவும் 1977ல் ல
அரசாங்கம் பதவிக்கு வந்த பின
பத்தாயிரக்கணக்காகவும் இந்த கைப்பற்றப்
பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டனர். இ
குடியேறியவர்களில் பெரும்பான்மை
ஐக்கியஅமெரிக்கா, சோவியத்யூனியனிலிரு
தொடர்ச்சியான அமெரிக்க அரசாங்கங்க
ஆதரவுடன் சியோனிச அமைப்புக
தெரிவுசெய்யப்பட்டவர்களாவார்.

யூத இனவாதத்தில் படுகேவலமான பிற்போ
கோரிக்கைகள் முன்வைக்கப்பட்
மேற்குக்கரையை ஆக்கிரமிப்பது பை
தேசங்களான சமாரியா (Samaria) யூ
(Judea) விற்கு திரும்புவது பற்
தீர்க்கதரிசனமென நியாயப்படுத்தப்பட்டது. இ
கோரிக்கைகளுக்கு செவிசாய்த்தவ
தீவிரவலதுசாரி பாசிச சக்திகள் என்பதில் ஆச்
ஒன்றுமில்லை. இதற்குள் அமெரிக்கா
புரூக்கிலினில் பிறந்த பாசிசவாதி மேயர் கானே (
Kahane) என்பவரும் அடங்குவார். இவர்
பாதுகாப்பு கழகம் என்பதனை ஆரம்பி
கறுப்பர்களுக்கும், ஏனைய சிறுபான்மையோரு
எதிராக பிரசாரம் செய்ததுடன் சோவியத் யூதர்களு
எதிராக குளிர்கால யுத்த காலத்
தாக்குதல்களையும் மேற்கொண்டார். 1970
இறுதியில் இஸ்ரேலிற்கு குடியேறிய கானே
எதிர்ப்பு காக் (Kach) இயக்கத்தை ஸ்தா
செய்தார்.

படிப்பகம்

www.padippakam.com





*1994ல் "சமாதானத்திற்கான" நோபல்பரிசு பெறும் அரபாத், பேரஸ், ரபின்.*

சிதறியுடைந்த இரண்டாவது மாயை அரபுத்
வாதமாகும். ஆயுதப் போராட்டம் என்ற தீவிர
த்தை எடுத்தபோதும் இறுதியில் அரபுமக்களை
கியொடுக்குவதிலேயே முடிவடைந்தது.

சியோனிச அரசின் ஒரு பொலீஸ் தொங்கு
யாக பாலஸ்தீன விடுதலைஇயக்கம்
றியபோது அதனது தலைவர்கள் பலஸ்தீன
ளை கொன்று குவித்ததற்கு வியூகம் அமைத்த
பல், இராணுவத் தலைவர்களை கட்டித்
வதன் கருத்து இதுதான்.

1984–1992இல் தொழிற்கட்சி–விக்குட்
ங்கத்தின் பாதுகாப்பு மந்திரியாக இருந்த ரபின்
ிரமிக்கப்பட்ட பகுதிகளில் உருவாகிய
தீனிய இளைஞர்களினதும்,
லாளர்களினதும் எழுச்சியான இன்ரிபாடாவை
ம் தோய்ந்த முறையில் அடக்குவதற்கு
ப்பிலிருந்தார். இவரது பதவிக்காலத்தில்
தீன ஆர்ப்பாட்டக்காரர்களின் "எலும்பை
க்குமாறு" இஸ்ரேல் படையினருக்கு புத்தி
ிய அதே நேரத்தில் அல்பாத்தா பல கொரில்லா
கத்தை அரபாத்துடன் இணைந்து ஸ்தாபித்த
ஜிகாட் உட்பட்ட பல பலஸ்தீனிய
யோகத்தர்களை கொல்வதற்கும் படைகளை
பினார்.

1993ன் பலஸ்தீனிய– இஸ்ரேலிய ஒப்பந்தம்
ானிச ஸ்தாபனத்திற்கும், அரபு
ளித்துவத்திற்கும் இடையே இணைப்பு
வாகுவதை சமிக்கை செய்தது. இது
சத்தில் சர்வதேச அரசியல் பொருளாதார
ங்களினால் பலவீனப்பட்டிருந்த இந்தப்
த்தின் முதலாளித்துவ வர்க்கத்தினர் சியோனிச
ிரமிப்பிற்கு எதிராக கிளர்ந்தெழுந்த பலஸ்தீன
ள் தொடர்பான பொதுவான பயத்தினை
ப்படுத்தியது.

இஸ்ரேல் முதலாளித்துவத்திற்கு பெரிய
ரேல் என்ற கனவு இப்பொழுது ஒரு தீய
கி விட்டது மிகவும் மோசமான ஈனஇரக்கமற்ற
டிக்கைகளினாலும் கூட இன்ரிபாடாவை
க்கு கொண்டுவர முடியாமல் போய்விட்டது.
கிரப்பிற்கும், குடியேறியோருக்கும்
விடப்பட்ட பணம் அரசின் பொருளாதார
யல் அடித்தளங்களில் அழிவுகளை
த்தியது. இது நாட்டினுள் சமூகப் பொருளாதார
க்கடிகளின் வளர்ச்சிக்கு வழிதிறந்தது.
னாரு வீதமானோரின் வேலையில்லாத்
ாட்டம், வரவுசெலவுத்திட்டத்தின் கட்டுப்படுத்த
ாத பற்றாக்குறைகள் மோசமான பணவீக்கம்
வை இஸ்ரேல் முதலாளித்துவத்தை
ுளாதார தனிமைப்படுத்தலிலிருந்து
யேறுவதற்கு நிர்ப்பந்தித்தன.

சோவியத்யூனியனின் வீழ்ச்சியானது
தீனவிடுதலை இயக்கமும், அரபு
ளித்துவ ஆட்சிகளும் குளிர்கால யுத்த
தின் இரண்டு வல்லரசுகளின் இடையிலும்
ாடுவதனை ஒரு முடிவிற்கு கொண்டுவந்தது.
நேரத்தில் இது இஸ்ரேலையும்
ீனப்படுத்தியது. வளைகுடாயுத்தம்
யஅமெரிக்காவானது இந்தப் பிரதேசத்தை

கட்டுப்படுத்துவதற்காக இஸ்ரேலை மட்டுமல்ல அரபு ஆட்சிகளான எகிப்து, வளைகுடா அரசுகள் சிரியா ஆகிய நாடுகளையும் சேர்த்துக்கொள்ள முடியும் என்பதனை நிறுவிக்காட்டியது.

இந்த மாற்றங்களின் அடித்தளம் பொருளாதார வாழ்க்கையில் அதிகரித்துவரும் சர்வதேசக் குணாம்சமாகும். உலகச் சந்தையின் அழுத்தமும், இஸ்ரேலின் மேற்கு நாட்டுக் கடன்காரர்களது கோரிக்கையும் ஒரு புதிய அரசியல் ஒழுங்கு முறையை வலியுறுத்தியது. இதன்மூலம் இஸ்ரேல் முதலாளித்துவம் சர்வதேசரீதியாக சந்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், மூலப்பொருட்களையும், மலிந்த கூலியுழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் தனது முயற்சிகளைச் செய்வதற்கு வழிதிறக்கப்பட்டது. இஸ்ரேல் ஒரு அரை வெறுப்புக்குரிய அரசாக இருக்கும்வரை ஐரோப்பா, யப்பான், சீனா, கொரியா என்ற வளர்ச்சியடையும் சந்தைகளில் அதனது தலையீடு தடைசெய்யப்பட்டிருக்கும்.

அதேநேரத்தில் உலகப்பங்குச் சந்தைகள் இஸ்ரேல் அதனது பாரியளவு தேசியமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தினையும், சமூகசேவை அரசஅமைப்புமுறையும் அகற்றி அதனது நிதிச் சந்தையை பரவலாக்கி வெளிநாட்டு மூலதனத்திற்கு இஸ்ரேலிற்கும் அதனது அரபு அயல்நாடுகளுக்கும் இடையில் ஒரு சுமூகமான உறவுகள் ஏற்படுவது இந்தப்பிரதேசத்தில் புதிய சந்தைகளை திறந்து வளங்களை சுரண்டுவதற்கும் எல்லாவற்றிற்கும் மேலாக பாரியளவிலான மலிந்த கூலியுழைப்பை பெற்றுக்கொள்வதற்கும் முன்நிபந்தனையாக இருந்தது.

கடந்த சில வருடங்களாக அரபு முதலாளிகளுக்கும், இஸ்ரேலுக்குமிடையில் உள்ள வர்த்தக நடவடிக்கைகள் பாரியளவில் வளர்ச்சியடைந்தது. 1995 இன் முதல் ஆறு மாதங்களில் மட்டும் எகிப்திற்கும், இஸ்ரேலுக்குமிடையிலான வர்த்தகம் 162 விகிதத்தினால் அதிகரித்தது. அமெரிக்கா, ஐரோப்பிய ஐக்கியநாடுகள்,ஜப்பான் போன்றவை "சமாதான நடவடிக்கை" களினால் கறந்தெடுக்கக்கூடிய லாபத்தின் பெரிய பங்கிற்காக போட்டிபோடுகின்றன.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள், பலகோடி டொலர்கள் செலவிடும் உதவித்திட்டங்கள் இன்னும்பல மூலதனமிடும் திட்டங்கள் வெளிநாட்டு மூலதனத்தை மத்தியகிழக்கில் அதிகரிப்பதற்காக உருவாக்கப்படுகின்றன.

இஸ்ரேலின் பிரதமமந்திரி கொல்லப்படுவதற்கு ஆறு தினங்களுக்கு முன்னராகத்தான் ஜோர்டான் மன்னர் குசைன், யசீர் அரபாத், அமெரிக்க உள்நாட்டு செயலர் கிறிஸ்தோபர் இன்னும் ஆயிரம் மத்தியகிழக்கினையும், உலகின் ஏனைய பகுதிகளையும் சேர்ந்த அரசாங்க,வர்த்தக பிரதிநிதிகள் மூன்றுநாள் கூட்டமொன்றை ஜோர்டானின் அம்மான்நகரில் நடாத்தினார்கள்.இதனைத் தொடர்ந்து அமெரிக்க Wall Street Jornal பத்திரிகைக்கு பேட்டியளித்த ஜோர்டானிய வர்த்தகப் பிரமுகர் "அரசாங்கங்களிற்கிடையேயான சமாதானம் வியாபாரிகளுக்கிடையிலான சமாதானமாகியிருக்கின்றது." என்றார்.

இந்த நிகழ்வுகளில் பலஸ்தீனிய விடுதலைஇயக்கத்தின் பிரதானமான பாத்திரம் இஸ்ரேல் படைகள் வெளியேறிய பகுதிகளில் பலஸ்தீனிய, இஸ்ரேல் சர்வதேச மூலதனங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான பொலீஸ் வேலையைச் செய்வதாகும். மேற்குக் கரையிலும், காசா பிரதேசத்திலும் தொழிலாளர்கள் சியோனிஸ்டுக்களினால் சுரண்டப்பட்டதிலும் பார்க்க எதுவிதத்திலும் குறைவாக பலஸ்தீனவிடுதலை இயக்கத்தின் ஆட்சியினால் சுரண்டலுக்கு முகம்கொடுக்கவில்லை.

முதலாளிகள் உற்பத்தியை பலஸ்தீனவிடுதலைஇயக்கத்தினதும், அரபு ஆட்சியாளர்களினதும் கட்டுப்பாட்டிலுள்ள மலிந்த கூலியுழைப்பு பிரதேசங்களுக்கு மாற்றுவது இஸ்ரேலியத் தொழிலாளர்களைப் பொறுத்தளவில் அவர்களது வாழ்க்கைத்தரங்களின் மேல் பாரிய பேரழிவுகளுக்கு வழிவகுக்கும்.

சியோனிச முதலாளித்துவத்திற்கு அத்தியாவசியமான இந்த இஸ்ரேலினது கொள்கை மாற்றமானது அதனால் வளர்த்தெடுக்கப்பட்ட தீவிர வலதுசாரிகளின் மத்தியில் ஒரு பெரிய வெடிப்பினை உருவாக்கியுள்ளது. பங்குனி 1994 இல் கீபுறுான் நகரத்தில் அமெரிக்காவில் பிறந்த ஜோல்ட்ஸ்ரைன் என்ற அரபு எதிர்ப்பு ஜாக் இயக்க வெறியினால் பலஸ்தீனியர்களுக்கு மேல் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளானது ராபினும், அவரது தொழிற்கட்சியும் வளர்த்தெடுத்துவிட்ட அரசியல், பசுமாசுரன் தன்மையை வெளிப்படுத்தியது. பதினெட்டு மாதங்கள் கழிந்து இவர்களது இலக்கிற்கு ராபினே பலியானார்.

மிகால் அமிர் இந்த குழம்பிய விரக்தி–யடைந்த சக்திகளின் ஒரு சரியான பிரதிநிதியாவார். ஒரு மத்தியதரவர்க்க பழமைவாத மதக்குடும்பத்தி–லிருந்து வந்த இவர் "கொடூரமானவர்கள்"என்று அழைக்கப்பட்ட இஸ்ரேலிய இராணுவப்பிரிவின் அங்கத்தவராவார். பல்கலைக்கழகத்தில் மதவெறியாளனாகவும், அரபு எதிர்ப்பு குடியேற்றக்காரரின் ஆதரவாளர்களாகவும் உருவெடுத்த இவர் பாதுகாப்புப் படைகளுக்கும், பொலீசிற்கும் நன்கு பரீட்சயமானவராவர்.

Melborn Age என்ற பத்திரிகைச் செய்தியின்படி இஸ்ரேலிய அரசாங்கம் இவரை 1992ல் லெத்திலார்தீன் றீகா நகரிற்கு யூதக் குடியேற்றக்காரருக்கு கீபுறு மொழியினை படிப்பிப்பதற்காக அனுப்பியிருந்தது. இதே கட்டுரையில் இஸ்ரேலிய வெளிநாட்டுமந்திரி அலுவலகத்திலிருந்து கிடைத்த செய்திகளின் அடித்தளத்தில் இவர் றீகாவிற்கு அனுப்பப்படுவதற்கு முதல் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையான சின் பெற் (Shin Bet) இனால் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதே தகவல் அமிர் கார்த்திகை 4ம் திகதி பிரதமமந்திரியை சுட்டுக்கொல்லும் நேரத்தில் பிரதமமந்திரியின் மெய்ப் பாதுகாவலர்கள் சிலருடன் சினேகிதம் கொண்டிருந்தார் என்றும் தெரிவிக்கின்றது. இந்த தொடர்புகள் இஸ்ரேலிய அரச இயந்திரம், இராணுவம், பொலீஸ், புலனாய்வுத்துறை, நீதிமன்றம், நிர்வாக அதிகாரத்துவம் ஆகியவற்றினுள் எந்த மட்டத்திற்கு தீவிர மதவாத வலதுசாரிகள் ஊடுருவி இருக்கின்றார்கள் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது.ராபினின் மரணத்திற்கு ஒரு கிழமை அஞ்சலிசெலுத்தியதின் பின்னர் அவரது பதவியை ஏற்றுக்கொண்ட சிமோன் பேரஸ் (Shimon Peres) எடுத்த முதல் நடவடிக்கைகள் அரபு மக்களுக்கும், இஸ்ரேல் தொழிலாளர்களுக்கும் "சமாதான நடவடிக்கைகளைத் தொடர்வது" என்பது என்னவென்பதை சுட்டிக்காட்டியது.

கார்த்திகை 13ம் திகதி பலஸ்தீனியவிடுதலை இயக்கமும், இஸ்ரேலும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை எதிர்க்கும் தென்லெபனானிலுள்ள ஏனைய பலஸ்தீனக் குழுக்களினது முகாம்களுக்கு குண்டு வீசுவதற்கு உத்தரவிட்ட பேரஸ் அடுத்த தினம் மேற்குக் கரையின் யூத குடியேற்றங்களுக்கு சென்று தனது ஆதரவுகளைத் தெரிவித்தார். அத்துடன் இரண்டு தொழிற்துறை வலயங்களை மேற்குக் கரையில் உருவாக்குவதற்கான திட்டங்களை அறிவித்தார்.

இதன்மூலம் இஸ்ரேலிய முதலாளிகள் பலஸ்தீனியர்களை இஸ்ரேலுக்குள் நுழைவதற்கு அனுமதிக்காமல் மலிந்த கூலியுழைப்பில் சுரண்ட முடியும்.

தவிர்க்கப்படமுடியாமல் இஸ்ரேலிலும், மத்தியகிழக்கிலும் ஏற்படும் மாற்றங்கள் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு இட்டுச்செல்லும். சியோனிச அரசில் வாழும் தொழிலாளர்கள் ஒப்பீட்டு ரீதியில் வசதிபடைத்த வாழ்க்கை நிலைமைகள் பாரியளவிலான வேலை நீக்கங்கள், சம்பளவெட்டுக்கள், சமூகசேவைக் குறைப்புகளினால் நிர்மூலமாக்கப்படுவதை உணர்வார்கள். எந்த மட்டத்திற்கு தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான நலன்கள் "யூத அரசினைப்" பாதுகாப்பது என்ற பெயரில் அடிபணிய–ப்பண்ணப்படுகின்றதோ அந்த அளவிற்கு இந்த நெருக்கடியானது தீவிர வலதுசாரி கன்னைகளினையும், பாசிச சக்திகளினையும் வளர்த்துவிடும் கொடுரமான வடிவத்தை எடுக்கும். மத்திய–கிழக்கின் அரபு, யூத தொழிலாளர்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களிற்கும் கடந்த பத்தாண்டுகளின் பாடங்கள் தேசியவாத வேலைத்திட்டத்தின் அடித்தளத்திலான அனைத்து இயக்கங்களினதும் தோல்வியைக் காட்டுகின்றன.

தேசியவாத முன்னோக்கு தொழிலாளர் வர்க்கத்தினைப் பிரிப்பதற்கும், குழிபறிப்பதற்கும் மட்டும்தான் என்பதனை மீண்டும் அனுபவங்கள் காட்டுகின்றன. இது தொழிலாளர்வர்க்கத்தின் நலன்களுக்கு சேவை செய்யவில்லை பதிலாக முதலாளிகளையே பாதுகாக்கின்றது.

மத்தியகிழக்கில் வறுமை, ஒடுக்குமுறை, இனவாதம், வெளிநாட்டு ஆதிக்கம் ஆகியவற்றினை முடிவிற்கு கொண்டுவருவதற்கான ஒரே வழி அரபு, இஸ்ரேலிய முதலாளித்துவங்களுக்கு எதிராக அரபு, யூத தொழிலாளர்கள் ஐக்கியப்படவேண்டும்.

இந்தப் பிரதேசத்தின் செயற்கையான எல்லைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும். வெளிநாட்டு முதலாளிகளாலும், உள்நாட்டு ஆட்சியாளர்களாலும் தூண்டிவிடப்படும் வெறுப்பும், பயமும் ஒரு முற்போக்கான வழியில் இந்தப்பிரதேசத்தினை ஐக்கியப்படுத்துவதற்கான போராட்டத்தினால் தோற்கடிக்கப்படவேண்டும். இந்தப்பணிக்கு பொருத்தமானது சர்வதேச சோசலிச வேலைத்திட்டம் மட்டுமே.

**சிதறியுடைந்த இரண்டாவது மாயை அரபுத் தேசியவாதமாகும். ஆயுதப் போராட்டம் என்ற தீவிர வடிவத்தை எடுத்தபோதும் இறுதியில் அரபுமக்களை அடக்கியொடுக்குவதிலேயே முடிவடைந்தது.சியோனிச அரசின் ஒரு பொலீஸ் தொங்கு சதையாக பாலஸ்தீன விடுதலைஇயக்கம் உருமாறியபோது அதனது தலைவர்கள் பலஸ்தீன மக்களை கொன்று குவித்ததற்கு வியூகம் அமைத்த அரசியல், இராணுவத் தலைவர்களை கட்டித் தழுவுவதன் கருத்து இதுதான்**

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய சோசலிசத்தொழிலாளர்கழகம் தமிழ்நாடு முதல்அமைச்சருக்கு பகிரங்கக்கடிதம்

நான்காம்அகிலத்தின் அனைத்துலகக்குழுவுடன் ஐக்கியம் கொண்ட இந்தியாவில் உள்ள ட்ரொஸ்கிசக்கட்சியான சோசலிசத்தொழிலாளர்கழகம் யூலை 10ம் திகதி காலை பத்துமணிமுதல், பன்னிரெண்டு மணிவரை சென்னையிலுள்ள இலங்கைத்தூதரகத்தின் முன்னால் மறியல் செய்ய அனுமதி கோரியது. இந்த அனுமதி, தமிழ்நாடு பொலீஸ் மற்றும் சென்னை பொலீஸ் கமிஷனர் ஆகியோரின் கட்டளைப்படி நிராகரிக்கப்பட்டது. இந்த நிராகரிப்பை சோசலிசத்தொழிலாளர்கழகம் வன்மையாக எதிர்க்கின்றது. அனுமதியை நிராகரித்த பொலீஸ் ஆணை "கிரிமினல் சட்டத்தின் கீழ் மறியல் செய்யும் செயல் குற்றங்களைக் கவரும்" ஆதலால் மறியல் செய்ய அனுமதி நிராகரிக்கப்பட்டுள்ளது என்று கூறுகின்றது.

உங்களது உத்தரவின் கீழ் தமிழ்நாடு பொலீஸ் கூறியுள்ள காரணம் எதை வெளிப்படுத்துகின்றது என்றால், "ஜனநாயக" அரசாங்கம் எனப்படும் உங்களது அரசாங்கத்தின் ஜனநாயக விரோதத் தன்மையையேயாகும். இதன் பின் பதினெட்டு நாட்கள் கழித்து ஆயிரம்விளக்கு பொலீஸ்நிலையத்தின் பொலீஸ் அலுவலர்கள் ஒருபடி முன்னேறியுள்ளனர். அவர்கள் "இலங்கையில் இனவாதயுத்தமும், இந்தியமுதலாளித்துவமும்" என்ற தலைப்பின் கீழ் சோசலிசத்தொழிலாளர்கழகத்தின் தலைமை உறுப்பினர்களில் ஒருவர் உரையாற்ற இருந்த கூட்டத்தை ஏற்பாடுசெய்தவர்களிடம் சோசலிசத்தொழிலாளர்கழகத்தின் பேச்சாளர் ஆற்ற இருந்த உரையை எழுத்தில் முழுமையாக, கூட்டம் நடத்துவதற்கான அனுமதி விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும் என்று கோரினர். இது மிதக்கும் பனிப்பாறையின் உச்சியின் நுனியை மட்டும் கண்ணுக்குக் காட்டுகின்றது. மிகவும் அடிப்படையான உரிமைகளை அடக்கி, ஒடுக்குவதற்கு முதலாளித்துவ ஜனநாயகத்தினைத் தகர்த்து தரைமட்டமாக்கப்பட்ட முன் முகப்பின் இடிபாடுகளின் கீழ் உங்களது அரசாங்கம் ஆற்றிவரும் தயாரிப்புகளின் முன்னேறிய நிலையைத்தான் இது வெளிப்படுத்தியுள்ளது.

மத்தியஅரசாங்கத்தால் நிறுவப்பட்ட தேசிய மனித உரிமைகள் ஆணையம் என்று அழைக்கப்படும் அமைப்பு கூட அது ஆரம்பிக்கப்பட்டு பதினெட்டு மாதங்களுள் காவல் கைதிகள் மற்றும் சிறைக்கைதிகளின் மரணங்கள், பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்கள், மற்றும் பொலீஸ் நடத்திய சித்திரைவதைகள் பற்றிய 7,000 முறைமீடுகளை (மே 31 வரை) பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது. இவற்றுள் ஏழில் ஒருபகுதி அல்லது எட்டில் ஒரு பகுதி முறைமீடுகள் தமிழ்நாட்டில் இருந்து பெறப்பட்டவை என்று அது குறிப்பிட்டுள்ளது. (இந்து பத்திரிகை யூலை 17, 1995 பக்கம் 6)

உண்மை எதுவென்றால் நீங்கள் தொழிலாளர்வர்க்கத்தின் கட்சியான சோசலிசத்தொழிலாளர்கழகம் அதன் அடிப்படை ஜனநாயகஉரிமையைப் பயன்படுத்த அதற்குள்ள உரிமையை மறுத்துள்ளீர்கள். சோசலிசத்தொழிலாளர் கழகத்தின் தோழமைக் கட்சியான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் நடத்திய பகிரங்கக்கூட்டத்தில் அதற்கு எதிராகப் பாசிஸ்டுகள் மற்றும் இலங்கையின் அரச படையினர் ஒன்றாகத் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். இதை எதிர்த்து இலங்கைத் தூதரகத்தின் முன் மறியல் செய்து இலங்கையிலுள்ள தனது தோழமைக் கட்சியினுடனான தனது சர்வதேச ஐக்கியத்தை வெளிப்படுத்தச் சோசலிசத்தொழிலாளர் கழகத்திற்கு உள்ள அடிப்படை உரிமையை நீங்கள் மறுத்துள்ள அதே மூச்சில் வெறும் நான்கு நாட்கள் கழித்து யூலை 14ம் திகதி, தமிழ் வகுப்புவாத முதலாளித்துவக் கட்சியான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இலங்கைத் தூதுவரகத்தின் முன் மறியல் செய்ய நீங்கள் அனுமதித்துள்ளீர்கள். இதற்குப்பின் ஒன்றன்பின் ஒன்றாக ஏறக்குறைய பத்து, பன்னிரெண்டு முதலாளித்துவக் கட்சிகளுக்கு அவை இலங்கைத் தூதுவரகத்தின் முன் மறியல் செய்ய நீங்கள் அனுமதி கொடுத்துள்ளீர்கள். வேறு வார்த்தைகளில் கூறினால் நீங்களும் உங்களது பொலீசும் எழுத்துமூலம், மற்றும் செயல்மூலம் எதைக்கூற முயற்சிக்கின்றீர்கள் என்றால், சர்வதேச தொழிலாளர்வர்க்கத்தின் வரலாற்று நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி, அது இலங்கையில் உள்ள தனது தோழமைக்கட்சியின் பாதுகாப்பிற்காக இலங்கைத் தூதரகத்தின் முன் மறியல் செய்யும் உரிமையைப் பயன்படுத்துமாயின், அது "கிரிமினல் சட்டத்தின் கீழ் குற்றங்களைக் கவரும்" என்பதையே. ஆனால் அதேநேரத்தில் உங்களது சக முதலாளித்துவ வகுப்புவாதக் கட்சிகளுக்கு அதே இலங்கைத் தூதுவரகத்தின் முன்னால் அக்கட்சிகளுக்கு உங்களால் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது உங்களது வார்த்தைப்படி அது எந்தவிதத்திலும் "கிரிமினல் சட்டத்தின் கீழ் குற்றங்களைக் கவராது" என்று அர்த்தமாகிறது.



அருண்குமார்

இது எதை அர்த்தப்படுத்துகின்றது என்றால், நீங்கள் உங்களது முதலாளித்துவ வர்க்கத்தை, மற்றும் முதலாளித்துவக் கட்சிகளை அவை மறியல் செய்யும் உரிமையை செயலிற் பயன்படுத்த மட்டுமல்லாது, அவை மறியல் செய்வதற்கு முன்னர், ஆர்ப்பாட்டம் செய்யும் மற்றும் கூட்டங்கள் நடத்தும் உரிமைகளை கூட பயன்படுத்த இடமளிப்பீர்கள் என்பதையே ஆகும். ஆனால் தொழிலாளர்வர்க்கம் மற்றும் அதன் கட்சியான சோசலிசத்தொழிலாளர்கழகம், அவை இலங்கைத் தூதரகத்தின் முன்னால் மறியல் செய்ய உங்களிடம் அனுமதி கோருவனவாயின் நீங்கள் உடனே அனுமதியை நிராகரிப்பதோடு, சோசலிசத்தொழிலாளர்கழகம் மற்றும் தொழிலாளர்வர்க்கம் மட்டும் மறியல் செய்தால் அச்செயல் "கிரிமினல் சட்டத்தின் கீழ் குற்றங்களைக் கவரும்" என்று மிரட்டும் உங்களது கட்டளை உங்களது கிரிமினல் சட்டங்களின் வர்க்க தன்மையை வெளிப்படுத்துகின்றது.

நான்காம்அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப்பகுதியான புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்துடன் சோசலிசத்தொழிலாளர்கழகம் நெருக்கமாக உழைத்து வருவது உங்களது அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் இனவெறி அரசியலுக்கு எதிராக கொள்கை மாறாது பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் தொடர்ந்து போராடி வந்த பெருமை மிக்க வரலாறுதான் புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் வரலாறு. அது இந்திய உபகண்டத்தின் தொழிலாளர்வர்க்கத்தை உலகத் தொழிலாளர்வர்க்கத்தின் ஒரு பகுதியாக கொழும்பு அரசாங்கத்தின் சிங்கள இனவெறிக்கு எதிராகவும், தமிழீழ விடுதலைப்புலிகளின் முதலாளித்துவ தேசியவாதத்திற்கு எதிராக ஐக்கியப்படுத்த சோசலிசத்தொழிலாளர் கழகத்தோடு ஒத்துழைத்து வருகின்றது. வடகிழக்கிலிருந்து இலங்கைத் துருப்புகளை வாபஸ் வாங்க புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் போராடி வருகின்றது. அது தீவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்துவரும் தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராக சந்திரிக்கா குமாரதுங்காவின் மக்கள் கூட்டணி அரசாங்கம் தொடுத்துவரும் இனவாத யுத்தத்தின் அச்சம் தரும் விளைபயன்களை அம்பலப்படுத்தப் போராடுகின்றது. முழுமையாக இக் காரணங்களினாலேயே புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம், பாசிஸ்டுகளால் மற்றும் அரச படைகளால் தாக்கப்பட்டது.

இலங்கை விமானப்படை விமானங்கள் யாழ்ப்பானத்தில் நூற்றுக்கணக்கான அப்பாவி ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேல் தாறுமாறாகக் குண்டுகள் போடுவதற்கு எதிராக தமிழீழப் போராட்டத்தை நசுக்க இந்திய முதலாளித்துவம் தனது துருப்புகளை அனுப்பியதற்கான வர்க்க தேவைகளை மூடிமறைக்க நீங்கள் 1987ம் ஆண்டு இந்திய–இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதற்கு முன்பும், பின்பும் முதலைக்கண்ணீர் விட்டீர்கள். ஆனால் இம்முறை நீங்கள் அந்த முதலைக்கண்ணீரைக்கூட விடவில்லை. இது பொதுவாக இந்திய முதலாளித்துவ அரசாங்கத்திற்கு எதிராகவும், குறிப்பாக உங்களது அ.இ.அதி.மு.க அரசாங்கத்திற்கு எதிராகவும் வெறுப்பு உண்டாக்குகின்ற நீங்காப்பழியைச் சுமத்தியுள்ளது.

> **இந்தியப் பேரின வெறியின் அடிப்படையில் புலிகளிற்கெதிரான பிரச்சாரமென இலங்கைத் தமிழர் விரோதப் பிரச்சாரத்தை நீங்கள் தொடுத்து வருகின்றீர்கள்.**

இன்று தமிழ்ச் சிறுபான்மையினருக்கு எதிராகக் கொழும்பு அரசாங்கம் இனவாத யுத்தத்தை தொடுத்து வருகின்றது. அதேநேரத்தில் அது பத்திரிகைச் சுதந்திரத்தை ஒடுக்குகின்றது. தொழிலாளர்களை மற்றும் தென்னிலங்கையின் இரணவிலவில் உள்ள அமெரிக்க தளத்தை எதிர்ப்பவர்களை அது சுட்டுப் பொசுக்குகின்றது. இவை அனைத்தையும் நீங்கள் முழுமையாக உள்ளம் உவர்ந்து ஆதரிக்கின்றீர்கள்.

நீங்கள் கொழும்பு அரசாங்கத்திற்கு அளிக்கும் ஆதரவு பொதுவாக முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க நலன்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. அதேவேளையில் அது இந்திய மூலதனம் இலங்கையில் செய்துள்ள முதலீடுகள் மற்றும் இந்திய ஏற்றுமதிக் கம்பனிகள் இலங்கையுடன் நடத்தும் வர்த்தகம் முதலியவற்றைப் பாதுகாக்கும் நோக்கினைக் குறிப்பாகக் கொண்டுள்ளது. இந்த நலன்களைத்தான் நீங்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றீர்கள், பாதுகாக்கின்றீர்கள். இலங்கையின் இனவாதயுத்தத்திலிருந்து இந்தியாவிற்கு அகதிகளாக வந்தவர்களை நீங்கள் அரசியல் கைதிகளாகப் பல பாதுகாப்பு முகாம்களில் சிறைப்படுத்தி துன்புறுத்தி வருகின்றீர்கள். இவர்களைத் தவிர இலங்கையிலிருந்து இலட்சக்கணக்கான தமிழீழ அகதிகள் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளார்கள். இவர்களுச
தேவையான மிகவும் அடிப்படையான உ
மருத்துவ, கல்வி, கலாச்சார மற்
வீட்டுவசதிகளைக்கூட நீங்கள் மறு
வருகின்றீர்கள். இந்தியப் பேரின வெறி
அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகள் வி
பிரச்சாரத்தை உண்மையில் தமிழீழத் தமிழர் வி
பிரச்சாரத்தை நீங்கள் தொடுத்து வருகின்றீ
இது வேறொன்றும் அல்ல. இந்தியாவில் உ
தொழிலாளர்வர்க்கம் மற்றும் ஒடுக்கப்படும்
மக்கள் சிறீலங்காவில் மற்றும் தமிழீழத்தில் உ
தமது வர்க்க சகோதரர்களுடன், சகோதரிகளு
கொண்டுள்ள வர்க்க ஐக்கியத்தை உடைப்ப
இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் மற்றும்
திராவிடப்பகுதி என்று அழைக்கப்படும் பகு
மேற்கொண்டுள்ள ஆற்றொணாத மற்
வெறுக்கத்தக்க முயற்சியா
தமிழீழவிடுதலைப்புலிகளின் பயங்கரவ
என்றழைக்கப்படும் "அபாயத்தை" எதிர்த்துப் போ
என்ற கந்தலாய்ப்போன மூடுதிரையின் கீழ் அதி
ஆயுதங்கள், தளவாடங்கள் மற்றும் வாகனங்
வாங்கி மாநிலப் பொலீசை உங்களது அரசா
நவீனமயமாக்கியுள்ளது. அதோடு அது பெ
படையை மேலும் "நவீனமயமாக்க" பெரு
நிதியை டில்லியிடம் கோரியுள்ளது. இது
எதற்குமல்ல, ஏனைய மாநில அரசாங்கங்களு
போட்டிபோட்டு ஏகாதிபத்திய நாடு க
கம்பனிகளுக்கு அதிமலிவான கூலிஉழை
வழங்க இந்த அதிநவீனமயமாக்கப்பட்ட பெ
படையைத் தமிழ்நாட்டின் தொழிலாளர்வர்க்கத்
மற்றும் ஒடுக்கப்படும் பரந்த மக்களுக்கு எதி
பயன்படுத்துவதற்கே ஆகும்.

சோசலிசத்தொழிலாளர்கழகமும் எ
உலகக்கட்சியான அனைத்துலகக்குழுவி
வழிநடாத்தப்படும் நான்காம்அகில
தமிழீழவிடுதலைப்புலிகள் சம்பந்தமாகக் கொண்
நிலைப்பாட்டை நாம் தெளிவாக மற்
வெளிப்படையாகக்கூற விரும்புகின்றோம்.
தமிழீழவிடுதலைப்புலிகளை ஒரு முதலாளித்
தேசியவாத இயக்கம் என்று கருதுவதை இ
சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஒடுக்கப்படும்
தமிழ் மக்களை, தமிழீழவிடுதலைப்புலிக
முதலாளித்துவ தேசியவாத வேலைத்திட்டத்
எதிராக, நமது பாட்டாளிவர்க்க சர்வதேச ம
சர்வதேச சோசலிசப் பதாகையின் கீழ் அணித
நாம் போராடி வருகின்றோம்.

சோசலிசத்தொழிலாளர்கழக
புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் தோழர்களுக்கு எ
பாசிச மற்றும் அரச தாக்குதலை எதிர்த்து இ
தொழிலாளர்வர்க்கத்தின் மத்தியிலும், ஒடுக்கப்
பரந்த மக்கள் மத்தியிலும் தனது அரசியல் பி
இயக்கத்தை மேலும் அதிகப்படுத்தும்.
பேச்சுரிமை, பத்திரிகைச்சுதந்திரம் மற்றும் ம
செய்யும் உரிமை ஆகியவற்றிற்கு எதிராக உங்
அரசாங்கத்தின், பொலீசின் எந்த ஒரு அத்துமீ
எவ்விதத்திலும் சாதாரண
எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. என்பதை நீ
எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நம்பி இருக்க

அருண்குமார்
தேசியசெயலாளர்,
சோசலிசத்தொழிலாளர்கழகம்

படிப்பகம்

www.padippakam.com



# காதிபத்தியவாதிகளின் உதவி கோரி
# விடுதலைப்புலிகள்
# ரச்சாரம்.

ழ விடுதலைப்புலிகள் ஏகாதிபத்திய ஆளும்
்தின் உதவியை தம்பக்கம் வென்றெடுக்கும்
த்தில் ஈடுபட்டுள்ளனர். ஏகாதிபத்தியவாதிகள்
ஜன ஐக்கியமுன்னணியின் பேரில் காட்டும்
றை விடுதலைப்புலிகளை மனங்கலங்கச்
ள்ளது.

இலங்கையின் அரசியல் நெருக்கடியின்
ில் பொதுஜனமுன்னணியை ஆட்சியில்
த மேற்கத்தைய ஆளும் வர்க்கங்களின்
வு கிடைத்தது. அரசாங்கத்துக்கும்,
லைப்புலிகளுக்குமிடையே சமரசத்தை
ாக்க இடம்பெற்ற பெரும் முயற்சிகளில்
த்தியவாதிகள் முன்னணியில் நின்றனர்.

இரு தரப்பினருக்கும் இடையேயான
ார்த்தைகள் உடைந்து போனதன் பின்னர்
ஜனமுன்னணி இனவாத யுத்தத்தினை
பித்ததைத் தொடர்ந்து ஏகாதிபத்திய
்கங்கள் அதற்கு அப்பட்டமான ஆதரவு
ின. இன்று அரசாங்கம் முன்வைத்துள்ள
யல் தீர்வு யோசனைகள்' அவர்களின்
ாரத்துடன் தயார் செய்யப்பட்டவை.

இன்று இலங்கையில் நிலவும் வர்க்க
மையினுள் தமது செல்வாக்கை
துக்கொள்ளவும் தொழிலாளர்–ஒடுக்கப்படும்
ள ஒடுக்கித் தள்ளவும் இச் சந்தர்ப்பத்தில்
ஜனமுன்னணி அரசாங்கத்தை நல்லதும்,
முமான ஒரு ஆயுதமாக ஏகாதிபத்தியவாதிகள்
கின்றனர்.

இலங்கையின் ஈடாட்டம் கண்ட அரசியல்
மையினுள் சிங்கள, தமிழ் முதலாளி
த்தினை தமது ஆணையின் கீழ்
திரட்டிக்கொள்ள ஏகாதிபத்தியவாதிகள்
ான ஒரு கொடிய தலையீட்டுக்குத் தன்னும்
உள்ளனர்.

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளுக்கு
ம் வசதிகள் வழங்குவதை இலங்கை ஆளும்
த்தின் மீது தமது நெருக்குவாரத்தைக்
ர்வதற்கான ஒரு உபாயமாக மேற்கத்தைய
ரின் முதலாளிகள் கருதி வந்தனர். இன்று
நிலைப்பாடு மாற்றம் கண்டமை– சிலவேளை
தற்காலிகமானதாகவும் இருக்கலாம்– தமக்கு
த ஒரு அடியாக விடுதலைப்புலிகள்
கின்றன.

இலங்கை முதலாளி வர்க்கத்துடனான
க்கல், வாங்கல்களில்
த்தியவாதிகளிடமிருந்து கிடைத்த இந்த
யை விடுதலைப்புலிகள் ஒரு பக்கபலமாகப்
த்தி வந்தது. இன்று நிலமை மாறியுள்ளதால்
ளின் உதவியை தம்பக்கம் வென்றெடுக்க
லைப்புலிகள் போட்டிப் பிரச்சார
க்கைகளில் குதித்துள்ளது.

லண்டன், பாரிஸ், கோப்பன்கேகன், சூரிச்,
ா, பேர்லின், டொரன்டோ, சிட்னி முதலான
ளில் விடுதலைப்புலிகள் இந்த பிரச்சாரக்
்களையும், ஊர்வலங்களையும் நடாத்தியதன்
உதவி கிடைக்க வேண்டியது
ஜனமுன்னணி அரசாங்கத்துக்கு அன்றி
என ஏகாதிபத்தியவாதிகளுக்கு எடுத்துக்
தையே நோக்கமாகக் கொண்டிருந்தது. பாரிஸ்
த்தில் பேசிய விடுதலைப்புலிகள்
ப்பிரமுகர்களில் ஒருவரான லோரன்ஸ் திலகர்
்தைய நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு
ி வழங்கும் அறிக்கைகளை
ிட்டமையையிட்டு வருத்தம் தெரிவித்தார்.
கை அரசாங்கத்துக்கு இராணுவ உதவி
வதால் "எதுவித நன்மையும் கிட்டாது."
் மேற்கத்தைய நாடுகளுக்குப் புரியவைக்க
விடுதலைப்புலிகள் பெரும் முயற்சி எடுத்து வருகின்றது. "இன்சைட் ரிப்போர்ட்" (Inside Report) என்ற விடுதலைப்புலிகளின் பத்திரிகையில் "இனப்பிரச்சினையும் மேற்கத்தைய நாடுகளும்" என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"அல்லல்படும் தரப்பினர் என்ற முறையில் தமிழ் தேசிய இனம் மேற்கத்தைய நாடுகளிடம் வேண்டுவது பிரச்சினையை சமாதானமான முறையில் தீர்த்துக்கொள்ள விடுதலைப்புலிகளையும், அரசாங்கத்தையும் ஊக்குவிக்க உபயோகமான நடவடிக்கை எடுக்கும்படியே. அங்ஙனம் இல்லாமல் பிரச்சினையை உண்மையில் நீடிக்கவும், பேரழிவுகளை ஏற்படுத்தவும் கூடிய விதத்தில் இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவதில் உத்சாகமாக பங்குகொள்வது அல்ல." (1995 யூன் 30)

விடுதலைப்புலிகள் ஏகாதிபத்திய மேற்கத்தைய நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கும் இராணுவ உதவிகளால் தமக்கு ஏற்படக்கூடிய தீங்குகளையிட்டு கலங்கிப் போயுள்ளனர். அவர்கள் ஏகாதிபத்தியவாதிகள் 'உபயோகமான நடவடிக்கை' எடுப்பர் என நம்புகின்றனர். ஏகாதிபத்தியவாதிகள் அரைக்காலனித்துவ நாடுகளில் தமது செல்வாக்கை அதிகரிக்கும் பொருட்டு "மனிதாபிமான உரிமைகளைக் காத்தல்", சமாதானத்தை ஏற்படுத்தல்" என்ற வாய்ச் சவடால்களை முன்வைத்தவாறு தலையீடு செய்கின்றனர்.

பொதுஜனமுன்னணி அரசாங்கத்துடன் போட்டியிட்டவாறு விடுதலைப்புலிகள் அவர்களிடம் வேண்டுவதும், இலங்கையில் அமைதியை பேணத் தலையிடுங்கள் என்பதே. பின்வரும் கூற்று இதை நன்கு தெளிவுபடுத்துகின்றது: "அதுமட்டுமல்ல மேற்கத்தைய நாடுகள் இலங்கையில் அமைதி ஏற்படுத்தப்பட வேண்டுமென மனப்பூர்வமாக வேண்டி அறிக்கை விடுத்துள்ளதுடன் சிற்சில நாடுகள் மோதலுக்கு முடிவுகட்ட தலையீடு செய்யவும் தயாராகவுள்ளன." (அதே பத்திரிகை)

விடுதலைப்புலிகள் மேற்கத்தைய ஆளும் வர்க்கத்தினரை மிகச்சிறந்த சமாதான தூதரென்று புகழாரம் சூட்டுவதோடு அதன் தலையீட்டினால் ஓர் ஒழுங்கமைப்பை ஏற்படுத்த முயற்சிக்கிறது. தற்போது விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு இதுவே.

அது ஏனைய முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களைப் போன்றே ஏகாதிபத்தியத்தின் அனுசரணையுடன் ஓர் ஒழுங்கமைப்பை ஏற்படுத்திக்கொள்ளும் முட்டிமோதலாகும். அது சிலசமயம் வேறு ஓர் அரசாகவோ அல்லது அதை ஒத்த ஒழுங்கமைப்பாக அவர்களால் எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய ஓர் பிரதேசம் நிச்சயமாக ஏகாதிபத்திய மலிவு உழைப்பு சுரண்டலுக்கான ஒழுங்கமைப்பு ஆகும்.

மேற்கத்தைய முதலாளித்துவ ஆட்சியாளர் துடித்துக்கொண்டுள்ள நிலையிலும் கூட தமிழ் தேசிய முதலாளித்துவத்துக்கு வேறு மாற்றுத் திட்டமே கிடையாது. இதைத்தான் விடுதலைப்புலிகள் மீண்டும் நிரூபித்துள்ளனர். தமிழ் ஒடுக்கப்படும் இனத்தின் விடுதலைக்காக போராடுகின்றோம் எனக் கூறிவந்த பொய் தற்போது முற்றாக அம்பலமாகியுள்ளது. விடுதலைப்புலிகள் உட்பட்ட சகல தமிழ் முதலாளித்துவ இயக்கங்களும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 'விடுதலையை' தேடிக் கொடுக்க அல்ல ஏகாதிபத்திய ஒடுக்குமுறையை திணிக்கவே முயலுகின்றனர்.சிங்கள முதலாளி வர்க்கத்தின் இனவாத யுத்தத்தினை விடுதலைப்புலிகள் தமது ஏகாதிபத்திய தரகு வேலைத்திட்டங்களை நியாயப்படுத்தவும், மூடிமறைக்கவும் பயன்படுத்துகின்றனர். 15 வருடங்களுக்கு மேலாக தமிழ் தொழிலாள, ஒடுக்கப்பட்ட மக்கள் இரத்தக்களரி நிறைந்த நசுக்குதலையே கண்டுள்ளனர். அவற்றின் படிப்பினைகளை ஆய்வு செய்வது அத்தியாவசியமாகும்.தமிழ் முதலாளித்துவ தலைமைகள் தமது சலுகைகளைப் பேரம்பேச வட்டமேசையில் குந்துவதும், இந்திய ஆளும் வர்க்கம் அல்லது மேற்கத்தைய ஏகாதிபத்தியங்களிடம் மண்டியிடுவதுமே வழக்கமாகின. வடக்கில் விடுதலைப்புலிகள் தமிழ்மக்களை நசுக்கும் கொடிய அரச இயந்திரமாக இன்று கண்முன்னால் நிரூபிக்கப்பட்டுள்ளது.



*தமிழீழ விடுதலைப்புலிகள் சிறீலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைகளின் போது.*

தொழிலாளவர்க்கம் சுயாதீன அரசியல் சக்தியாகி ஒடுக்கப்படுவோரின் அமைப்புரீதியான தலைமையாக போராடுவதால் மட்டுமே விடுதலை பெறுவது சாத்தியமாகும். சிறீலங்கா, இந்தியா மற்றும் ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாளவர்க்கத்துடன் ஐக்கியத்தை கட்டியெழுப்புவதன் மூலம் மட்டுமே தமிழ் தொழிலாளவர்க்கம் முதலாளித்துவ ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளை தோற்கடித்து மிலேச்ச அழிவிலிருந்தும் விடுதலை பெறப் போராட முடியும்.

புலிகளின் பிற்போக்கு தேசியவாதத்திற்கு எதிராக போராட தமிழ் தொழிலாளவர்க்கம் தமது அரசியல் சுயாதீனத்துக்காக போராட வேண்டும். இதற்கு தமிழ்ஈழம், சிறீலங்காத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசி அனைத்துலக பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சிறீலங்கா–தமிழீழம் சோசலிசக்குடியரசுளின் ஒன்றியத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் தமிழ் இனத்தின் ஜனநாயக உரிமைகள் நிலைநாட்டப்பட முடியும். சிறீலங்காவின் தொழிலாளர்வர்க்கத்தின் வர்க்கப் பொறுப்பும், செயற்பாடும் இந்த அரசியல் அபிவிருத்தியில் பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. அவர்கள் இனவாத யுத்தத்திற்கு எதிராக தமிழ்மக்களின் தேசியஜனநாயக உரிமைகளைப் பேண முன்னணியில் நின்று வடக்கு–கிழக்குத் தொழிலாளருக்கு தோழமைக் கரங்களை நீட்ட வேண்டும். அத்தகைய வர்க்க ஒருமைப்பாடின்றி, ஏகாதிபத்தியத்தையும், தரகுமுதலாளித்துவத்தையும் தோற்கடிக்கும் விடுதலைப் போராட்டம் வெற்றியளிக்காது.

> விடுதலைப்புலிகள் மேற்கத்தைய ஆளும் வர்க்கத்தினரை மிகச்சிறந்த சமாதான தூதரென்று புகழாரம் சூட்டுவதோடு அதன் தலையீட்டினால் ஓர் ஒழுங்கமைப்பை ஏற்படுத்த முயற்சிக்கிறது. தற்போது விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு இதுவே. அது ஏனைய முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களைப் போன்றே ஏகாதிபத்தியத்தின் அனுசரணையுடன் ஓர் ஒழுங்கமைப்பை ஏற்படுத்திக்கொள்ளும் முட்டிமோதலாகும்.

www.padippakam.com



# இலங்கை தேசிய இனப்பிரச்சினை தொடர்பான ஏகாதிபத்தியத்திட்டம்

செப்டம்பர் நடுப்பகுதியில் அமெரிக்க காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்ப இலங்கை தொடர்பான ஒரு பிரேரணை எதிர்ப்புக்கள் எதுவுமி நிறைவேறியது. "பிரதிநிதிகள் சபை பிரேரணை இலக்கம். 181" அழைக்கப்பட்ட இப்பிரேரணைக்கு "இலங்கையினுள் சமா நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பது" என்ற தலையங்கம் வழங்கப்ப இருந்




*இரணைமடுவில் "அமெரிக்காவின் குரல்" வானொலி நிலையம்.*

இந்த முதலாளித்துவ ஆளும்வர்க்கங்களின் உலக சந்தைக்கான போட்டி இவர்களை பெரும் யுத்த மோதுதலுக்கான திசையில் தள்ளி வருகின்றது. "இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணுதல்", "ஜனநாயகத்தை உறுதிசெய்தல்", "மனிதஉரிமைகளைப் பேணுதல்" என்ற குள்ளமான சூத்திரங்களை முன்வைத்து தமது செல்வாக்குகளை அபிவிருத்தி செய்துகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசாங்கத்தின் இனவாதயுத்தமும், வீடுதலைப்புலிகளின் பிரிவினைவாத யுத்தமும் இழுபட்டுச் செல்லும் நிலையில் "தீர்வு காண்போராகத் தலையிடும்" ஏகாதிபத்தியவாதிகளின் அக்கறை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையின் பேரில் காட்டிவரும் 'அக்கறையின் எதிர்ப்புரட்சி ஆபத்தைப் புரிந்து கொண்டு அதற்கு முகம்கொடுக்கும் பொருட்டு வடக்கு- கிழக்கிலும், தெற்கிலும் உள்ள தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்கள் தயாராக வேண்டுமென புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

செப்டம்பர் நடுப்பகுதியில் அமெரிக்க காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான ஒரு பிரேரணை எதிர்ப்புக்கள் எதுவுமின்றி நிறைவேறியது. "பிரதிநிதிகள் சபை பிரேரணை இலக்கம். 181'' என அழைக்கப்பட்ட இப்பிரேரணைக்கு "இலங்கையினுள் சமாதான நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பது" என்ற தலையங்கம் வழங்கப்பட்டு இருந்தது. அப்பிரேரணை பின்வருமாறு நிறைவுபெறுகின்றது: "பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் விரும்பினால் இலங்கையின் இனக்குழு பிரச்சினையை தீர்க்க ஐக்கிய அமெரிக்க அரசு தனது நல்லெண்ணத்தை வழங்க கொள்கை ரீதியில் விருப்பம் தெரிவிக்கின்றது."

பொதுஜனமுன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து அதன் உதவியோடு இலங்கையினுள் இடம்பெற்றுவரும் அமெரிக்க அரசாங்க அரசியல் தலைமீடுகளின் ஒரு பாகமாகவே இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஏப்ரல் 19ம் திகதி பொதுஜனமுன்னணி அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான சமரசம் உடைந்து போனதோடு ஜப்பான் அரசாங்கம் ஒரு நடுநிலையாளராக செயற்படும் தனது விருப்பத்தைத் தெரிவித்தது. அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் கரென் பிரண்ஸ் அந் நாட்டு அரசாங்கத்தின் சார்பில் அத்தகையதோர் பிரேரணையை முன்வைத்தார். அவுஸ்திரேலிய ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டின் ஒரு பாகமாக செப்டம்பர் இறுதி வாரத்தில் அந்நாட்டு பிரதமரின் விசேட பிரதிநிதியாக ஸ்ரீபன் லுஸ்லி என்ற பேர்வழி பொதுஜனமுன்னணி அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்து சென்றதாகத் தெரிகிறது.

இதற்கிடையே இலங்கையை ஒரு காலனியாக்கி கொண்டிருந்த ''பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் இன்றைய கொன்சர்வேட்டிவ் கட்சி அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சர் ஜெரம் ஹென்ட்லி பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்றக்கூட்டம் நடைபெற்ற வேளையில் "இரு சாராரும் விரும்பினால் இலங்கையில் இழுபட்டுச் செல்லும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர தலையிட தயார் எனக் கூறினார். பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் பழைய காலனி என்ற முறையில் திரும்பவும் இலங்கையில் கண்போட்டு உள்ளனர் என்பதில் சந்தேகம் கிடையாது.

ஏகாதிபத்திய சக்திகள் தத்தமது அரசியல், பொருளாதார, இராணுவ தலைமீடுகளை அபிவிருத்தி செய்துகொள்ள நேரடியாகவும், மறைமுகமாகவும் முயன்று வருகின்றனர். இலாபவீதம் வீழ்ச்சி காணும் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்துள்ள இந்த முதலாளித்துவ ஆளும்வர்க்கங்கள் உலக சந்தையில் தமது பங்கினை அதிகரித்துக்கொள்ளும் போட்டியில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போட்டி இவர்களை பெரும் யுத்த மோதுதலுக்கான திசையில் தள்ளி வருகின்றது. "இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணுதல்", "ஜனநாயகத்தை உறுதிசெய்தல்", மனிதஉரிமைகளைப் பேணுதல்" என்ற குள்ளமான சூத்திரங்களை முன்வைத்து அவற்றிற்கு முற்றிலும் முரணான விதத்தில் தமது செல்வாக்குகளை அபிவிருத்தி செய்துகொள்ளும் முயற்சியில் இந்த ஏகாதிபத்தியவாதிகள் ஈடுபட்டுள்ளனர். இதனை பொஸ்னிய நெருக்கடியிலும் லத்தீன் அமெரிக்க, மத்தியகிழக்கு நாடுகளிலும் கண்டுகொள்ள முடியும்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அரசாங்கத்தை போலவே விடுதலைப்புலிகளும், ஏகாதிபத்தியவாதிகளின் முண்டினைத் தம்பக்கம் வென்றெடுக்கும் கடைகெட்ட முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கத்தின் பிரதிநிதியாக வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், அரசியலமைப்புச் சட்ட அமைச்சர் ஜே.எல். பீரிசும் இந்த இலக்கில் பல தடவைகள் வாஷிங்டன் சென்று வந்துள்ளனர்.

ஏகாதிபத்தியவாதிகள் இன்றைய கட்டத்தில் பொதுஜனமுன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றனர் என்பது அம்பலமாகியுள்ள போதிலும் விடுதலைப்புலிகள் பின்வாங்கி விடவில்லை. சமீபத்தில் அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கு பொறுப்பான உதவி ராஜாங்கச் செயலாளர் ரொபின் ராபெல் இலங்கைக்கு விஜயம் செய்த வேளையில் தெரிவித்த கருத்துக்களில் ஏதும் தமக்குச் சார்பாக உள்ளதா எனக் குடைந்து ஆய்வதில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டனர். விடுதலைப்புலிகளின் கண்டுபிடிப்பு இதுதான்:

''கொழும்பு பொதுஜனத்தொடர்பு சாதனங்களுக்கு வழங்கிய பேட்டியில் திருமதி ராபெல் பொருத்தமானதும், முக்கிய கொள்கைப்பிடிப்பானதுமான பல விடயங்களை பற்றிக் குறிப்பிட்டார். எனினும் கொழும்பு பத்திரிகையாளர்களின் பெரும் நெருக்குவாரங்கள் இருக்கையிலும் இலங்கை அரசாங்கத்துக்கு தெளிவான உதவியும் வடக்கு- கிழக்கு தமிழ்மக்களை முழுமனே தனிமைப்படுத்திவிடும் வகையிலுமான எந்தவொரு அறிக்கையையும் வெளியிடுவதை அவர் தவிர்த்துக் கொண்டார்."

இதற்கிடையே முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச்சாதனங்கள் ஏகாதிபத்திய தலையீட்டு பொதுஜன அபிப்பிராயத்தை நிர்மாணி உபாயங்களில் ஈடுபட்டுள்ளனர். தொடர்புச்சாதனங்கள் ஏகாதிபத்தியவாதி பிரேரணைகளை தூக்கிப்பிடித்துப் பேசி வரு சும்மா அல்ல. அக்டோபர் முதலாம் திகதி சண்டே லீடர் பத்திரிகை அமெரிக்க பிரதிநி சபையின் பிரேரணையை முழுப்படியே மேற்கோ காட்டியிருந்தது. அத்தோடு வெளிந தலையீட்டுக்கான 'ஆதரவு' எதிர்ப்புக் கருத்து வெளியாகி உள்ளன. அக்டோபர் 8ம் திகதிய 'ச ஐலன்ட்' பத்திரிகையில் வெளியான ரே பெரேராவின் கட்டுரை அமெரிக்கப் பிரதிநிதிகள் பிரேரணையை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத் தூக்கிப்பிடித்து எழுதியிருந்தது. அத்தோடு ஐ (அக்டோபர் 9) ஆசிரியத் தலையங்கம் அமெ பிரதிநிதிகள் சபை பிரேரணை தொடர்பாக இ எதிர்ப்புக் கிளம்பும் சாத்தியம் இல்லை குறிப்பிட்டிருந்தது. இந்தியா, அமெ அடிச்சுவட்டில் நடைபோடுவதை இது ஆதார காட்டியது. "வெளிநாட்டுத் தலையீடு வெற்றிய இருசாராரும் மோதலிலிருந்து மேசைக்கு வந் ஒரு தரப்பினர் பெருமளவுக்கு யுத்தத்தில் பல கண்டாலே இது சாத்தியமாகும்." என்று பத்திரிகை எழுதியது. அரசாங்கத்துக்கு பிடிக்கும் 'யுக்திய', 'ராவய' போன்ற பத்திரிக நீண்டகாலமாகவே மூன்றாவது தரப்பினர் தல செய்யவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்கா கொண்டுள்ளன. இந்த விதத்தில் முதலாளித்துவ பத்திரிகைகளும் வெளிநா தலையீட்டுக்கு அல்லது ஏகாதிபத் தலையீட்டுக்கான நிலைமைகளை சிருஷ்டிட மூலம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்க எதிரான ஒரு யுத்தத்துக்கு கையளித்து வருகி இனவாத யுத்தத்தின் அழிவுகளுக்கும், பல் கூட்டுத்தாபனங்கள் தொடுக்கும் தாக்குதல்களு எதிராக தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக் போராட்டம் வளர்ச்சி காணலாம் என்பதை கதிகலங்கிப்போயுள்ள ஆளும்வர்க்கம் "யுத்தத் முடிவுக்கு கொணரும்'' ஏகாதிபத்தியவாதிகளை அரவணைத்துக்கொ தயாராகி வருகின்றனர். எனினும் ஏகாதிபத்தியவா முதலாளிகளின் அத்தகைய கணிப்புக் அடிப்படையில் நடைபோடத் தயாரில்லை. ஆளுமையை அபிவிருத்தி செய்ய தாமாகவே நடாத்தி தலைமீடுகளில் இறங்க ஏகாதிபத்தியவா தயங்கப்போவதில்லை. அரைக்காலனித்துவ நாடு முதலாளித்துவக் கும்பல்களின் படு கேவல அடிபணிவும், கையசை ஏகாதிபத்தியவாதிகளுக்கு பெரும் ஆசீர்வதி உள்ளது. இலங்கையில் பொதுஜனமுன் அரசாங்கமும், முதலாளிவர்க்க விடுதலைப்புலிகளும் மற்றும் தமிழ்முதலாளி கும்பல்களும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு சா வீசுவதில் முன்னணியில் நின்று கொண்டுள்

படிப்பகம்

www.padippakam.com



# ரான்சில் அரசியல் வேலைநிறுத்தம்.



*பிரான்சில் வேலைநிறுத்தத்தில் தொழிலாள–இளைஞர்கள்*

வுசெலவுத்திட்டத்தின் துண்டுவிழும்
ையை அரச உத்தியோகத்தர்கள், குடும்பத்தினர்,
பாறியோர், வேலையற்றோர், மாணவர்கள் மீது
தாக்குதல் தொடுப்பதன் மூலம் நிவர்த்தி
தற்கு முயற்சி செய்த பிரான்சு அரசாங்கம்
லாளர்வர்க்கத்தின் பாரிய எதிர்ப்புக்கு
கொடுத்துள்ளது.

23ம் திகதி கார்த்திகை மாதம் புகையிரதத்
லாளர்களின் முழுமையான
நிறுத்தத்துடன் ஆரம்பமாகிய இந்த
நிறுத்தங்கள் பொதுச் சேவையிலுள்ள அரச
யோகத்தர்களின் பெரும்பகுதியினை
த்துக் கொண்டு ஒரு பெரிய வேலைநிறுத்த
பினை உருவாக்கியுள்ளது.

பெரும்பான்மையாக நகரங்களில்
வரத்து முற்றாக நிறுத்தப்பட்டிருக்கின்றது.
டன் மின்சாரதுறை, தபால்துறை,
தொலைபேசிசேவை இன்னும் பல
க்களங்களும், ஆசிரியர்கள், மருத்துவமனை
யாகத்தர்களும் இந்த வேலைநிறுத்தத்தில்
ந்துள்ளனர். மார்கழி மாதத்தின் முதல்
மயில் மூன்றில் ஒரு பங்கு பொதுசனசேவை
யோகத்தர்கள் வேலைநிறுத்தத்தில்
டிருந்தனர்.

தனியார் துறையிலும் அடையாள
லநிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
ார்வாகன தொழிற்சாலை றெனோல்ற்
ault) , ரயர் தொழிற்சாலை
பின்(Michelin) தொழிலாளர்கள் இந்த
யாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர்.
ப் பயணத்துறையின் உத்தியோகத்தர்களும்,
லாளர்களும் அடையாள வேலை
தங்களினால் விமானச் சேவையை
நலையப் பண்ணினர்.

ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் ஒவ்வொரு
யும் இரண்டு, மூன்று ஊர்வலங்கள் ஒழுங்கு
படுகின்றன. இந்த ஊர்வலங்களில் தொழில்,
வித்தியாசமின்றி ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட
ாளர்கள் பங்குபற்றினர். பல்கலைக்கழகங்களில்
பற்றாக்குறையினையும், மோசமான கல்வி
நிலைமைகளையும் எதிர்த்து மாணவர்களும்
மக்கணக்கான தங்களது
லநிறுத்தத்தினை மேற்கொண்டதுடன்
திகை 30ம் திகதி தங்களது சொந்த
த்தை நடாத்தினர். தற்போது தொழிலாளர்
லங்களில் இவர்களும்
ந்துகொள்கின்றனர்.

இந்த ஊர்வலங்களினது மத்தியமான
கை "யூப்பே திட்டம்" என்று அழைக்கப்படும்
ன் செலவுகளைக் குறைக்கும்
த்திட்டத்தினை வாபஸ் வாங்கு என்பதாகும்.
இந்த திட்டத்தின்படி சமூக காப்புறுதியில்
– பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக
ாளர்களின் வருமானங்கள் மீது புதிய வரியை
கப்படுத்துவது, குடும்பங்களுக்கு

வழங்கப்படும் உதவிப்பணம், சமூகசேவைப்பணம் ஆகியவற்றின் மீது வரி விதிப்பது, இளைப்பாறியோரினதும், வேலையற்றோரினதும் மருத்துவச் செலவிற்கான காப்புறுதிப் பணத்தினை அதிகரிப்பது, அதேநேரத்தில் மருத்துவ வசதியைக் குறைப்பது, பொதுசனசேவையிலுள்ள தொழிலாளர்கள் முழுமையான இளைப்பாறிய சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இதுவரை 37,5 வருடங்கள் வேலைசெய்யவேண்டியிருந்தது. இதனை 40 வருடங்களாக அதிகரிப்பது, புகையிரத சாரதிகளாக கடமையாற்றுவோர் 50 அல்லது 55 வயதில் இளைப்பாறுவதற்கு அனுமதிக்கும் சட்டத்தினை இல்லாதொழிப்பது என்பன அரசினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் மூன்று வருடங்களுக்குள் பலநூறு மில்லியாடன் கணக்கான பணம் சமூகத்தின் மிகவும் ஏழ்மையான தட்டுக்களினது பெரும்பான்மையோரின் பைகளிலிருந்து கறந்தெடுக்கப்படும்.

எப்படியிருப்பினும் இந்த திட்டம் இறுதியில் வெள்ளம் வரம்பை உடைப்பதற்கான ஒரு துளியாகவே இருந்தது. கடந்த பன்னிரெண்டு வருடங்களாக தொழிலாளர்கள் பொருளாதாரத்தை சீரமைப்பதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தை இல்லாதொழிப்பதற்காகவும் "தியாகம்" செய்யும்படி வேண்டப்பட்டனர். இதன் விளைவுகள் நகரப்புறங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட இளைஞர்கள் வேலையில்லாமல் இருப்பதனோடு பொலிசாரோடு போர் தொடுப்பது தினசரி நடவடிக்கையாக உருவாகியுள்ளது. பிரான்சின் அரசியல்வாதிகளின் தட்டுக்கள் ஊழல் சேற்றில் ஆழ்ந்து மூழ்கையில் தொழிலாளர்வர்க்கத்தின் வாழ்க்கைத்தரங்கள் தொடர்ச்சியாக சீரழிந்து வருகின்றது.

தொழிலாளர்கள் இந்த நிலைமைகள் தொடர்பான வெறுப்பினை அவர்களது பாரம்பரியக் கட்சிகளான சோசலிசக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றினை நிராகரிப்பதன் மூலம் வெளிப்படுத்தினர். 1993 தேர்தலில் சோசலிசக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சிக் கூட்டு பாராளுமன்றத்திலிருந்து விரட்டப்பட்டது. வலதுவாரிகள் நான்கில் ஐந்துபங்கு ஆசனங்களை இத் தேர்தலில் கைப்பற்றினர். 1995ன் ஆரம்பத்தில் ஜனாதிபதி பதவியையும் வலதுசாரிகள் கைப்பற்றினர். தொழிற்சங்கங்களில் தற்போது இரண்டு லட்சம் தொழிலாளர்கள் மட்டுமே அங்கத்தவர்களாயிருக்கின்றார்கள். இது வேலை செய்வோரின் மொத்த தொகையின் பத்திலொரு பங்கிற்கும் குறைவானதாகும்.

அரசாங்கம் இந்த வேலைநிறுத்தம் தொடர்பாக தனது கடுமையான நிலைப்பாட்டை அறிவித்தது. இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு பிரதமர் யூப்பே ற்கு ஆதரவளித்த பாராளுமன்றம் தொழிற்சங்கங்கள் இதனை நிறைவேற்ற முன்வரவேண்டும் என்று கட்டளையிட்டது. ஐரோப்பிய அரசாங்கங்களும், முழு முதலாளித்துவப் பத்திரிகைகளும் இந்த திட்டத்திற்கு ஆதரவளித்துள்ளன. மார்கழி 7ம் திகதி பிரான்சின் ஜனாதிபதி சிராக்கினை சந்தித்த ஜேர்மனியின் கோல் தொழிலாளர்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டாம் என்று கோரிக்கை விடுத்தார்.

இந்த வேலைநிறுத்தங்கள் ஐரோப்பிய நாணய ஐக்கியத்திற்கு சவாலாக அமைகின்றன என்றும், இதற்கு பிரான்சு விட்டுக 'கொடுக்குமாயிருந்தால் மஸ்ரிட் ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை அதனால் பூர்த்தி செய்ய முடியாமல் போய்விடும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐரோப்பாவில் வாழும் தொழிலாளர்களின் உரிமைகள், அவர்களது சமூகவெற்றிகள் ஆகியவற்றின் மீதான ஒரு பொதுத் தாக்குதலிற்கான திட்டம்தான் ஐரோப்பிய நாணய ஐக்கியம் என்பதனை இன்றைய பிரான்சின் நிகழ்வுகள் தெட்டத்தெளிவாக வெளிச்சத்திற்கு கொண்டுவருகின்றன.

ஐரோப்பிய நிறுவனங்களும், வங்கிகளும் இந்த நாணய ஐக்கியம் உலகச்சந்தைக்கான போட்டியில் ஜப்பானுக்கும், அமெரிக்காவிற்கும் எதிராக உயிர்வாழ்வதற்கான தவிர்க்கமுடியாத முன்நிபந்தனை எனக் கருதுகின்றனர். ஆனால் இது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரங்களை அவர்களது மூதாதையோரின் தரத்திற்கு குறைப்பதனையும் முன்நிபந்தனையாக்குகின்றது.

ஜேர்மனியின் தொழிற்சங்க அதிகாரிகள் ஜேர்மன் அரசாங்கத்துடன் சம்பளவெட்டு மேற்கொள்வதற்கான தங்களது சம்மதத்தை தெரிவிக்கும் அதே வேளையில் பிரான்சின் தொழிலாளர்கள் தங்களது வாழ்க்கை நிலைமைகளுக்கான போராட்டத்தை மேற்கொள்கின்றனர். இது கருங்காலித்தனத்தின் ஒரு மோசமான வடிவமாகும்.

பிரான்சின் தொழிற்சங்கங்கள் ஒன்றும் வித்தியாசமானதல்ல. பிரான்சின் அரசாங்கமானது அதனது திட்டம் தொடர்பாக ஒரு "சீர்திருத்தம்" செய்வதனை ஆரம்பத்தில் வரவேற்றிருந்தனர். இதற்கெதிரான எதிர்ப்புக்கள் கிளம்பியவுடன் இத் தலைவர்கள் அரசாங்கம் தங்களை "ஏமாற்றி" விட்டதாக அறிவித்தனர்.

இதன் மூலம் தற்போதைய வேலைநிறுத்த இயக்கத்தின் தலைமையில் தங்களை நிறுத்திக்கொண்டு இந்த இயக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு முயல்கின்றனர். FO, CGT என்ற இரண்டு தொழிற்சங்க சம்மேளனங்களும் ஒரு பொது வேலைநிறுத்தத்திற்கு தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் இவர்களது ஆரம்பக் கோரிக்கையான பேச்சு வார்த்தைகளுக்கு முன்னர் "யூப்பே திட்டத்தினை" அரசாங்கம் வாபஸ் வாங்கவேண்டும் என்பதிலிருந்தும் பின்வாங்கியுள்ளனர்.

இந்த வேலைநிறுத்த அலையானது தொழிற்சங்கங்களின் தலையீடு ஒன்று மில்லாமலே உருவாகியது. தொழிலாளர்கள் பெருமளவில் வெளியேறியதினால் தொழிற்சங்கங்களுக்கு ஏற்பட்ட பலவீனம்தான் இந்த வேலைநிறுத்தத்தை சாதகமாக்கியது. புகையிரத வேலைத்தலங்களிலும், பொது போக்கு வரத்து சேவைகளிலும் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஆரம்பித்த இந்த வேலைநிறுத்தம் காட்டுத்தீ போல் நாடு முழுமைக்கும் பரவியது.

வேலைநிறுத்தம் செய்யும் இந்தத் தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தப் பணம் கிடைக்காமல் ஏற்படும் பாரிய பண நெருக்கடிகளின் மத்தியிலும் இவர்கள் தினசரி காலையில் பொதுக்கூட்டங்களில் பங்கு கொண்டு என்ன புதிய நடவடிக்கை எடுக்கலாம் என ஆலோசிக்கின்றனர். இவர்கள் மத்தியில் ஒரு அரசியல் முன்னோக்கு இவர்களை வழிநடத்துவதற்கு இல்லாமலிருப்பதனால் தொழிற்சங்கத் தலைவர்கள் இந்த இயக்கத்தினை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கும், அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்துவதற்கும் முடிகின்றது.

பிரான்சின் அரசாங்கத்தினுள் இந்தத் தாக்குதல்களை எப்படித் தொடர்வது என்பதில் கருத்து வேறுபாடுகள் தோன்றியிருக்கின்றது. ஒரு பலமான பிரிவினர் நாணய ஐக்கியத்தினை கைவிடுவதின் மூலம் தற்போதைய நிலைமைகள் இன்னுமொரு பெரிய மோதலாக வளர்ச்சியடைவதை தவிர்க்க முயல்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பாலதுார் தலைமையிலான பிரிவினர் "தேசியஜக்கியத்தினையும்" தொழிற்சங்கங்களுடன் "கலந்துரையாடலையும்" கோருகின்றனர்.

சோசலிசக்கட்சியும் ஆரம்பத்தில் யூப்பேயின் இந்தத் திட்டத்திற்கு ஆதரவளித்ததின் பின்னர் தற்போது "தேசிய கலந்துரையாடல்" வேண்டும் எனப் பின்வாங்கியிருக்கின்றது.

யூப்பெவிற்கு பதிலாக வலதுசாரிக்கூடாரத்திலிருந்து ஒரு புதிய பிரதமரை நியமிப்பதோ அல்லது ஒரு தேசிய ஐக்கியத்திற்கான அரசாங்கத்தை உருவாக்குவதோ தொழிலாளர்களின் எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கப்போவதில்லை.

இது தேசியவாதக் கூடாரத்தினை பலப்படுத்தும். இந்தக்கூடாரத்தின் அதிதீவிர தலைவரான லூ பெ(Le pen) னின் தேர்தல் வெற்றிகள் காட்டுவதுபோல் இந்தச் சக்திகள் தொழிலாளவர்க்கத்திற்கெதிராக மத்தியதரத் தட்டுக்களை அணிதிரட்டுவதற்கு வழிவகுக்கும்.

தற்போதைய வேலைநிறுத்த இயக்கம் முன்வைக்கும் அரசியல் பணிகளை பிரான்சினது தொழிலாளர்களோ அல்லது ஐரோப்பியத் தொழிலாளர்களோ தன்னிச்சையான நடவடிக்கைகளுள் தீர்க்கமுடியாது.

ஸ்டாலினிச சீர்திருத்தவாத அதிகாரத்துவங்கள் தங்கள் நீண்டகால அரசியல் ஆதிக்கத்தினால் தொழிலாளர்வர்க்கத்திடம் விட்டுச்சென்ற முதிசங்களான அரசியல் குழப்பநிலையை தீர்ப்பது மார்க்சிச வேலைத்திட்டத்தினை பிரதிநிதிப்படுத்தும் நான்காவது அகிலத்தினை கட்டி எழுப்புவதனால் மட்டும்தான் சாத்தியமாகும்.

இது உறுதியான கொள்கைப்படிப்பினையும், பொறுமையையும் கொண்ட அரசியல் போராட்டத்தினை வேண்டி நிற்கின்றது. இதன் மூலம் தான் தொழிலாளவர்க்கத்திற்கு தன்னிச்சையான தொழிற்சங்க உண்மையின் மூலம் அவர்களது பிரச்சினைகளுக்கு தற்போதைய அமைப்புமுறையினுள் தீர்வுகாண முடியும் என்று கண்ணில் மண்துாவும் அரசியல் போக்குகளுக்கெதிரான போராட்டத்தை நடாத்த முடியும்.

முதலாளித்துவ ஐரோப்பா என்ற கட்டமைப்புக்குள் தொழிலாளவர்க்கத்திற்கு ஒரு வழியும் கிடையாது. மஸ்ரிட் ஒப்பந்தத்தின் சர்வாதிகாரத்திற்கு அடிபணிவது அல்லது தேசியவாதத்தை பலப்படுத்துவதை விலைக்கு வாங்குவதன் மூலம் பால்கான் போன்ற நிலைமைகளைத் தோற்றுவிப்பது என்ற இரண்டில் ஒன்றைத்தான் தெரிவுசெய்ய முடியும்.

இதற்கு பதிலாக தொழிலாளர்வர்க்கம் ஐரோப்பிய ஐக்கிய சோசலிசக்குடியரசு என்ற வேலைத் திட்டத்திற்காகப் போராடவேண்டும். உலக சோசலிசக்குடியரசின் ஒரு பாகமாக இதனை நிறுவு வதற்காக தொழிலாளர்வர்க்கத்தை அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுத்தி தொழிலாளர் அரசாங்க ங்களை நிறுவவேண்டும்.

இதன்மூலம் தான் சோசலிச அடித்தளத்தில் பொருளாதார, சமூக வாழ்க்கையை மாற்றியமைக்க முடியும். இதுதான் நான்காவது அகிலத்தின் வேலைத்திட்டமாகும்.

படிப்பகம்

www.padippakam.com





எதியோப்பிய அகதிகள்

# ஏழ்மை– உலகின் மரணத்திற்கான முதற்காரணி

உலக சனத்தொகையின் ஐந்தில் ஒரு பங்கினர் வாழ்ந்து கொண்டிருக்கும் மோசமான ஏழ்மையானது நோய்களுக்கும், அகாலமரணங்களுக்கும் முக்கிய காரணமாகும். இதனை உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) வருடாந்த அறிக்கை நிரூபிக்கின்றது. இந்த அறிக்கை தொடர்பாக இங்கிலாந்தின் ட்ரொஸ்கிச பத்திரிகையான International Worker எழுதிய கட்டுரை இங்கே பிரசுரமாகின்றது.

உலக சுகாதார நிறுவனம் "இடைவெளியை நிரப்புதல்" (Bridging The Gaps) என்ற தலையங்கத்தின் கீழ் வெளியிட்ட அறிக்கை எண்ணிப்பார்க்க முடியாத சமூக ஏழ்மை நிலை தொடர்பான தெளிவான நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது. 5.6 மில்லியாடன் உலக சனத்தொகையில் 1. 1 மில்லியாடன் மக்கள் மிகமோசமான ஏழ்மை நிலையில் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கணிப்பிடுகின்றது. மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள் போதிய சத்துணவு இன்மையாலும், அரைவாசி பங்கு மக்கள் அடிப்படை மருத்துவ வசதியில்லாமலும் இருக்கின்றனர்.

வருடாந்தம் 12 மில்லியன் குழந்தைகள் ஐந்து வயதை அடைவதற்கிடையிலேயே இறக்கின்றனர். இது நோர்வேயினதும், சுவீடனினதும் சனத்தொகை அளவினதாகும். உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது "இவர்களின் இறப்புக்கு காரணம் உலக ரீதியான கவலையீனமாகும் எனவும், ஆனால் இவர்கள் இறப்பதற்கான முதற்காரணம் ஏழ்மையாகும்".

பலர் இறப்பதற்கு காரணமாக இருப்பது அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை கிடைக்காமல் இருப்பதாலாகும். இச் சிகிச்சைக்கு ஒரு சில ரூபாய் செலவாகும் என்றாலும், கைத்தொழில் நாடுகளில் உள்ள சுகாதாரசேவை இருப்பின் இவற்றில் 95 வீத குழந்தைகள் உயிர்தப்ப முடியும். இறுதியாக இன்று பத்தில் எட்டு குழந்தைகளுக்கு உலகின் ஐந்து கொடிய வியாதிகளுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றப்படுவதன் காரணமாக 1980 லிருந்து 25 வீத இறப்பு குறைந்துள்ளது.

உலகம் முழுவதற்குமான உயிர்வாழும் காலம் கடந்த நான்கு வருடங்களில் 65 ஆக அதிகரித்துள்ள போதும் இவ் எண்ணிக்கை அதிகரித்துவரும் ஒரு முரண்பாட்டை காட்டுகின்றது. வசதியான நாடுகளில் உயிர்வாழும் காலம் 78 வயதாகவும், ஏழ்மையான நாடுகளில் 43 வயதாகவும் இருக்கின்றது. இது மட்டுமல்லாது இவ் இடைவெளி அதிகரித்தும் வருகின்றது. 2000ம் ஆண்டளவில் இது 45 நாடுகளில் 60 வயதாககுறையும் எனவும், மத்திய ஆபிரிக்க குடியரசு, கொங்கோ, உகண்டா, சம்பியா ஆகிய நாடுகளில் இன்னும் குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரித்தானியாவில் முதல் ஐந்து வயதினுள் ஆயிரத்துக்கு ஆறு குழந்தைகள் இறக்கின்றனர். 16 வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆயிரத்துக்கு இருபதாக இருக்கின்றது. உலகம் முழுவதும் வருடாந்தம் 500,000 தாய்மார் பிரவேசத்தின் போது இறக்கின்றனர். ஐரோப்பாவில் இது நூறாயிரத்துக்கு எழுநூறு ஆக இருக்கின்றது. ஐந்துக்கு ஒன்று என்ற இறப்பு பிள்ளை பெறக்கூடிய வயதுடைய தாய்மாரின் இறப்பினால் வீழ்ச்சியடைகின்றது. ஆபிரிக்காவில் கிட்டத்தட்ட ஒவ்வொரு பிள்ளையின் பிறப்பின்போதும் ஒரு தாய் இறக்கின்றாள். இது இங்கிலாந்தைவிட 13.5 வீதம் அதிகமாகும்.

உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பீட்டின்படி உலகம் முழுவதும் 1993ம் ஆண்டு 51 மில்லியன் மக்கள் இறந்துள்ளனர். இதில் 25 வீதம் குழந்தைகளாகும். 39 வீதம் அபிவிருத்தியடையும் நாடுகளில் இறந்துள்ளனர். 20 மில்லியன் கிட்டத்தட்ட 40 வீதம் கசநோய் போன்ற தொற்றுநோய்களால் ஒரு கிழமையில் அல்லது பால்குடி நிலையில் இறந்துள்ளன. இந்த இறப்பில் 99 வீதம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நிகழ்கின்றது. இந்நாடுகளில் இதைவிட யுத்தம், பயங்கரவாதத்தினாலும், மற்ற நாடுகளைவிட நான்கு மடங்கு அதிகமாக இறக்கின்றனர்.

எயிட்ஸ் (Aids) நோயால் புதிதாகப் பாதிக்கப்பட்டவர்கள் 25 வயதிற்கு உட்பட்டவர்களாகும். இதில் 60 வீதம் 20 வயதிற்குட்பட்ட பெண்களாகும். நாளாந்தம் 6000 பேர் இந்த HIV வைரசால் தாக்கப்படுகின்றனர். அதாவது பொருளாதார அபிவிருத்தி செய்யக்கூடிய ஒரு தலைமுறை எயிட்ஸ் இனால் இறக்கும் அபாயத்திற்கு உள்ளாகியுள்ளது. உலக சுகாதார நிறுவனம் முன்கூட்டி கூறுவது என்னவெனில் எதிர்வரும் பத்தாண்டுகளில் சிங்கப்பூர், டோக்கியோ, பீக்கிங், யொக்ககாமா நகரங்களில் உள்ள சனத்தொகை அளவிலான மக்கள் ஆசியாவில் எயிட்ஸ், கசநோயினால் இறக்கவேண்டியிருக்கும் என்பதாகும்.

இந்தளவிலான உலகரீதியான சீரழிவினை புரிந்துகொள்ள தந்த தகவல்கள் போதுமானதுடன் இது, இதனைத் தடுத்து நிறுத்தவேண்டிய தேவையையும் எடுத்துக் காட்டுகின்றது. ஒவ்வொரு வருடமும் 1 மில்லியன் குழந்தைகள் அம்மை நோயாலும், ஏற்புவலி எனும் கொடிய நோயாலும் இறக்கின்றனர். இதற்கு எதிரான தடுப்பு மருந்து 3 ரூபா செலவாகின்றது. 4 மில்லியன் குழந்தைகள் வருடாந்தம் சுவாசப்பை தொற்றுநோய் போன்ற சுவாசவழி தொடர்பான நோய்களால் இறக்கின்றன. இது ஒவ்வொரு எட்டு செக்கனுக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்திலாகும். இதற்கான மருத்துவச்செலவு 10 ரூபாவே முடியும். வயிற்றோட்ட நோயினால் ஐந்து வயதிற்குட்பட்ட 3 மில்லியன் குழந்தைகள் இறக்கின்றனர். இது ஒவ்வொரு பத்து செக்கனுக்கு ஒரு குழந்தை என்ற விகிதமாகும். இதனைத் தடுப்பதற்கான மருத்துவம் தண்ணீரும், உப்பும் சேர்ந்த கலப்பு ஒன்றாகும். இதற்கான செலவு 3, 50 ரூபா ஆகும்.

எல்லா வயதிலுமுள்ள இரண்டு மில்லியன் மக்கள் முக்கியமாக குழந்தைகள் தகுந்த உணவு கிடைக்காது உள்ளனர். அதாவது தேவையான உயிர்ச்சத்துக்கள் இதன்மூலம் கிடையாதுள்ளனர். அயோடின் குறைவினால் வருடாந்தம் 30,000 பிள்ளைகள் இறந்து பிறக்கின்றன. 120,000 குழந்தைகள் மூளை சுயாதீனமற்றவர்களாக பிறக்கின்றன. இந்த அயோடின் சாதாரணமாக உப்புடன் சேர்த்து வழங்கக்கூடியதாகும்.

சாதாரண மருந்துகள் உலகின் பல பகுதிகளிலுள்ள மக்களுக்கு கிடைக்காதுள்ளது. இதற்கான ஒரேயொரு காரணம் ஏழ்மையாகும். பல நாடுகளில் ஒவ்வொரு மனிதனுக்கும் சுகாதார சேவைக்காக செலவிடப்படும் பணம் வருடாந்தம் 200 ரூபா ஆகும்.

பெரும்பாலான ஆபிரிக்க, ஆசிய, லத்தீன்அமெரிக்க நாடுகளில் இருக்கும் இப்படியான நிலைமைகளின் கீழ் இந்நாடுகளை "அபிவிருத்தியடையும் நாடுகள்" என கூறுவது முழுப்பொய்யாகும். இந்நாடுகள் தம்மை அபிவிருத்தி செய்யவில்லை. அதற்கு மாறாக சீரழிந்துகொண்டு போகின்றன. உலக சுகாதார நிறுவன

**உலகம் முழுவதற்குமான உயிர்வாழும் காலம் கடந்த நான்கு வருடங்களில் 65 ஆக அதிகரித்துள்ள போதும் இவ் எண்ணிக்கை அதிகரித்துவரும் ஒரு முரண்பாட்டை காட்டுகின்றது. வசதியான நாடுகளில் உயிர்வாழும் காலம் 78 வயதாகவும், ஏழ்மையான நாடுகளில் 43 வயதாகவும் இருக்கின்றது.**

படிப்பகம்

www.padippakam.com



> இதில் முக்கியமானது என்னவெனில் உலக சுகாதார நிறுவனமானது ஐக்கியநாடுகள் சபையுடன் இணைந்துள்ள ஒரு அமைப்பு மட்டுமல்ல, பெரிய முதலாளித்துவங்களினால் நிதி வழங்கப்பட்டு அவற்றின் கட்டுப்பாட்டினுள் உள்ளதென்ற போதும், இம் மோசமான ஏழ்மைக்கான காரணம் இயற்கையிலேயே உள்ளது என்ற முடிவுக்கு வராமையாகும்.

கையின்படி "உலகின் மனிதன் தமது கையில் முன்னோக்கி வைக்கும் ஒவ்வொரு ம் ஏழ்மையினுள்ளும், வமின்மையினுள்ளும், நோய்களினாலும், யினாலும் இரண்டு மடங்கு தப்படுகின்றான்" என்பதாகும்.

இதில் முக்கியமானது என்னவெனில் உலக ர நிறுவனமானது ஐக்கியநாடுகள் சபையுடன் ணந்துள்ள ஒரு அமைப்பு மட்டுமல்ல, பெரிய ாளித்துவங்களினால் நிதி வழங்கப்பட்டு றின் கட்டுப்பாட்டினுள் உள்ளதென்ற போதும், மோசமான ஏழ்மைக்கான காரணம் கையிலேயே உள்ளது என்ற முடிவுக்கு மயாகும். இந்நிலைமைக்கு காரணம் றய உலகம் பெரிய கைத்தொழில் நாடுகளினால் ப்படும் நாடுகளை தீவிரமாகச் சுரண்டப்படும் ப்பினுள் உள்ள அரசியல் சமூகஉறவுகளின் ப்பாடாகும்.

இந்த அறிக்கையில் பின்வரும் புள்ளியொன்று பிடப்படுகின்றது. "வளர்ச்சியடைந்த ளுக்கும், அபிவிருத்தியடைந்துவரும் ளுக்கும் இடையில் நடைபெறும் பரிமாற்றத்தில் ண விளக்கம் ஒன்று உள்ளது. கடன் வட்டி ந்தலில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் ில் அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது பொருட்களின் விலையை தீர்மானிக்கின்றன. மூலம் ஏழ்மையான நாடுகள் வசதியான ளுக்கு தமது பணத்தை கொடுக்கின்றன. சில க்கைகள் இந்த ஏழ்மை நாடுகளின் உற்பத்தித் ன அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்டன. ஆனால் இந்நாடுகளின் நிலைமையை மிகவும் மாக்கியுள்ளன."

தனது அறிக்கையில் அபிவிருத்தியடைந்த, ிருத்தியடையாத நாடுகள் என உலகினை து பார்த்துள்ள போதும் ஏற்கனவே ிருத்தியடைந்த நாடுகளான அமெரிக்கா, ப்பா, யப்பான் போன்ற நாடுகளில் ரித்துவரும் ஏழ்மை நிலைமையையும் க் கொண்டுள்ளமை கவனத்திற்கு கவேண்டியதொன்றாகும். "வளர்ச்சியடைந்த ளிலும் வசதி குறைந்த மக்கள் மத்தியில் ம தீவிரமாக அதிகரித்து வருவதை க் கூடியதாக இருக்கின்றது." என ிடுகின்றது. உலக சுகாதார நிறுவனம் தனது கையில் ஏழைகளை "கவனத்திற்கெடுக்கத் வயற்ற கீழ்தட்டு" என எழுதியுள்ளபோதும், ன சமூகத்திலிருந்து இல்லாது வேண்டும் என கூறியபோதும் இதனை மேலும் டையச் செய்யவே முயல்கின்றது. ஏனெனில் தொழிலாளவர்க்கத்தின் ஏழ்மையுடன் இந்த ிருத்தி தங்கியுள்ளதாலேயாகும். அவர்களின் ட்டு" என்று கூறப்படுவதினுள் வயதுவந்தோர், லாதோர், வேலையற்றோர், தெருப்பிள்ளைகள், பன் கணக்கான பெண்களும் அடங்குகின்றனர். அறிக்கையில் முக்கியமான இன்னொரு புள்ளி ரவெனில் "அதாவது பொதுவான க்கைத்தரத்தை எல்லா மக்களும் யமுடியும் என்பதற்கு வேலையற்றோர் ாவது எச்சரிக்கையுடன் இது ஒரு அபாயமான னயாகும்."

உலக சுகாதார நிறுவனம் தனது கையை வெளியிட்ட அதே கிழமையில் னில் இருக்கும் அபிவிருத்தியடையாத ளில் இதுவரை தனது முக்கிய கவனத்தை ந்திய ஒக்ஸ்பாம் நிறுவனம் (OXFAM) பிரித்தானியாவில் ஏழ்மையை ஒழிப்பதற்கான லத்திட்டமொன்றை முன்வைத்தது. இவ் மப்பின் தலைவரான டேவிட் பயர் (David ) பிரித்தானியாவில் 14 மில்லியன் மக்கள் சராசரி ானத்திற்கு குறைவான அளவே பெறுகின்றனர் ம், நான்கிற்கு ஒரு குடும்பத்திற்கு உதவிநிதி தேவையாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். டேவிட் பயர் பிரித்தானியாவை ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன்அமெரிக்காவின் ஏழ்மையான நாடுகளுள் ஒப்பிட்டு பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ஏழ்மை நிலையின் அளவு வித்தியாசப்படுகின்றது. ஆனால் அதன் விளைவு ஒவ்வொருவரிலும் குறிப்பிடத்தக்க அளவு ஒரேமாதிரியானதாகவே இருக்கின்றது."

எதிர்வரும் காலங்களில் பிரித்தானியாவிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் ஏழ்மையானது கல்கத்தாவிலும், பம்பாயினதும் இப்போதுள்ள நிலைமையை அடையும். பல்தேசிய நிறுவனங்கள் உலகம் முழுவதும் காட்டுமிராண்டித்தனமான சுரண்டலை நடைமுறைப்படுத்த வேண்டுகின்ற அதேவேளை உற்பத்திச்செலசைக் குறைப்பதற்கும், இலாபத்தை அதிகரிப்பதற்கும் கடந்த காலத்தில் பெற்ற சகல சமூகநலன்களும் அழிக்கப்படும்.

ஸ்டாலினிச அரசுகளின் உடைவும், சீர்திருத்தவாத, தொழிற்சங்கங்களினதும் சீரழிவான நிலமை சோசலிசத்தின் மீது முதலாளித்துவத்தின் இறுதி வெற்றி என்று கூறப்படும் காலகட்டமொன்றில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்த முதலாளித்துவ அமைப்பு மில்லியன் கணக்கானோரின் பட்டினி, இறப்பையே உருவாக்கியுள்ளது. இது முதலாளித்துவம் ஒரு தோல்வியடைந்த அமைப்புமுறை என்ற முடிவுக்கே கொண்டுவருகின்றது.

உற்பத்தியிலும், கணணித்துறையிலும் ஏற்பட்டுள்ள புரட்சிகர வளர்ச்சிகள், தன்னிச்சையான இயக்கம், தொலைத்தொடர்பு, விவசாயத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும் உலகம் முழுவதிலுமுள்ள பட்டினியை நீக்குவதற்கான உற்பத்தியை செய்யக்கூடிய புறநிலை நிலைமைகளை தோற்றுவித்துள்ளது. உலக சனத்தொகைக்கு தேவையான உறைவிடம், உடை, வேலை, மருத்துவவசதிகள், பாடசாலைகள் போன்றவற்றை வழங்குவதற்கு உலகம் முழுக்க போதிய வளங்கள் உள்ளன. ஆனால் தனியார் இலாபங்களுக்காக எதிரெதிரான தேசியஅரசுகளை பிரித்துள்ள முதலாளித்துவ அமைப்புமுறையானது இந்த வளங்களை பயன்படுத்தி உலக சனத்தொகையின் பெரும்பான்மையினரின் ஏழ்மை நிலையை அகற்றுவதற்கு இயலாதுள்ளதுடன் ஒரு சில மிகப்பெரிய செல்வந்தர்கள் மிக வசதியான ஒட்டுண்ணி வாழ்க்கை வாழ்வதற்கான நிலையை உருவாக்கியுள்ளது.

இன்று வசதிபடைத்த 20 வீதத்தினரின் வருமானமானது ஏழ்மையான 20 வீதத்தினரின் வருமானத்தைவிட 60 வீதம் அதிகமானதாகும். இந்த இடைவெளி 1960லிருந்து இரண்டு மடங்காகியுள்ளது.

பழைய தொழிலாளர்வர்க்க அமைப்புக்களின் உடைவானது சோசலிசத்தின் தோல்வியை நிரூபிக்கவில்லை. அதற்கு மாறாக இலாபமுறைதான் ஒரேயொரு வழியென்று கூறிய சீர்திருத்தவாதத்தினையே முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. தொழிலாளர்வர்க்கம் சர்வதேசரீதியாக இணைவதன் மூலம்தான் மனித சமுதாயத்தின் உற்பத்திசக்திகளை தேசியஅரசு அமைப்புமுறையில் இருந்தும், இலாப அமைப்புமுறையில் இருந்தும் விடுவிக்கமுடியும். மனித தேவைகளை அடித்தளமாகக் கொண்ட ஒரு திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் மூலமாகத்தான் ஏழ்மையும், பட்டினியும் முடிவுக்கு கொண்டுவரப்படமுடியும்.

# இனவாதமும், கறுப்பு முதலாளித்துவமும்

## *வாஷிங்டனில் "கோடிக்கணக்கானோரின் அணிவகுப்பும்" அதன் முக்கியத்துவமும்.*



*பாராக்கான் வாசிங்டன் அணிவகுப்புக் கூட்டத்தில் பேசுகின்றார்.*

வாஷிங்டனில் ஒக்ரோபர் 16ல் நூறாயிரக்கணக்கான கறுப்பு இனத்தைச் சேர்ந்தோர் "கோடிக்கணக்கானோரின் அணிவகுப்பில்" கலந்து கொண்டனர். இவ் அணிவகுப்பு வேலையிழப்பு, வறுமை, இனவாத ஒடுக்குமுறை போன்றவற்றிலிருந்து வெளியேறுவதற்கான எந்தவொரு வழியையும் காட்டவில்லை. இதற்கெதிரான முறையில் அதன் வேலைத்திட்டம் இனவாதமும், கறுப்புமுதலாளித்துவமாகவும் இருந்தது.

மிக நீண்டகாலமாய் யூதவிரோதத்தையும், கறுப்பு இனவாதத்தையும் பரப்பிவரும் லூயிஸ் பாராக்கான் (Farrakahn) இன் தலைமையிலுள்ள "இஸ்லாமிய தேசத்தினால்" இவ் அணிவகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. இவ் அணிவகுப்பு பல நிறுவனங்களின் உத்தியோகபூர்வாமான ஆதரவைப் பெற்றுக்கொண்டதுடன் பல பாடசாலைகளும் இந்நாளில் மூடப்பட்டிருந்தன.

ஐக்கியஅமெரிக்காவில் உள்ள ட்ரொக்சிச இயக்கமான தொழிலாளர் கழகம் (Workers Leaque) இவ் அணிவகுப்பிலிருந்து மிக உறுதியானமுறையில் தன்னை வேறுபடுத்திக்கொண்டது. ஒக்ரோபர் 23ல் வெளியாகிய அவர்களது சர்வதேச தொழிலாளர் பத்திரிகையில் (International Workers Bulletin) தலையங்கக் கட்டுரையாக வெளிவந்த இக்கட்டுரை கீழ்கண்ட அரசியல் முடிவுகளை எடுத்தது.

இவ் கறுப்பின மக்களின் அணிவகுப்பை ஒழுங்குசெய்த லூயிஸ் பாராக்கானிற்கு பிரச்சார சாதனங்கள் பாரிய முக்கியத்துவம் வழங்கியதை இவ் அணிவகுப்பின் முன்னிலையில் காணக்கூடியதாய் இருந்தது. "இஸ்லாமிய தேசத்தின்" தலைவர் அமெரிக்காவின் பெரும் தினசரி பத்திரிகைகளின் முன் பக்கங்களில் பிரசன்னமானார். வழமையாக, முதலாளித்துவ பிரச்சார சாதனங்கள் அமெரிக்க அரசாங்கத்தின் அரசியலிற்கெதிரான ஆர்ப்பாட்டத்தை மூடிமறைக்க முயற்சி செய்யும். ஆனால், இத்தடவை வழமைக்கு மாறான முறையில் இவ் ஆர்ப்பாட்டம் பகிரங்கப்படுத்தப்பட்டது.

உதாரணமாய், 1981 செப்ரெம்பரில் தோழமை தினத்திற்காக (Solidarity- Day) தொழிற்சங்கங்களால் வாஷிங்டனில் ஒழுங்கு செய்யப்பட்ட பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பிரச்சார சாதனங்களால் முழுமையாக மூடிமறைக்கப்பட்டது. இவ் ஆர்ப்பாட்டத்தின் போது "கோடிக்கணக்கானோரின் அணிவகுப்பிற்கு" எந்தவிதத்திலும் குறையாத விதத்தில் பல இனத்தையும், வயதையும் சேர்ந்த தொழிலாளர்களும், தொழிற்சங்கவாதிகளும் ஒழுங்கமைக்கப்படாததோடும் கலந்து கொண்டனர். இவ் ஆர்ப்பாட்டம் வரையறுக்கப்பட்ட அரசியலினுள் ஓர் தெளிவான இலக்கை கொண்டிருக்காத போதிலும், இது தொழிலாளர்களுக்கிடையேயான தோழமையை வெளிப்படுத்தியது.

ஆனால், "கோடிக்கணக்கானோரின் அணிவகுப்பு" வேறு ரகத்தை சேர்ந்தது. இது அனைத்து தொழிலாளர்களையும், ஒடுக்கப்பட்டோரையும் ஐக்கியப்படுத்துவதற்கான அறைகூவலாய் இருக்கவில்லை. இதற்கு மாறாக எதிரான முறையில், கறுப்புஇனம் என்ற எல்லையினுள் இனவாத அரசியலை அடித்தளமாய் கொண்டிருந்தது.

இவ் ஆர்ப்பாட்டம் அமெரிக்காவின் தலைநகரில் நடைபெற்ற போதும், அரசாங்கத்திற்கு எதிராகவோ அல்லது அது நடைமுறைப்படுத்தும் சமூகவெட்டுக்கள், ஜனநாயகஉரிமைகள் மீதான தாக்குதல்களிற்கு எதிரான ஓர் அரசியல் போராட்டத்திற்கான அறைகூவலை விடுக்கவில்லை. இவ் ஆர்ப்பாட்டத்தில் எந்தவொரு சுலோக அட்டைகளும் கிடையாது. பாராக்கான் தனது இரண்டரை மணித்தியாலப் பேச்சின்போது சமூகஉதவிகளின் மீதும், உணவுமுத்திரை, மருத்துவ வசதிகள் மேலும் நடாத்தப்படும் வெட்டுக்கள் தொடர்பாய் ஒரு தடவை கூட குறிப்பிடவில்லை.

இதற்கு பதிலாய், இவ் ஆர்ப்பாட்டத்தில் ஒவ்வொருவரும் தமக்கு சொந்தமாய் இருக்கும் பொருட்களின் அடிப்படையில் தமக்குத் தாமே உதவியாய் இருக்கவேண்டுமென கோரப்பட்டது. இது, கிளிங்ரன் அரசாங்கம்கூட உடன்படும்

படிப்பகம்

www.padippakam.com



# இனவாதமும், கறுப்புமுதலாளித்துவமும்

குடியரசுவாதிகளின் வலதுசாரிப் பிரச்சாரத்துடன் மிக ஒத்ததொன்றாகும். இதனூடாய் கடந்த நூற்றாண்டுகால சமூக சீர்திருத்தங்களின் மேலான அழிப்புகள் நியாயப்படுத்தப்பட்டன.

இவ் அணிவகுப்பிற்கு அரசியல் அடித்தளமாய் இரு விடயங்கள் விளங்கின. முதலாவது– கறுப்புத்தேசியவாதம், இது நமது சமுதாயத்திலுள்ள சுரண்டல் முறையே இனவாதத்திற்கான பிரதான காரணம் என்பதை காணத் தவறுகிறது. பாராக்கான் தனது பேச்சில் "வெள்ளையர்களின் மேலாதிக்கமே" பிரதான எதிரி என கூறினார்: இது, வெள்ளையினத் தொழிலாளர்களை வெள்ளை முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் ஓர் சட்டியினுள் போடுவதாகும்.

இரண்டாவதாய், வறுமை, குற்றம், போதைவஸ்து பாவித்தல் போன்ற அனைத்து பிரச்சினைகளையும் தனிநபர்களால் தீர்வுகாணமுடியும் என்ற எண்ணம் ஆளுமை செலுத்தியது. கறுப்புஇன மக்கள் "பொறுப்புகள் எடுப்பதற்கும்", கடவுளின் பக்கம் திரும்புவதனூடாய் தமது தனிப்பட்ட குழப்பங்களிலிருந்து விடுபடவேண்டும் எனவும் கோரப்பட்டது.

இறுதியாக, மேடையிலிருந்து வைக்கப்பட்ட கோரிக்கைகள் மேலான சீர்திருத்தவாத தன்மை கொண்டதாய் இருந்தது. ஊர்வலத்தில் 'கலந்துகொண்டோர் தேர்தலில் வாக்களிப்பதற்கு பதியச்சொல்லியும், அதனூடாய் பெரும் முதலாளிகளின் இரு கட்சியின் மீது அழுத்தம் கொடுக்கும்படியும் கோரப்பட்டனர். இதற்கு அப்பால், தேவாலயங்களிலும், ஏனைய மனித உரிமை இயக்கங்களிலும், கறுப்பு தேசியவாத இயக்கங்களிலும் இணையும்படி அவர்கள் கோரப்பட்டனர். இறுதியாய், பாராக்கான் அவசரநிதி சேகரிப்பிற்கான அறைகூவலை விடுத்ததுடன் அதில், "தேசிய பொருளாதார அபிவிருத்தி நிதிக்காய்" ஒவ்வொருவரும் மாதாந்தம் பத்து டொலர் பங்களிப்பு செய்யும்படி கோரினார்.

இப்படியானதொரு இயக்கத்தடன் முதலாளித்துவம் ஏன் ஒரு பிரச்சினையையும் கொண்டிருக்கவில்லை என்பதை புரிந்துகொள்வது கஷ்டமானதொன்றல்ல. பெரும்முதலாளிகள் தமது கூர்மையான தாக்குதலை வேலைத்தளங்கள், சம்பளம், கறுப்பு, வெள்ளைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரங்கள் மேல் நடாத்தி வருகின்றனர். வர்க்கங்களிற்கிடையேயான பகைமைகள் முப்பதாம் ஆண்டுகளைப் போல் தீவிரம் அடைந்து வருகின்றன. இதனால்தான் அவர்கள் லாப அமைப்புமுறையைப் பாதுகாக்க, தொழிலாளர்கள் இனரீதில் பிளவுபடுத்தப்படுவதனூடாய் ஒடுக்கப்பட்டதொழிலாளர்களின் கவனத்தை பிற்போக்கு அரசியலின் பக்கம் திசைதிருப்பும் ஒவ்வொரு முயற்சியையும் வரவேற்கின்றனர். இதற்காகவே "றுயடட ளுவசநநவ துழரசயெட" மிக உற்சாகமாய் பின்வருமாறு எழுதியது. "கோடிக்கணக்கானோரின் அணிவகுப்பு தனிநபர்களிடையேயும், சமுதாயத்தினுள்ளும் அமைதியை உருவாக்குவதை தனது இலக்காய் கொண்டிருக்கின்றது."

பெரும் முதலாளிகளின்பிரச்சார சாதனங்கள் இவ் அணிவகுப்பை ஊக்குவித்ததுடன் இன, மத, தேசிய பிளவுகளை உருவாக்கும் பிராந்தியவாத அரசியல்களை வரவேற்றுள்ளதுடன் பாராக்கான் போன்ற பிராந்திய அரசியல்வாதிகளையும் நியாயப்படுத்தினர்.

ஜனநாயகக்கட்சியின் வீழ்ச்சியும், இருகட்சி அமைப்பின் நெருக்கடியும் அமெரிக்க ஆளும்வர்க்கத்திற்கு பாரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. முப்பதாம் ஆண்டுகளிலிருந்து ஜனநாயகக்கட்சி உத்தியோகபூர்வமாய் சீர்திருத்தக்கட்சி என்ற பங்கை வகித்தது. ஆனால் இன்று அமெரிக்க முதலாளித்துவம் சமூகசீர்திருத்தம் என்ற அனைத்துக் கொள்கைகளையும் கைவிட்டுள்ளது.

தொழிலாளர்வர்க்கத்தின் சுயாதீன அரசியல் இயக்கத்தை தடைசெய்வதற்கும், ஜனநாயகவாதிகள் அமெரிக்க ஆளும்வர்க்கத்தின் பிரதான பாதுகாவலர்கள் ஆகின்றனர். ஜனநாயகக்கட்சியின் வீழ்ச்சியினூடாகவும், இரு முதலாளித்துவ கட்சிகளின் வலது சாரி அரசியலினாலும் ஏற்பட்ட வெற்றிடத்தை எண்ணி அமெரிக்க ஆளும்வர்க்கம் மிக நனவுபூர்வமாய் உள்ளது. மக்கள், அமெரிக்க அரசியல் அமைப்புமுறையில் இருந்து அந்நியப்பட்டுப் போவது, தமது ஆட்சிக்கு பாரதூர அச்சுறுத்தலை உருவாக்கும் என்பதை எண்ணி அவர்கள் பயந்துள்ளனர்.

அதிகரித்த செலவும் கோடிக்கணக்கானோரின் வறுமையை தீர்வு காண்பதற்கு ஆளும்வர்க்கத்தினால் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை. இதனால்தான் அவர்கள், இந்தியா, ஆபிரிக்க குடாநாடு, பால்கன் போன்ற வெளிநாடுகளில் நடைமுறைப்படுத்தும் பிராந்தியவாத அரசியலின் பக்கம் உள்நாட்டிலும் திரும்புகின்றனர். இதற்கான தயாரிப்பு ஏற்கனவே நடைபெற்று வருகிறது. வேறுபட்ட இனவாத, தேசியகுழுக்களின் தலைவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பேச்சாளர்களாய் ஊக்குவிக்கப்படுகின்றனர். அரசியல், பொருளாதார ஆட்சியை வைத்திருப்பவர்கள் இப்படியான "தலைவர்களுடன்" உடன்படுவதுடன் முதலாளித்துவ சுரண்டலின் அழுகல்களை தம்மிடையே பங்கிட்டும் கொள்வார்கள். இதற்கு உபகாரமாய் வேறுபட்ட தேசிய, இன, மத, மக்களை ஓர் சகோதரத்துவ போரினுள் திசைதிருப்பிவிடும் பிற்போக்கு அரசியலை தேசியவாதிகள் முன்னெடுக்கின்றனர். தனது பேச்சில் பாராக்கான் தான் இப்படியானதொரு "தலைவர்" என்பதை பிரகடனம் செய்தார். அவர் தனது அரசியல் செல்வாக்கை இரு முதலாளித்துவ கட்சிகளில் ஒன்றிற்கு விற்பதற்கு தயாராய் இருப்பதாய் சமிக்கை செய்தார்.



பாராக்கானின் ஆதரவாளர்கள்

> தினசரி தொழிலாளர்கள் வேலையிழப்பது, வறுமையின் தொழிலாளர்கள் வேலையிழப்பது வறுமையின் கோரத்தாண்டவம், பட்டினி என்பவை மூலதனத்தினால் உழைப்பைச் சுரண்டும் ஒரு சமூக ஒழுங்கில் மட்டும் ஏற்படக்கூடிய தோற்றப்பாடுகளாகும். உலகம் முழுவதும் மலிந்த கூலியுழைப்பினைத் தேடும் மூலதனத்திற்கு தோலின் நிறம் என்ன என்பதைப்பற்றியல்ல, பதிலாக எவ்வளவு லாபம் கறந்தெடுக்கப்படலாம் என்பதிலேயே அக்கறையிருக்கின்றது. லாப அமைப்புமுறையானது தொழிலாளர்வர்க்கத்தினைப் பிரிப்பதற்கும், அதன் மூலம் தனது ஆட்சியை நிலைநிறுத்தவுமே இனவேறுபாட்டினைப் பாவிக்கின்றது.

செல்வந்தர்களிற்கும், ஏழைகளிற்குமிடையே ஆழமான இடைவெளியையும், வர்க்க பகைமைகளையும் கொண்ட ஓர் சமுதாய ஒழுங்கு எந்தவொரு குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளையும் உத்தரவாதம் செய்யாது. அமெரிக்க ஆளும்வர்க்கம் இன ஒத்துழைப்பிலிருந்து கறுப்பு தேசியவாதத்திற்கும், வெள்ளை இனவாதத்திற்கும் திரும்பியதற்கான உண்மையான காரணம் இதுதான்.

பாராக்கான் ஓர் யூத விரோத, இனவாத வார்த்தைஜாலவாதி. அவர் "இஸ்லாமிய தேசத்தினால்" நடாத்தப்படும் வியாபாரத்தினுள் ஒடுக்கப்பட்டோரின் வெறுப்பை திசைதிருப்புவதனூடாய் தனது செல்வங்களை சேகரித்து கொண்டதுடன், சிக்காகோவிலும், வேறு இடங்களிலும் வீடுகட்டமைப்பு வேலைகளிற்கென இருபது மில்லியன் டொலரை சமஷ்டி அரசிடமிருந்து பெற்றுக்கொண்டார். ஆளும்வர்க்கம் தனக்கு பொருத்தமான நபரை தன் தரம்குறைந்த அரசியலினுள் கண்டுள்ளது.

இவ் அணிவகுப்பில் பேசிய, Farrakahn, Benjamin, Charis, Jasse Jackson உம் ஏனைய அரசியல்வாதிகளும் மிக சலுகை படைத்த பிற்போக்குத்தனமான சமுதாயத் தட்டான மேல் மத்தியதரவர்க்கத்தின் பிரதிநிதிகள். கடந்த இருபது வருடங்களாய் கறுப்பு, வெள்ளை உழைக்கும் மக்கள் தமது வாழ்க்கைத்தரத்தில் பாரிய வீழ்ச்சியை முகம்கொடுத்த வேளையில் கறுப்பு இனத்தவரின் மத்தியில் இருந்த சிறு செல்வந்தர்களின் குழு எண்ணிக்கையிலும், செல்வந்தத்திலும் அதிகரித்தது. இது தோல் வேறுபாட்டைவிட வர்க்க வேறுபாடே ஆழமாய் உள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இப் பொருளாதார அரசியல் குழு, ஜனநாயகக்கட்சியின் நெருக்கடியினால் தான் அச்சுறுத்தப்படுவதாய் உணர்கிறது. கறுப்பு அரசியல்வாதிகளும், வியாபாரிகளும், அரச உத்தியோகத்தர்களும், தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் நெருக்கடியினால் தமது நிலை பாதிக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்துள்ளனர். தமது சலுகைக்கான புதிய அடித்தளம் தேடுகின்றனர். ஆகையினால்தான் அவர்கள் பாராக்கானிற்கும், அவரது "இஸ்லாமிய தேசத்திற்கும்" ஆதரவளிக்கின்றனர். அவர்களது வேலைத்திட்டம் கறுப்பு முதலாளித்துவம் ஆகும். இவ் அடிப்படையில், இதுவரையிலும் இல்லாத விதத்தில் கறுப்புத் தொழிலாளியை சுரண்டுவதிலிருந்து லாபம் எடுக்க முயல்கின்றனர். இனவாத, மதவாத கூச்சல்களிற்கு பின்னால் இப்பிரிவுகள் தமது கறுப்பு "சகோதரர்களிற்கு" அதாவது, தொழிலாளர்களிற்கு மலிந்த கூலியு ழைப்பையே வழங்கவுள்ளன.இவ் அணிவகுப்பில் பார்வையாளர்களாய் கலந்துகொண்ட பெரும்பான்மையான தொழிலாளர்கள், இளைஞர்களிற்கிடையேயும், மேடையில் இருந்தோரிற்கிடையேயும் ஆழமான சமூகவெறுப்பு இருந்தது. ஆனால், தொழிலாளர்கள் இது தொடர்பாய் நனவாய் இருக்கவில்லை. இவை மார்க்சிஸ்டுகளை பொறுத்தளவில் தொழிலாளர்களிற்கு உண்மையை சொல்ல வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

நூறாயிரக்கணக்கான தொழிலாளர் முழுமையான இனவாத அடித்தளத்தில் ஒன்று பாராக்கான் போன்ற நபர்களின் கூச்சல்க அனுமதிப்பதில் எதுவித முற்போக்குத்தன இல்லை.

இது பாரிய ஆபத்துக்க கொண்டுவரக்கூடிய தொழிலாளர்வர்க்கத்தின் அர குழப்பத்தை எடுத்துக்காட்டுகின் தொழிலாளர்வர்க்கத்தின் மிக ஒடுக்கப்பட்ட பிரிவுக ஆழமான அரசியல் குழப்பத்தை அதிதிருப்தியையும் பாராக்கான் போன்ற பிரி பயன்படுத்தக்கூடிய நிலைமை உருவாக்கியதற்கான குற்றம் AFL-CIO சாரும். அழுகிச்செல்லும் இத் தொழிற்சங் நிறுவனங்களின் தாக்குதல்களிற்கு எதி வாழ்க்கைத்தரத்தையும், வேலைத்தளத்தை பாதுகாக்கக் கூடிய நிலையிலேயோ அல் விருப்பத்தையோ கொண்டிருக்கவில்லை.

இந்த அணிவகுப்பு தொடர்பாக எழுதப்ப கட்டுரைகளும், அணிவகுப்பில் பேசியவர்க அமெரிக்க சமுதாயத்தில் ஏற்பட்டு பிரிவினைக்கான அடித்தளமான காரண இனவேறுபாடு என்று காரணம் காட்ட மு செய்தனர்– இது ஒரு பொய்.

அமெரிக்க சமுதாயத்தின் பிரிவுகளுக் பிரதானமான காரணம் வர்க்க உறவுக வெளிப்பாடுகளினால் என்பது தினசரி வாழ்க்கை ஒவ்வொரு நடவடிக்கையிலும் இ முன்னெப்பொழுதும் இல்லாத வகை வெளிப்படுத்தப்படுகின்றது.

தினசரி தொழிலாளர்கள் வேலையிழப் வறுமையின் கோரத்தாண்டவம், பட்டினி என்ப மூலதனத்தினால் உழைப்பைச் சுரண்டும் ஒரு ச ஒழுங்கில் மட்டும் ஏற்படக்கூ தோற்றப்பாடுகளாகும். உலகம் முழுவதும் ம கூலியுழைப்பினைத் தேடும் மூலதனத்திற்கு தோ நிறம் என்ன என்பதைப்பற்றியல்ல, பதிலாக எவ்வ லாபம் கறந்தெடுக்கப்படலாம் என்பதிலே அக்கறையிருக்கின்றது. லாப அமைப்புமுறையா தொழிலாளர்வர்க்கத்தினைப் பிரிப்பதற்கும், அ மூலம் தனது ஆட்சியை நிலைநிறுத்த இனவேறுபாட்டினைப் பாவிக்கின்றது.

முதலாளித்துவ அமைப்புமுறை நெருக்கடியானது தொழிலாளர்வர்க்கத் நலன்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்க உண்மையான ஒரு இயக்கத்தி கட்டியெழுப்புவதற்கான புறநிலைகளை உருவா கொடுத்திருக்கின்றது. இந்த இயக்கம் உடனடி உருவாக்க வேண்டிய அவசியத்தினைத் "கோடிக்கணக்கானோரின் அணிவகு வலியுறுத்துகின்றது.

www.padippakam.com



# ணிரத்தினத்தின் மீது ஏன் கொலைமுயற்சி

வருண அழகக்கோன்

ந்த யூலையில் பிரபல இந்தியத் திரைப்பட
துனரான மணிரத்தினத்தை படுகொலை செய்யும்
சி இடம்பெற்றது. சென்னையில் உள்ள அவரின்
ன் மீது குண்டுவீச்சு இடம்பெற்றதோடு, பின்னர்
 துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்கானார்.
ாக்குதல்களில் மணிரத்தினம் சிறுகாயங்களுடன்
தப்பினார்.

நாம் இந்த கோழைத்தனமானதும்,
கெட்டதுமான கொலை முயற்சியை கண்டனம்
கின்றோம். ஒரு புறத்தில் கலை, கலாச்சாரம்
ர்பாக முதலாளித்துவ அமைப்பு இன்று
டுள்ள நாற்றம் கண்டுள்ள நிலைமையும்
னுள் கலைஞர்கள் முகம்கொடுக்கும்

**ரு கலைப்படைப்பின் கலைத்திறன்**
**ல்லது குறைநிறை என்னவாக**
**ருப்பினும் ஒரு கலைஞன் தாம்**
**ரும்பிய விதத்தில் சுதந்திரமான**
**றையில் தமது படைப்பினை**
**வளிக்கொணரும் சக்தியும், உரிமையும்**
**ற்றிய பிரச்சினை அதைக்காட்டிலும்**
**பரிதும் முக்கியமானதாகும்.**

மையும் மறுபுறத்தில் யதார்த்தத்தினை வெற்றி
ர்கையில் மனிதஇனம் தொடர்ந்து நடாத்திவரும்
ட்டத்தின் ஒரு பாகமாக கலை முதலாளித்துவ
மப்புக்கு எதிராக நின்றுபிடிப்பது எப்படி
தையும் இந்தக் கொலைமுயற்சி மீண்டும் ஒரு
வெ வெளியரங்குக்கு கொணர்ந்துள்ளது.

மணிரத்தினம் இந்தத் தாக்குதலுக்கு
ம்கொடுக்க நேரிட்டதற்கு அவரின் சமீப
ரியீடான பொம்பே திரைப்படமே காரணம்
பதில் சர்ச்சைக்கு இடமில்லை. பொம்பே
ப்படம் முதலாளித்துவ நரசிம்மராவ் ஆட்சியின்
ாவித கும்பல்களதும் இந்து, முஸ்லீம்
ப்படைவாத பிற்போக்குக் கும்பல்களதும் பெரும்
ப்புக்கு இலக்காகியுள்ளது.

1993 ஜனவரியில் இந்தியமுதலாளி வர்க்கம்
துமதவாத சிவசேனா– பாரதீய ஜனதா கட்சியின்
டயர் கும்பல்களை கொண்டு முஸ்லீம்மத
லாளர்– ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத்
த்த மதவாத, இனவாத மக்கட்படுகொலைகளின்
யில் பம்பாய் நகரின் நிலைமையை
திரைப்படம் தனது பின்னணியாகக்
ண்டுள்ளது. அங்கு அயோத்தியில் பப்ரி மசூதி
ய ஜனதா தளம்– சிவசேனா குண்டர்களால்
ாக்கப்பட்ட தினம் பம்பாயின் டொன்சிறி பிராந்திய
துமத தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட
ம் என்ற இரண்டும் மணிரத்தினத்தினால் தமது
ப்புக்குக் கருவாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த
ாத, இனவாத பயங்கரத்தின் மத்தியில் முஸ்லீம்
க்கும், இந்து இளைஞருக்கும் இடையில்
வாகும் காதலையும், திருமணத்தையும் பொம்பே
ப்படம் கருப்பொருளாக்கிக் கொண்டுள்ளது.

தமது மதத்தைச் சேர்ந்த யுவதி அதனை
டு இந்துமத இளைஞனோடு ஓடிப்போய்
ாணம் செய்வது இத்திரைப்படத்தின்
க்கருவானதையிட்டு முஸ்லீம் தீவிரவாதிகள்
ப்படைந்துபோய் இருக்கும் அதே வேளையில்
சனா தலைவர் பால் தகரிக்கு சமானமான ஒரு
ரத்தினை திரைப்படம் கொண்டுள்ளதாகக் கூறி
ரும், சிவசேனாவின் பிரபல தீவிரவாதிகளும்
ரத்தினத்தையிட்டு வெறுப்படைந்துபோய்
ந்தனர். இத்திரைப்படத்தின் மூலம் இந்து–
லீம் மோதுதல்கள் உக்கிரம் காணும் எனக்
 முதலாளித்துவ நரசிம்மராவ் அரசாங்கத்தின்
லப் பொலிசாரின் தணிக்கையின் நிழலும்
ரத்தினத்துக்கு எதிராகப் படர்ந்தது. அவர்
கைய ஒரு பின்னணியிலேயே குண்டுவீச்சுத்
குதலுக்கு இலக்கானார்.கலைஞன் என்ற
த்தில் அவர் முகம்கொடுக்க நேரிட்ட இந்த
பவம் வெறுமனே தற்செயலான அல்லது

அந்நியப்பட்ட ஒரு சம்பவமல்ல. இது இந்த முதலாளித்துவ அமைப்பின் இன்றைய வரலாற்றுக் கட்டத்தினால் திட்டவட்டமான முறையில் நிர்ணயம் செய்யப்பட்டுத் தொடுக்கப்பட்ட ஒன்றாகும். ஆதலால் இன்றைய தருணத்தில் முதலாளித்துவ அமைப்பினால் தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் தாக்குதல்களின் ஒரு பாகமாக கலாச்சாரத்துக்கும், கலைக்கும் எதிராகத் தொடுக்கப்படும் இத் தாக்குதல்கள் எதைச் சமிக்கை செய்துகொண்டுள்ளன என்பதை சிறப்பாகவும், ஆழமான முறையிலும் ஆய்வு செய்து ஆகவேண்டும். அது தொழிலாளவர்க்கத்துக்கு மட்டுமன்றி நிஜ கலைஞர்கள், புத்திஜீவிகள் முதலானோர் தொடர்பாகவும் அடிப்படை முக்கியத்துவம் பெறுகின்றது.

இக்கட்டுரையின் இலக்கு ஒரு கலைப்படைப்பு என்றவிதத்தில் மணிரத்தினத்தின் பொம்பே திரைப்படம் எந்த அந்தஸ்தினை வகிக்கின்றது அல்லது அது ஒரு உயர்ந்த கலைப் படைப்பா இல்லையா என்பதை ஆய்வு செய்வது அல்ல. ஒரு கலைப்படைப்பின் கலைத்திறன் அல்லது குறைநிறை என்னவாக இருப்பினும் ஒரு கலைஞன் தாம் விரும்பிய விதத்தில் சுதந்திரமான முறையில் தமது படைப்பினை வெளிக்கொணரும் சக்தியும், உரிமையும் பற்றிய பிரச்சினை அதைக்காட்டிலும் பெரிதும் முக்கியமானதாகும்.

கலைக்கு எதிராகத் தொடுக்கப்படும் இத்தகைய தாக்குதல்கள் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி தொடர்பான முழுக் காலப்பகுதியின் உள்ளும் மனித கலாச்சாரம் மீண்டும், மீண்டும் முகம்கொடுத்துக் கொண்டுள்ள ஒரு நிலைமையாகும். சிறப்பாக ஏகாதிபத்திய அமைப்பு முகம் கொடுக்கும் மரண நெருக்கடியினுள் அந்நெருக்கடியின் சுமையை தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்கள் மேல் திணித்து விடுவதற்கான முதலாளிவர்க்கத்தின் இரத்தம்தோய்ந்த முயற்சியில் மனிதனின் விடுதலை தாகத்தின் அவசியத்தின் ஒரு வெளிப்பாடாக கலைக்கு எதிராகத் தொடுக்கப்படும் தாக்குதல்களை எதுவிதத்திலும் தற்செயலானதெனக் கூறிவிட முடியாது. கலையைப் பொறுத்தமட்டில் மட்டுமன்றி விஞ்ஞானத்தைப் பொறுத்தமட்டிலும் நிலைமை இதிலிருந்து வேறுபட்டதல்ல. இது முதலாளித்துவ அமைப்பின் தன்மையாகும்.

நாம் கடந்துகொண்டுள்ள இக் காலப்பகுதி இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் தற்காலிகமான முறையில் அமுக்கி வைக்க முயற்சிக்கப்பட்ட முதலாளித்துவ அமைப்பின் அடிப்படையான முரண்பாடுகள் அவற்றின் நீண்ட வளர்ச்சியின் பெறுபேறாக அப்பட்டமான முறையில் வெளிப்பட்டு– வெறிபிடித்த வண்ணம் தலைநீட்டிக் கொண்டுள்ளதன் பெறுபேறேயாகும்.

மனித இனத்தின் வரலாற்றினுள் கலை, கலாச்சாரத் துறையின் கொடிய ஒடுக்குமுறைகளை குறித்து நின்ற இக் காலப்பகுதிக்கு அதாவது முதலாளித்துவ அமைப்பின் முரண்பாடுகள் படுமோசமடைந்து இரண்டாம் உலகயுத்தத்துக்கு இட்டுச்சென்ற 1930 பதுகளின் இறுதி தசாப்தத்துக்கு இன்றைய முதலாளித்துவ நெருக்கடி காரணமாக விளங்கியதோடு மட்டுமன்றி அது அளவில் அதைக்காட்டிலும் பிரமாண்ட மானதாகவும் விளங்கியது.

முதலாளித்துவம் அதனது மாபெரும் வீழ்ச்சியின் மத்தியில் பாசிசத்தினதும், அதனை ஆட்சிக்கு அழைப்பதில் வழிசமைத்து மருத்துவச்சி பணிசெய்த ஸ்டாலினிசத்தினதும் கீழே புத்திஜீவி சிருஷ்டிகளுக்கு எதிராக ஒடுக்கு முறையும், தணிக்கையும் மட்டுமன்றி கலைஞர்கள், விஞ்ஞானிகள், புத்திஜீவிகளை உடல்ரீதியாக ஒழித்துக்கட்டும் அளவுக்கும் முன்னோக்கிச் சென்றது. ஹிட்லரின் நாசி சித்திரவதை முகாம்களின் உள்ளும், ஸ்டாலினின் இரகசியப் பொலீஸ் சித்திரவதைக் கூடங்களின் உள்ளும் மனிதஇனம் முன்னொருபோதும் அறிந்திராத விதத்தில் கலைஞர்களும், விஞ்ஞானிகளும், எழுத்தாளர்களும், புத்திஜீவிகளும் சித்திரவதை செய்யப்பட்டனர். அத்தோடு இது நிலமானித்துவ கத்தோலிக்க ஐரோப்பாவினுள் புத்திஜீவி சிருஷ்டிகளுக்கு எதிரான அதர்ம ஒழிப்பு காட்டுமிராண்டித்தனத்தையும் தாண்டிச் சென்றது. இதைப்பற்றி இலங்கையின் மார்க்சிச விமர்சகர் ஒருவர் பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றார்:

"முதலாளித்துவ சகாப்தத்தில் கலைஞனும் அவனது படைப்பும் ஆளும்வர்க்கத்தின் உயிர்வாழ்வுக்கும் உலக நோக்குக்கும் சவாலாவதன் பெறுபேறு என்ன? முதலாளித்துவ ஆளும் வர்க்கம் முதலாளித்துவ கலைஞனையும் அவனது புரட்சிகரப் படைப்பையும் இட்டு பரஸ்பரம் குரோதம் பாராட்டுகின்றது. ஆதலால் வரலாற்றில் எந்தவொரு ஆளும்வர்க்கமும் செய்யாத விதத்தில் முதலாளித்துவ ஆளும்வர்க்கம் கலைஞனை நசுக்கி அவனை வேட்டையாட நடவடிக்கை எடுத்தது. முதலாளித்துவ ஆளும்வர்க்கத்தினுள் கலைஞனைப்பற்றி நிலவும் பீதியும், குரோதமும் அந்த ஆளும் வர்க்கத்தினுள் மார்க்சிச புரட்சியாளனைப் பற்றி இருந்துவரும் பீதிக்கும் குரோதத்துக்கும் மட்டுமே இரண்டாம் தரமானது. (கச்சரித்த கம்லத்துக்கு எதிராக– மார்க்சிச கலை விமர்சனத்தின் அடிப்படைக் கொள்கை பியசீலி விஜேகுணசிங்க பக்கம் 139–140)

இந்த அழிவுகளுக்குப் பின்னணியான முதலாளித்துவ அமைப்பின் மரண நெருக்கடியைத் தாண்டும் அளவுக்கு நிதி மூலதனத்தின் வீழ்ச்சி மீண்டும் கணிசமான முறையில் வெளியரங்குக்கு வந்துள்ளது. இதனால் திட்டவட்டமான முறையில் கலைக்குத் தொடுக்கப்படும் இந்தத் தாக்குதல்களின் அச்சுறுத்தல்களானவை இன்றைய சகாப்தத்தில் கலைக்கு எதிராகத் தயார் செய்யப்படும் தாக்குதல்கள் கடந்து சென்ற காலப்பகுதியில் அழிவுகளைக் காட்டிலும் பேரழிவு மிக்கவை என்பதைக் காட்டுகின்றது. இதற்குப் பின்னணியாக இரண்டாம் உலகயுத்த காலப்பகுதியில் அந்தப் பேரழிவுகளை தொடுக்க முக்கிய பங்கைச் செய்த ஸ்டாலினிஸ்டுக்கள் உட்பட்ட தொழிலாளர்வர்க்க அதிகாரத்துவங்களதும், யுத்தத்தின் பின்னர் பப்லோவாதி திரிபுவாதிகளின் காட்டிக்கொடுப்புகளின் உச்சக்கட்டமாக ஏகாதிபத்திய நாடுகள் தொடக்கம் இந்திய துணைக்கண்டம் போன்ற பின்தங்கிய பிராந்தியங்கள் வரை உலகின் பல நாடுகளிலும் இன்று நானாவிதமான தீவிர வலதுசாரி இனம், மதம், குலவாத பாசிச போக்குக்கள் தலைநீட்டத் தொடங்கியுள்ளது. மணிரத்தினம் முகம்கொடுக்க நேரிட்டுள்ளதும் இவர்களின் மரண தாக்குதலுக்கே நோக்கு அடிப்படை

அத்தோடு இன்று கலைக்கு எதிராகத் தொடுக்கப்பட்டு வரும் தாக்குதலுக்கும் பின்னணியாக ஒரு நோக்கு அடிப்படை இருந்து கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். துரோக அதிகாரத்துவத்தின் காட்டிக்கொடுப்பினுள் உருவாக்கப்பட்ட தொழிலாளர்வர்க்க தலைமையின் நெருக்கடியும், முதலாளிவர்க்கத்தின் வீழ்ச்சியின் மத்தியில் அன்றும் பாசிசத்துக்கு அத்திவாரமிட்டதோடு இன்றைய பாசிஸ்டுகளும் அதே அரசியல் நிலைமையைத் தமக்குச் சார்பாகத் திருப்பிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இக் காட்டிக்கொடுப்புகளின் உச்சகட்டமாக இன்று சிறப்பாகத் தொழிலாளர்வர்க்கத்தின் சுயாதீன புரட்சிகர முன்னோக்குத் தொடர்பாக இருந்துவரும் நெருக்கடியினுள் இந்த பாசிச சக்திகளுக்கு சமாந்தரமாக கிளர்ச்சியில் இறங்கத் தொடங்கியுள்ள பல்வேறு குட்டிமுதலாளித்துவ பிற்போக்கு பார்வைகள் மேலே குறிப்பிட்ட அடிப்படையை வழங்கிய வண்ணம் அத்தாக்குதல்களின் பார்வையின் பிரதிபலிப்பினை கைவரப் பெறுகின்றன. புறநிலை உண்மைகளை நிராகரித்தவாறு அப்பார்வையினை மனித கலைச் சாரத்தின் சகல வெற்றிகளுக்கும் விஞ்ஞானம், கலை,–எதிராக மனித முன்னேற்றம் தொடர்பான கருத்துக்களுக்கு தாக்குதல் தொடுக்க இந்த எதிர்ப்புரட்சி நோக்குத் தொழிற்படுகின்றது.

ஸ்டாலினிசம் சோசலிசத்துடன் கொலைகாரத்தனமான முறையில் இனங்கண்டு கொண்டு ஸ்டாலினிச ஆட்சிகள் வீழ்ச்சிகண்டதும் "சோசலிசம் வீழ்ச்சி கண்டுவிட்டது" என்ற நப்பாசை மெல்ல காலூன்றியபடி முதலாளித்துவத்தின் அவநம்பிக்கையை பிரதிபலிக்கும் நவீனவாதம், மகளிர்வாதம், கலாச்சாரவாதம் போன்ற நானாவித குட்டிமுதலாளித்துவ பார்வைகள் இவ்வகையறாவைச் சேர்ந்தவை. உலகிலும் அத்தோடு இலங்கையிலும் அரசியல் அரங்கினுள் மட்டுமன்றி கலை அரங்கிலும்–இன்றைய சமூக நெருக்கடிக்கு சமாந்தரமாக–இப்பார்வைகள் தலைமையெடுக்க முயற்சிக்கின்றன.

இவை அனைத்தும் எதைக் காட்டுகின்றன? எதிர்காலம் பற்றிய எந்தவிதமான முற்போக்கு முன்னோக்கினையும் உருவாக்காத நாற்றம் கண்டுவிட்ட இன்றைய சமூக அமைப்பினுள் கலாச்சாரத்தினதும், கலையினதும் உயிர் வாழ்க்கை ஆபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த முதலாளித்துவ சமூக அமைப்பு இறுதியாகச் செய்யக்கூடியது முழு மனித கலாச்சாரத்தினையும் பேரழிவை நோக்கி இட்டுச் செல்கிறது.

இங்கு கலைஞனின் பாத்திரம் என்ன என்ற பிரச்சினைக்கு லியொன் ட்ரொஸ்கி வழங்கும் பதிலில் இன்றைய சகாப்தம் சம்பந்தமாக திட்டவட்டமான தொடர்பு உள்ளது. இரண்டாம் உலகயுத்தத்துக்கு முன்னதாக முதலாளித்துவத்தின் மாபெரும் வீழ்ச்சிக்கும், பாசிசம் தலைநீட்டியமைக்கும் அங்கு

**கலைஞன் என்ற விதத்தில் அவர் முகம்கொடுக்க நேரிட்ட இந்த அனுபவம் வெறுமனே தற்செயலான அல்லது அந்நியப்பட்ட ஒரு சம்பவமல்ல. இது இந்த முதலாளித்துவ அமைப்பின் இன்றைய வரலாற்றுக் கட்டத்தினால் திட்டவட்டமான முறையில் நிர்ணயம் செய்யப்பட்டுத் தொடுக்கப்பட்ட ஒன்றாகும்.**

கலைக்கு எதிராக உலகம் பூராவும் உள்ள கலைஞர்களை தொழிலாளர்வர்க்கத்தின் கீழ் அணிதிரட்டவும் அமைந்துள்ளது. நாம் இதனை மீண்டும், மீண்டும் மேற்கோளாகக் காட்டி கவனத்தினை ஈர்த்து வந்துள்ள போதிலும் இன்றைய அபிவிருத்திகள் அதில் பெயர்ந்து கொண்டுள்ள புறநிலை அவசியத்தினை மேலும் அதிகரித்து உள்ளன. ஆதலால் அதை இங்கு மீண்டும் மேற்கோளாகக் குறித்து வைப்போம்:

"எமது சகாப்தத்தில் கலைக்குரிய உயர்ந்த பணி புரட்சியைத் தயார் செய்ய நடை முறையிலும், நனவான விதத்திலும் பங்குகொள்வதேயாகும். எனினும் கலைஞன் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் சமூக உள்ளடக்கத்தினை உணர்வுபூர்வமாக உள்ளீர்த்துக் கொள்ளாவிடின் அதன் அர்த்தத்தையும், நாடகப் பாணியிலான உயிர்த்துடிப்பையும் தனது நனவுத் தொகுதியினுள் இரசித்துக் கொள்ளாது போனால் அங்ஙனம் சிருஷ்டிக்கப்பட்ட நமது உள்வாரி உலகத்தினை தமது கலையினுள் சுதந்திரமான முறையில் உயிர்வாழ வைக்க முயற்சிக்காது போனால் அவனால் அப் போராட்டத்துக்கு சேவை செய்யவே முடியாது."

படிப்பகம்

www.padippakam.com



சிறீலங்கா இராணுவம் முன்னேறத் தொடங்கியதும் சிங்களக் கிராமங்களில் நுழைந்து தமிழீழ விடுதலைப்புலிகள் அப்பாவி மக்களை பெண்கள், குழந்தைகள் உட்பட வெட்டியும், கொத்தியும் கொன்று குவித்தனர். அதே வேளையில் புலிகளால் கைது செய்யப்பட்ட ஆறு இராணுவ வீரர்களை "நல்லெண்ண நடவடிக்கையாக" பருத்தித்துறையில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலை செய்தனர்.



கொழும்புநகரம் குண்டுவெடிப்பிற்கு பின்

தொழிலாளர்வர்க்கத்தின் எதிர்ப்புக்களை நசுக்குவதேயாகும்.

தமிழ்மக்கள் மீதான இந்த இனவாத யுத்தத்துடன் ஒன்றிணைந்து தீவு முழுமைக்குமான ஒரு சர்வாதிகார ஆட்சியை உருவாக்கும் முதலாளித்துவத்தின் மூலோபாயத் தேவை முன்னிற்கின்றது. பலதேசிய நிறுவனங்களினதும், உள்ளூர் முதலாளிகளினதும் லாபங்களை அதிகரிப்பதற்கான வகையில் தீவின் பொருளாதாரக் கட்டுமானத்தை மாற்றியமைக்க வேண்டியது முதலாளித்துவத்தின் உடனடித் தேவையாகவிருக்கின்றது. இது மிச்சம், மீதமாகவிருக்கும் அரச நிறுவனங்களை தனியார்மயமாக்குவதாலும், தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் அனைத்து உரிமைகளின் மீது தாக்குதல் நடாத்துவதாலும் விரைவுபடுத்தப்படவுள்ளது. இதற்கெதிராக திரண்டெழும் தொழிலாள, விவசாயிகளினதும், குட்டிமுதலாளித்துவப் பிரிவினரதும் எதிர்ப்புக்களை சமாளிப்பதற்கான ஒரு இராணுவ சர்வாதிகாரத்தினை உருவாக்குவதற்கான ஒரு கருவியாகவே முக்கள்முன்னணி அரசாங்கம் செயல்படுகின்றது. பாதுகாப்பு பிரதிஅமைச்சர் ரத்வத்தையின் இராணுவவாதம் மக்கள்முன்னணி அரசாங்கத்தினுள் முன்னணியில் நிற்பதும், பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடுவதற்கான முழு அதிகாரத்தையும் இராணுவம் தனது கைகளுக்குள் எடுத்துக்கொண்டதும் இந்த வளர்ச்சிப் போக்கின் ஒரு பகுதியாகும்.

பத்தாயிரம் பேரினை இராணுவத்திற்கு புதிதாக அணிதிரட்டுவதற்கான அறிவிப்பினை இந்த யுத்தத்தின் மத்தியில் அரசாங்கம் அறிவித்துள்ள அதேவேளையில் முதலாளிவர்க்கத்தின் ஒரு பிரிவினர் கட்டாய இராணுவ சேவையின் "அவசியம்"பற்றி பகிரங்கமாக கலந்துரையாடுகின்றனர்.

*1995*ம் ஆண்டில் அரசாங்கம் தமிழ்மக்கள் மீதான யுத்தத்திற்கு *29* பில்லியன் ரூபாவினை செலவழித்தது. சமீபத்திய *1996*ம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தில் *33,9* பில்லியன் ரூபாவினை பாதுகாப்புச் செலவிற்காக ஒதுக்கியுள்ளது. பிரதிநிதி அமைச்சர் பீரிஸ் "இது ஒரு மதிப்பீடே தவிர இதனைப்பற்றி எவரும் திட்டவட்டமாக கூறமுடியாது" என அறிவித்துள்ளார்.

ஐப்பசி மாதத்தில் தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் தலைவர்களின் சேவைகளைப் பாராட்டுவதற்காக நடாத்தப்பட்ட ஒரு கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க இனவாதப் போரினை வெல்வதற்கு 500 பில்லியன் ரூபாக்கள் பணமும், ஒரு மில்லியன் இளைஞர்களைக் கொண்ட இராணுவமும் தேவையென வெளிப்படுத்தியிருந்தார். இது மக்கள்முன்னணி அரசாங்கம் செய்துவரும் இராணுவச் சர்வாதிகாரத்திற்காக தயாரிப்புகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றது.

இந்த நிலைமைகளில் சென்ற கிழமை யாழ்குடாநாட்டின் அரசியல், பொருளாதார கட்டுமானங்களை நிர்மாணிப்பதற்கு பல லட்சம் ரூபாய்களை அரசாங்கம் செலவு செய்யத் தயாராயிருக்கின்றது என்ற கதையினை ஜனாதிபதி கட்டவிழ்த்துள்ளார். யாழ்ப்பாணக் குடாநாட்டினை இராணுவச் சப்பாத்துக்குள் நசுக்கிக் கொண்டு தங்கள் வதிவிடங்களிலிருந்து வெளியேறிய அகதிகளை திரும்பிச் செல்லும்படியும் இவர் கூறியுள்ளார். இந்த அறிவிப்புக்களையிட்டு எச்சரிக்கையாயிருக்குமாறு தமிழ்மக்களுக்கு புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகம் வேண்டுகோள் விடுகின்றது. கடந்த பொதுத்தேர்தலில் சமாதானத்தினை பிரசங்கம் செய்தபடி பதவிக்குவந்த இந்த அரசாங்கம் இன்றைய பேரழிவுகளுக்கு காரணமாயிருப்பதோடு தற்போதைய இந்த அறிவிப்புக்களின் பின்னணியில் இனவாதப் போரினை தொடரும் திட்டத்தினை மும்மரப்படுத்துகின்றது.

யாழ்ப்பாணத்தினை அரசபடைகள் கைப்பற்றிய போதிலும் இந்த யுத்தத்தின் அரசியல் நோக்கம் ஒரு தோல்வியிலேயே முடிந்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியலின் மேல் தமிழ்மக்கள் மத்தியில் வளர்ச்சியடைந்துவரும் எதிர்ப்பினை சாதகமாக்கி "புலி எதிர்ப்பு போர்" என்று தொடக்கப்பட்ட இந்த யுத்தமானது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஒரு இராணுவத் தோல்வியை ஏற்படுத்துவதன் மூலம் அரச நிர்வாக அமைப்பு முறைகளை மீண்டும் தமிழ்ப் பிரதேசங்களில் உருவாக்கும் அரசியல் நோக்கத்தினைக் கொண்டிருந்தது. தமிழ்மக்கள் முழுமையாக யாழ்குடாநாட்டிலிருந்து வெளியேறியது இந்தத் திட்டத்தினை நிறைவேற்றமுடியாத நெருக்கடியினை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்மக்களின் இன்றைய துயரம் நிறைந்த அவல நிலைமைகளிலும் இந்த விளைவுகளுக்கான காரணம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியவாத வேலைத்திட்டத்தின் அரசியல் வங்குரோத்து என்பதனை வலியுறுத்தியே தீரவேண்டும். மக்கள்முன்னணி அரசாங்கத்தின் படைகள் யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றுவதற்கான சாதகமான நிலைமைகளை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியலே உருவாக்கிக் கொடுத்தது.

மக்கள்முன்னணி அரசாங்கத்தின் "சமாதானம்" என்ற அரசியல் சதியினை இறுக்கிப் பிடித்துக்கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த அரசாங்கத்தினால் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்ற மாயையினை தமிழ்மக்களிடையே ஏற்படுத்துவதற்கு முன்நின்றனர். "பிரதமர் சந்திரிக்கா மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகளையும், அவை காட்டும் முரண்பாட்டுத் தீர்வுகளையும் கல்வியால் கற்றுத் தேறியவர் என்ற முறையில் புதிய முயற்சிகளைப் பரீட்சிக்கின்றார். அதற்கு சமாதானத்தை விரும்பும் விடுதலைப்புலிகளும் களம் அமைத்துக் கொடுக்கின்றனர்."*(களத்தில், 28.10.1994 பக்கம் 3)* என்றபடி சமாதானப் பேச்சுவார்த்தைக்குள் தமிழீழ விடுதலைப்புலிகள் நுழைந்தனர்.

பேச்சுவார்த்தைப் பாசாங்கின் மூலம் நேரத்தை சம்பாதித்துக் கொண்ட மக்கள் முன்னணி அரசாங்கம் இந்திய முதலாளித்தவத்தினதும் சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளினதும் அரசியல் இராணுவ ஆதரவினால் தற்போதைய யுத்தத்திற்கான தயாரிப்பினை மேற்கொண்டது.

யுத்தம் தொடங்கியதும் தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களை ஆயுதபாணியாகி இராணுவத்தை எதிர்க்கும்படி வேண்டுகோள் விடுத்தனர். இந்தக் கோரிக்கையை தமிழ்மக்கள் நிராகரித்து அகதிகளாக வெளியேறத் தொடங்கியதுடன் புலிகளும் பலவந்தமாக மக்களை வெளியேற்றுவதற்கு முன்நின்றனர்.

இது அரசின் அரசியல் திட்டங்களுக்கு மேல் தமிழ்மக்களுக்கிருந்த வெறுப்பினை மட்டும் வெளிப்படுத்தவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியலின் மேல் மக்கள் முழுமையாக நம்பிக்கையிழந்ததனையும் தெளிவுபடுத்துகின்றது.

சிறீலங்கா இராணுவம் முன்னேறத் தொடங்கியதும் சிங்களக் கிராமங்களில் நுழைந்து தமிழீழ விடுதலைப்புலிகள் அப்பாவி மக்களை பெண்கள், குழந்தைகள் உட்பட வெட்டியும், கொத்தியும் கொன்று குவித்தனர். அதே வேளையில் புலிகளால் கைது செய்யப்பட்ட ஆறு இராணுவ வீரர்களை "நல்லெண்ண நடவடிக்கையாக" பருத்தித்துறையில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலை செய்தனர்.

இந்த இனவெறிக்கொலைகள் புலிகளின் பிரிவினை வேலைத்திட்டத்தின் மேல் எந்தவித நம்பிக்கையும் தமிழ்மக்கள் மத்தியில் புதிதாக விதைத்து விட முடியவில்லை மாறாக தமிழ், சிங்கள ஒடுக்கப்படும் மக்களின் ஐக்கியத்தின் தீர்மானகரமான எதிரிகள் புலிகள் என்பதையே அம்பலப்படுத்தியது

இதுவரை ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் உயிர்த் தியாகம் செய்து சிங்கள இராணுவத்திற்கெதிரான போரினை மேற்கொண்டது எந்தவிதத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையின் பிரிவினைவாத பிற்போக்கு வேலைத்திட்டத்தினை நியாயப்படுத்தவில்லை. இந்த முதலாளித்துவ வேலைத்திட்டம் ஆயுதப் போராட்டத்தின் மூலம் சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுப்பதின் மூலம் தமிழ் முதலாளித்துவத்திற்கு சலுகைகள் பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதனையே தற்போதைய இராணுவப் பின்னடைவுகளின் மத்தியிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கார்த்திகை 27ம் திகதி மாவீரர் தினப் பேச்சில் "அவர்கள் கொடியை ஏற்றலாம், வெடிகளைக் கொளுத்தலாம் ஆனால் நாங்கள் ஒன்றை மட்டும் வலியுறுத்துகின்றோம், சிறீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் வரை சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும்." (Nick Macfe Reuters 28.11.95) என்றார்.

இந்தப் பேச்சு புலிகள் தற்போது அகதிகள் முகாம்களில் இளைஞர்களைத் திரட்டுவது அரசின் மீது புதிய இராணுவத் தாக்குதல்கள் மூலம் அழுத்தம் கொடுத்து புதிய நிபந்தனைகளின் பேரில் பேச்சுவார்த்தை ஒன்றிற்கு தயார் செய்வதையே வெளிக்காட்டுகின்றது.

இதேவேளையில் "புலிஎதிர்ப்பு" வேலைத்திட்டத்தின் கீழ் சிறீலங்கா இராணுவ வாகனங்களில் ஏறிய PLOT, EPDP, TELO குழுவினர் தமிழ்மக்களின் மீதான இந்த இனவாத யுத்தத்தில் அரசின் நேரடிப் பங்காளர்களாவார்கள். இவர்களில் பாராளுமன்ற அங்கத்தவர்கள் சமீபத்திய வரவு, செலவுத் திட்டத்தில் இனவாத யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி உட்பட்ட ஏனைய தொழிலாளர்வர்க்கத்தின் மீதான தாக்குதல்கள் அனைத்துக்கும் ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர்.

இலங்கையில் முதலாளி வர்க்கத்தின் இனவாத யுத்தத்தினை நிறுத்தி, சமாதானத்தை ஏற்படுத்துவது எப்படி? தமிழ் முதலாளித்துவ பிரிவினைவாத பிடியை உடைப்பது எப்படி? சிங்களம், தமிழ் பேசும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே ஐக்கியத்தினை உறுதி செய்வது எப்படி? இவை இன்று தோன்றியுள்ளதும், உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டியதுமான வரலாற்றுப் பிரச்சினைகளாகும்.

நெருக்கடி உக்கிரம் அடையும் ஒவ்வொரு தருணத்திலும் முதலாளித்துவ அமைப்பை தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களிலிருந்து காக்கும் பொருட்டு இம் மக்களை இனவாதக் கோட்டின் ஊடாக கூறுபோடும் ஆயுதமாக முதலாளிவர்க்கம் சிங்கள இனவாதம் என்ற நச்சு ஆயுதத்தினை

16ம் பக்கம் பார்க்க

இதுவரை ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் உயிர்த் தியாகம் செய்து சிங்கள இராணுவத்திற்கெதிரான போரினை மேற்கொண்டது எந்தவிதத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையின் பிரிவினைவாத பிற்போக்கு வேலைத்திட்டத்தினை நியாயப்படுத்தவில்லை. இந்த முதலாளித்துவ வேலைத்திட்டமானது ஆயுதப் போராட்டத்தினால் சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுப்பதால் தமிழ் முதலாளித்துவத்திற்கு சலுகைகள் பெற்றுக்கொள்வதை

படிப்பகம்

www.padippakam.com



**கிராமப்புற ஏழை இளைஞர்களின் "இரட்சகர்களாக" ஜே.வி.பி. போன்ற குட்டிமுதலாளித்துவ இயக்கங்கள் தோன்றி அவர்களைப் பேரழிவினுள் தள்ளியதும், தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் "இரட்சகர்களாக" விடுதலைப்புலிகள் போன்ற தமிழ் முதலாளித்துவ தேசியவாத அமைப்புக்கள் பிரிவினைவாத யுத்தத்துக்கு வழிவகுத்ததும் சமசமாஜக்கட்சியின் 1964ன் மாபெரும் காட்டிக்கொடுப்பின் ஒரு பெறுபேறேயாகும்.**

படுத்தியது. ஆழமான நெருக்கடி நிலைமையுள்
ல் ஆட்சிப் பீடம் ஏறிய ஜயவர்தனவின் யூஎன்பி.
ாங்கம் ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டல்களுக்கு
பினைத் திறக்கும் விதத்தில் பொதுமக்கள் மீது
த தாக்குதலைத் தொடுத்தது. இது 1983ல்
் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான மாபெரும்
ட்படுகொலை யுத்தமாக உயர்த்தப்பட்டது.
று 12 ஆண்டுகளாக இந்த யுத்தத்தினை மக்கள்
பேரழிவினை சுமத்தும் பொருட்டு
லாளிவர்க்கம் பயன்படுத்திக் கொண்டுள்ளது.
ள் மத்தியில் வளர்ச்சிகண்ட யுத்த எதிர்ப்பினை
ன்டி சமாதானத்தை சிருஷ்டிக்கும் பேரில்
சிக்கு வந்த பொதுஜனமுன்னணி அரசாங்கம்
த்தினை முன்னொருபோதும் இல்லாத
விற்கு உயர்த்தியுள்ளதோடு மட்டுமன்றி
திபத்தியவாதிகளின் தலையீட்டுக்கான
லமைகளையும் சிருஷ்டித்து வருகின்றது.
று இத்தகைய ஒரு பேரழிவினை
டுத்துவதற்கான வாய்ப்பு அதன் சக்தியினாலோ
லது தற்செயலாகவோ ஏற்பட்டது அன்று. இது
லாளிவர்க்கத்தின் பேரழிவு வேலைத்திட்டத்திற்கு
க தொடுக்கப்பட்ட பாட்டாளிவர்க்கப் போராட்டம்
கேவலமான முறையில் காட்டிக்
டுக்கப்பட்டதன் பெறுபேறாகவே ஏற்பட்டது.
சிங்கள இனவாத தீவைப்புக்களுக்கும்
வாறே தமிழ் இனவாதத்திற்கும் எதிராக போராடிய
ழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள்
லாளித்துவத்தை தூக்கி வீசும் இலக்கினைச்
அணிதிரட்டும் ட்ரொக்சிச அனைத்துலகவாத
ாட்டம் 1940 பதுகள் தொடக்கம் இலங்கையில்
ந்து வந்தது. முதலாளித்துவ வர்க்க ஆட்சிக்கு
படியாக அடிபணிந்து போன லங்கா சமசமாஜக்
1964ல் இப் போராட்டத்தினை முழுமனே
டிக்கொடுத்தது. இதனால் முதலாளித்துவ
ுதல்களுக்கு எதிராக தொழிலாளர்வர்க்கம் பக்கம்
கப்பட்டு இருந்த தமிழ் ஒடுக்கப்படும் மக்கள்,
மப்புற விவசாயிகள் நடுத்தெருவில்
ாப்பட்டனர். முதலாளிவர்க்கம் தன்னிச்சையான
றயில் இனவாதத்தினை தூண்டவும்
ம்வரை அதை இட்டுச் செல்லவும்,
ழிலாளர்வர்க்க உரிமைகளைத் தாக்கவும்
மாபெரும் காட்டிக்கொடுப்பே இடமளித்தது.
மப்புற ஏழை இளைஞர்களின் "இரட்சகர்களாக"
வி.பி. போன்ற குட்டிமுதலாளித்துவ இயக்கங்கள்
ன்றி அவர்களைப் பேரழிவினுள் தள்ளியதும்,
ஒடுக்கப்படும் மக்களின் "இரட்சகர்களாக"
தலைப்புலிகள் போன்ற தமிழ் முதலாளித்துவ
யவாத அமைப்புக்கள் பிரிவினைவாத
த்துக்கு வழிவகுத்ததும் சமசமாஜக்கட்சியின்
ன் மாபெரும் காட்டிக்கொடுப்பின் ஒரு
பேறேயாகும்.
முதலாளித்துவ கையாட்களான ஸ்டாலினிச
யூனிஸ்ட் கட்சியினர் இத்தகைய
டிக்கொடுப்புக்காக பிராத்தனை செய்தவர்களாவர்.
று சமசமாஜக்கட்சியும், மற்றும்
ர்ப்பவாதிகளும் இனவாத யுத்தத்தையும்
லாளர் -ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான
ுதலையும் நடைமுறைக்கிடும் அலுகோசு
மைப்புக்களாக மாறியுள்ளன.இன்று
ழிலாளர்வர்க்கம் திரும்பவும் கடந்த
னத்துலகவாத பாரம்பரியங்களை புனரமைப்புச்
து சிங்கள-தமிழ் ஒடுக்கப்படும் மக்களை
மச்சூழ அணிதிரட்டி ஏகாதிபத்திய சார்பு
லாளித்துவ ஆட்சியை தூக்கி வீசும்
தரப்புரட்சி வேலைத்திட்டத்தின்
ப்படையிலேயே இப் பேரழிவில் இருந்து

தலையெடுக்க முடியும். மிக மோசமான நெருக்கடியினதும் உக்கிரமான ஆபத்துக்களதும் மத்தியில் உடனடியாக இப் போராட்டத்தில் இறங்கவேண்டும். சகல வகையிலான இனவாதப் பிற்போக்கு கோஷங்களையும் ஊடறுத்துக்கொண்டு இப்போராட்டத்தை ஒழுங்கு செய்யவேண்டும்.

இவ் யுத்தம் எமது யுத்தமல்ல, இது முதலாளிவர்க்கத்தின் படுகேவலமான தேவைகளின் பேரில் தொடுக்கப்பட்ட யுத்தம். இந்த யுத்தத்துக்கு ஒரு சதமோ, ஒரு ஆளோ, ஒரு கருவியோ வழங்கக் கூடாது. கட்டாய இராணுவ சேவைக்கு ஆள்திரட்டுவதை நாம் எதிர்ப்போம்! தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் இந்தப்பாணியில் ஒரே குரலில் குரல் எழுப்ப வேண்டும்.

வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவத்தை அகற்று! தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயகஉரிமைகளை ஊர்ஜிதம் செய்!

விடுதலைப்புலிகள் உட்பட தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களின் பிரிவினைவாதத்தை நிராகரி!

தொழிலாளர்வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களதும் தொழில், வாழ்க்கைத்தரம், சேமநலன், உதவிமானியம் வெட்டப்படுவதற்கு எதிராக தனியார் மயத்தினால் தொடுக்கப்படும் தாக்குதலுக்கு எதிராக ஜனநாயக உரிமைகளை காக்கும் வர்க்கப்போராட்டத்தை அபிவிருத்தி செய்!

செய்தித்தணிக்கை, அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் உட்பட்ட ஒடக்குமுறைச் சட்டங்களை நீக்கு!

அரசியலமைப்பு நிர்ணய சபையைக் கூட்டு!

இக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடும் பொருட்டு ஒடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகளை கொண்ட தொழிலாளர் நடவடிக்கை குழுக்களை அமைப்பதும், அரசபடையணிகள், பாசிஸ்டுக்கள், கொலைகாரக் கும்பல்களிலிருந்து தப்பி பாதுகாப்புப் பெறவும், ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு கமிட்டிகளை அமைப்பதும் அத்தியாவசியமாகும். சந்தர்ப்பவாத சகல பழைய அமைப்புகளும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கும் மாட்டப்பட்டுள்ள கைவிலங்குகள் ஆகும்.

இந்த உரிமைகளை ஏகாதிபத்தியச்சார்பு முதலாளித்துவ வர்க்க ஆட்சியினுள் அடைந்துவிட முடியாது. பொதுமக்களுக்குள்ள ஒரே மாற்றுவழி, முதலாளித்துவத்தை தூக்கிவீசி சிறீலங்கா-ஈழம் ஐக்கியசோசலிசக் குடியரசு ஒன்றியத்தை கட்டியெழுப்புவதே. அனைத்துலக சோசலிசத்துக்கான போராட்டத்தின் ஒரு பாகமாக இப் போராட்டம் தொடுக்கப்படவேண்டும்.

தொழிலாளர்வர்க்கத்தின் சுயாதீன புரட்சிகர வேலைத்திட்டம் இதுவே. இன்று இப் போராட்டத்தினை முன்னெடுக்க அரசியல் ரீதியில் நனவான ஒரு இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும். அதனைத் தொழிலாளர் வர்க்கப் புரட்சிக்கட்சியை உத்தரவாதம் செய்வதன் மூலமே சாதிக்க முடியும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினை அந்தப் புரட்சிக்கட்சியாகப் பரிணாமம் செய்ய உடனடியாக அதில் சேரும்படியும் அப்போராட்டத்துக்கு தோள்கொடுக்கும்படியும் வேண்டுகின்றோம்.

# புரட்சிக்கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவர்கள் மீது அரச தாக்குதல்கள்



பண்டாரவளையில் கட்சி அங்கத்துவர்களின் பிரசாரம்

தமிழ்மக்கள் மீதான இனவாதயுத்தத்தினை முடுக்கிவிட்ட அதேநேரத்தில் புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் பன்னிரெண்டு அங்கத்தவர்கள் கார்த்திகை 13ம் திகதி பண்டாரவளையில் பொலீசினால் கைதுசெய்யப்பட்டனர். ஒரு ஆடைகள் தயாரிக்கும் நிறுவனம் மூடப்பட்டதினால் வேலையிழந்த 30 பெண்தொழிலாளருக்கு ஆதரவாக அவர்களுடன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே எமது அங்கத்தவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த மறியல் போராட்டத்தின் சுலோகங்கள் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும்படி வேண்டியதுடன் தமிழ்மக்களுக்கு எதிராக அரசாங்கத்தினது போரினை கண்டித்து வடக்கு, கிழக்கிலிருந்து அரச படைகளை வாபஸ் வாங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

மக்கள்முன்னணி அரசாங்கம் எமது அங்கத்தவர்கள் மேல் இலக்கு வைத்ததானது வடக்கில் இனவாத யுத்தம், தெற்கில் தொழிலாளர்வர்க்கத்தின் மேலான அரச தாக்குதல்களின் உக்கிரமாக்கல் என எச்சரிக்கை செய்கின்றது.

பண்டாரவளையில் புரட்சிக்கம்யூனிஸ்ட கழகம் இந்த ஆடைத் தொழிற்சாலையில் வேலையிடங்களைப் பாதுகாப்பதற்காக ஒரு நடவடிக்கைக் குழுவை உருவாக்கியது. இந்தக் குழுவானது இந்தப் பகுதியிலுள்ள தொழிலாளர்களிடம் ஆதரவினைப் பெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்து கார்த்திகை 8ம் திகதி இந்த மூடப்பட்ட தொழிற்சாலையை பலநூறு தொழிலாளர்களுடன் சேர்ந்து உள்ளிருப்பு வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தது.

தொழிற்சாலை மூடப்படும் என்று அறிவித்து ஒரு மாதம் மட்டும் செயலற்றிருந்த தொழிற்சங்கத் தலைவர்கள் இந்த வேலைநிறுத்தத்தை அறிந்ததும், அதனைக் குழப்பும் நோக்கத்தில் தொழிற்சாலைக்கு வந்திருந்தனர். இவர்கள் ஒரு சில தொழிலாளர்களுடன் இணைந்து நிர்வாகத்தினரை தொழிற்சாலையின் அறையொன்றினுள் அடைத்ததின் மூலம் பொலிசாரை வரவழைக்கும் ஆத்திரமூட்டலை மேற்கொண்டனர். பொலீசின் முன்னணியில் தொழிலாளலர்கள் தலைவர்கள் என தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு சரணடைந்ததுடன் பொலீசார் ஏனைய தொழிலாளர்களை தொழிற்சாலையிலிருந்து விரட்டுவதற்கும் ஆதரவழித்து இந்த உள்ளிருப்பு வேலைநிறுத்தத்தை காட்டிக்கொடுத்தனர்.

புரட்சிக்கம்யூனிஸ்ட்கழக அங்கத்தவர்கள் இந்த உள்ளிருப்பு வேலைநிறுத்தம் கலைக்கப்பட்ட பின்னரும் தொழிலாளர்களுடன் இணைந்து வேலைசெய்தனர். இவர்கள் உருவாக்கிய நடவடிக்கைக் குழுவானது கார்த்திகை 13ம் திகதி பண்டாரவளை நகரமண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தை ஒழுங்கு செய்ததுடன் நகர மத்தியில் ஒரு மறியல் போராட்டத்தையும் ஏற்படுத்தியது. எமது அங்கத்தவர்களுடன் ஐம்பதிற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டனர். மக்கள்முன்னணி அரசாங்கத்தின் உள்ளூர் குண்டர்கள் பொலீசாரை வரவழைத்து மறியல் செய்வோரை கைதுசெய்யும்படி உத்தரவிட்டார். இருபது பெண் தொழிலாளர்களும், பன்னிரெண்டு கட்சி அங்கத்தவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்ததற்கான குற்றச்சாட்டாக தமிழ்ப் பிரிவினைவாத இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக மறியல் செய்துள்ளார்கள் என பொலீசாரால் முன்வைக்கப்பட்டது. புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் புலிகளினது முதலாளித்துவ பிரிவினைவாத வேலைத்திட்டத்துடன் முழுமையாக உடன்பாடில்லாதது என்று தெரிந்தும் தமிழ்மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினை எதிர்த்த காரணத்திற்காகவே எமது அங்கத்தவர்கள் கைதுசெய்யப்பட்டனர். புரட்சிக்கம்யூனிஸ்ட்கட்சி தலைவர்களின் தலையீட்டினால் விடுதலைசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் மேல், இந்தக் குற்றச்சாட்டுக்களுக்காக நீதிமன்றத்தில் பொலீஸ் வழக்குத் தொடர முடிவெடுத்திருக்கின்றது.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர் கட்டுநாயக்கா சுதந்திரவர்த்தக வலயத்தில் இனவாதப் போருக்கு எதிரான பிரச்சாரங்களைச் செய்து பத்திரிகை, பிரசுரங்களை விற்பதில் ஈடுபட்ட புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவர்களில் இருவர் ஊர்காவல் படையினரால் தாக்கப்பட்டார்.

இந்த இருவரையும் பிடித்து வைத்திருந்த ஊர்காவல் படையினர் கட்சியின் ஏனைய அங்கத்தவர்கள் சம்பவம் நடந்த இடத்தில் திரண்ட மக்கள் மத்தியில் செய்த பிரச்சாரத்தினால் விடுதலை செய்தனர்.

இந்த ஊர்காவல்படை ஐப்பசி மாதத்தில் தமிழ்மக்களுக்கு மேல் இனவாத யுத்தத்தினை கட்டவிழ்த்ததின் ஒரு பகுதியாக அரசாங்கத்தினால் பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுவது என்ற மூடுதிரையின் பின்னால் உருவாக்கப்பட்டதாகும். இதனது நோக்கம் தொழிலாளர், விவசாயிகளினது போக்குக்கெதிரான எதிர்ப்பினை நசுக்குவதற்கு அரச படைகளுக்கு உதவி செய்வதாகும்.

படிப்பகம்